T.K. Sivagnanam
Retired Apothecary
Station Road
KONDAVIL (W.S.)

T. Subrahmanyam
Tellippalai

June 11, 1937

Dr. T. K. SIVAGNANAM
L. A. M. P. (Cey)
Kondavil West
KONDAVIL

Lion S. Sriganeshan
BHARANE PHARMACY
456, HOSPITAL ROAD.
JAFFNA
DIAL. 7386

யாழ்ப்பாணத்து வைத்திய நூல் வெளியீடு—5.

உ
சிவமயம்

# பரராசசேகரம்

## மூன்றும்பாகம்

## சுரம், சன்னி, வலி, விக்கல், சத்தி ரோகநிதானங்கள்

பதிப்பாசிரியர்,
யாழ்ப்பாணத்து ஏழாலை,
சுதேசவைத்தியர்
ஐ. பொன்னையா.

திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை,
ஏழாலை.

ஆங்கிரசஹு ஆவணிமீ
1932.

Dr. T. B. SIVAGNANAM
Kondavil West
KONDAVIL

உரிமை பதிவுசெய்யப்பெற்றது.

சிவமயம்

# பரராசசேகரம்.

## நான்காவது
## சுரரோகநிதானம்.

திருவுறு கைலை யென்னுஞ் சிலம்பினில் வாழெங் கோமான்
உருவுறு முயிர்கட் காக வோதிய வாயுள் வேதத்
தருவுறு வினையினாலே யாகிய நோய்க டம்முட்
சுரமுறை யுரைப்ப வானை முகன்கழ றுணைக்கொள் வோமே. ௧

என்றார் தோஷ முக்குணமு மிதற்குப் பயிலு நடைபேதம்
சென்றார் சேருஞ் சாவிதியுஞ் செல்லுஞ் சீருஞ் சித்திமுத்தி
நின்றா ருரைத்த பத்தியமு நேரு மிரட்சை முறையனைத்தும்
குன்றா துரைத்த முறையறிந்து கொள்வார் பெரியோர் குணத்தாலே

### சுரம்வரும் ஏது.

பண்டுள மலத்தி னாலும் பழகிய சீதத் தாலும்
உண்டியிற் பொல்லாங் கானு மொன்றொடாடி வருத்தத் தாலும்
கண்டுயி லாமை யாலுங் கடுகிய நடையி னாலும்
மிண்டிய சுவையி னாலும் வெதுப்புவந் தணுகு மன்றே. ௩

கடுவெயின் மழைக ளாலுங் கதறிய குரலி னாலும்
விடமது படிக லாலும் வெருவிய வேகத் தாலும்
முடிமிசை யெண்ணெய் தேய்த்து முழுகியும் போகா தாலும்
தடியடி படுகை யாலும் வெதுப்பது சாருங் காணே. ௪

ஈங்கெழு கோபத் தாலு மிளவெயிற் காய்த லாலும்
தாங்கருஞ் சுமையி னாலுஞ் சருகிலை யூற லாலும்
ஓங்கிய பசியி னாலு முண்டிமே லுண்டி யாலும்
தேங்கிய மலக்கட் டாலுந் தியவெப் பணுகு மன்றே. ௫

வாத மடாதே மேனிகெ டாதே வளர்பித்தம்
தீதுகெ டாதே சத்திய டாதே சேற்பத்தின்
கோதம டாதே யிருமல டாதே குடல்தன்னில்
சீதம டாதே வாயுவ டாதே திறமாமே. ௬

மந்தம் வாராதே சுரமும் வாராதே சுரம்வந்தால்
மந்த மறாதே சீத மறாதே மலசீதம்
உந்தி யுறாதே வாயு வுறாதே யுறுவாயுத்
தொந்த மடாதே விக்க லடாதே சொன்னோமே. ௭

சீரண மன்றிச் சுரமும் வாராதே திரிதோஷ
காரண மன்றிச் சன்னி வாராதே கபமான
நீரது வன்றிச் சோகை வாராதே நெடுமேகச்
சார்வது வன்றிச் சூலை வாராதே தவறாதே. ௮

அபத்திய மன்றித் தோஷவி கார மணுகாதே
அபத்திய மன்றி யவுடத வினை மணுகாதே
கபத்தினை யன்றிக் காச சுவாசங் கலவாதே
கபத்தினை யன்றி வேர்வை குளிர்ச்சி காணாதே. ௯

## வாதம்கோபித்தாற் குணம்.

தக்க வாதங் கோபித்தாற் சந்து குலைந்து பலநோவாய்
மிக்க மூரி தலைவலியாய் மேனி கருகி மலஞ்சிவக்கும்
தொக்க வாயு முடக்கமதாந் துவர்த்து வாயு மழற்றிவரும்
இக்க தாய மொழிமடவா யிமையாக் குளிரு நடுக்கமுமே. ௧௦

## பித்தம் கோபித்தாற் குணம்.

உரத்த பித்தங் கோபித்தா லுளமே யுழற்றிக் கொதிப்பெய்தும்
நிரைத்த மேனி மஞ்சணிக்கு நெறித்தல் வேர்த்தல் நீர்ப்பாய்தல்
விரைத்த லோடு பிதற்றியிடு மிகவே மூர்ச்சை சத்தியதாம்
புரைத்த வாயுங் கைப்பினொடு புளிப்பு மாங்கென் றோதினரே.

## சிலேற்பனம் கோபித்தாற் குணம்

தலைகூர் சிலேற்பங் கோபித்தாற் றயங்கு மனமு முளங்கலங்கும்
மிகவே குளிர்ந்து கொதிப்பெய்தி விக்கம் பலவா மடிக்கும்
முகமே கைகால் மிகவெளுத்து மூக்கு நீர்ப்பாய் காயமுமாம்
தொகுநோ யுதரம் பாரிக்குந் தூங்கு முறக்கந் துணுக்கமதாம்

## சுரத்தின் தொகை.

ஆகுமிச் சுரந்தான் வாத பித்தமை தொந்தத் தாலும்
மேவிய வெட்டெட் டாகி விரிந்திடு மென்பர் நூலோர்
வாகட மமைத்துச் சாத்திய மசாத்திய முறுகு ணங்கள்
பாகன மருந்து தானும் பகர்ந்தனர் பரிந்து காணே. கங

## அசாத்தியம் சாத்தியம்

தானமாம் வாதந் தன்னி லிருபது தழல்சேர் பித்தந்
தானதி லறுநான் காகு முறுமையாபி விருப தென்ப
பானலங் கண்ணாய் முன்னோர் பகர்ந்தது வாதந் தன்னில்
ஈனமா மெட்டு வெப்பு ளசாத்திய மென்ன லாமே. கச

என்றிடு பித்தந் தன்னி லியற்றிரு பத்து நாலில்
வென்றியாய்ப் பத்து நாலு மேவிய சேற்ப னத்தில்
ஒன்றுமோரன் பதுவுந் தானே யசாத்திய முண்மை யென்று
குன்றினில் வாழுங் கோமான் கூறிய துணர்ந்து கொள்ளே கரு

## வாதத்தில்-உ0
## அவற்றுள் சாத்தியம்-கஉ
## க-வாதசுரம்

வாத சுரத்தின் குணமுரைக்கின் மயிர்க்கூர்ச் செறிதலுடல்குளிர்
போத நடுங்குங் கைகால்கள் பொருத்துத் தோறுமுளைவாகும் [தல்
பேதமுகமு மினுமினுக்கும் பிறந்தா ளதைத்து வெளுத்திருக்கும்
ஊதை மிகுந்து மலம்வரளு முடனே நீருஞ் சிவத்திடுமே கசு

காலெல்லா முளைவு காட்டுங் கண்ணுமே நீலங் காட்டும்
மேலெல்லாம் வெளிறிக் காட்டும் விடமென வேகங் காட்டும்
நாலெல்லாந் தெறித்துக் காட்டு நொடிபடி விடிக்கு நெஞ்சு
தோலெல்லாஞ் சுருங்க வாங்குஞ் சுரமுறு வாதத் தன்மை ௧௭

குளிர்ந்து நடுங்குங் குலைப்பெய்திக் கொண்டே தாக மிகமிண்டி
நலிந்து பல்லுங் கடுத்துளைந்து நாசிட் டெறிபுங் கொட்டாவி
தளர்ந்தே யுடலுமணிக்குறங்குந் தலையும்விலாவுங் குடைகுடைந்து
வளர்ந்து வாயு மேற்கொள்ளும் வாத சுரத்தின் குணமாமே. ௧௮

## ௨-வாதபித்தசுரம்

வாத பித்த சுரமானல் வருத்துங் குணத்தை வகுத்திடுவன்
நாத மிகுத்தே யிரைச்சலுமாய் நாவுங் கண்ணு மஞ்சணிக்கும்
ஊதை மிகுத்தே விடாச்சுரமா யோங்கா ளித்துக் கண்டேங்கும்
சீத மிகுத்தே பிரமையுமாய்ச்செய்யுங்குணத்தைத்தேர்ந்தறியே

சோம்பொடு திமிரு முண்டாய்ச் சுவாசமுந் திகைப்புமுண்டாய்க்
கோம்பொடு சத்திகெட்டுக் குளிர்ந்துமெய் சிலிர்ப்பு முண்டாய்க்
காம்புறு தோளி னளே காய்வன பிதற்று முண்டாய்
மேம்பட வந்த வெப்பு வாதமேற் பித்த மாமே, ௨௦

## ௩-சீதவாதசுரம்

சீத மிகுத்த வாதசுரஞ் செய்யுங் குணத்தைச் செப்பக்கேள்
மோதி நடுக்தும் விறைவிறைக்கு மூரி நெட்டை விக்கலுமாம்
பேத மலமுஞ் சலமடைக்கும் பிதற்று மரிய வாய்வெருவும்
காதுஞ் சிரமும் வேர்வையுமா மிந்தக்குணங்கள்கண்டுகொள்ளே.

## ௪-வாதஅத்திசுரம்

அத்தியி லூதை விம்மிச் சுரமடிக் கடியே காய்ந்து
பத்தியஞ் செரியா தாகிப் பலபல தாகமுண்டாம்
சித்தமு மயக்கிக் கைகா லோய்ந்திடுந் தேய்ந்து காட்டும்
உற்றவிக் குணங்கள் வாத வத்தியிற் சுரமென் றோதே. ௨௨

## ௫-வாதமாசீதசுரம்

தாகமு மோக முண்டாய் மலமொடு சலமுந் தங்கித்
தோகையே விறைப்புத் தோன்றி யிளைப்பொடு தூரப்பு மாகிப்
போகுற வெழுந்து வீழுஞ் சிரத்திடி துடியே போலாம்
வேகமா சீத வாத சுரமென விளம்பும் வேதம். ௨௩

## ௬ வாதகணசுரம்.

மீறிடுஞ் சுரமென் மேனு நீரொடு மலமுஞ் சிக்கும்
கூறிடு நாக்குத் தொண்டை குதங்களும் விரிந்து புண்ணாய்
வேறுநீர்த் தாகந் தாபம் வெப்புறு கழிச்ச லுண்டாம்
கூறிய குணங்கள் வாத கணசுர மென்று கொள்ளே. ௨௪

## ௭ நாளுனை மாறற்சுரம்.

வாதத்திற் சீதஞ் சேர்ந்து குளிர்ந்திடுஞ் சுரமு மாகித்
தாதுற்ற வுடம்பு நொந்து சந்துகா லுடலு ளைந்து
பேதத்தா விருமிச் சீறி யுவாந்தியும் பிரமை யாகும்
ஓதுற்ற நாலு நாளை மாறலின் றுரைக்க லாமே. ௨௫

## ௮ மாந்தசுரம்

பொருமியே கழிச்சலுண்டா மலமது புளித்து நாறும்
உருகவே சுரமென் மேனு முவாந்திபு மூச்சு முண்டாய்ப்
பெருகவே தாகந் தாப மயக்கமும் பிரமையாகும்
முருகவிழ் குழலாய் மாந்த சுரமென மொழிந்தி டாயே ௨௬

## ௯ வாதமாந்தகணசுரம்

அக்கினி மந்த மாகி மலமொடு சலம டைக்கும்
விக்கலு முழலை வாந்தி யுடன்சுரம் விடாமற் காயும்
புக்கிய முகங்க னக்கும் வயிறது பொருமிக் காட்டும்
இக்குணம் வாத மாந்த கணசுர மென்று செப்பே ௨௭

## ௧௦ வாத அதிசாரசுரம்

பொருமலு மிளைப்பு மாகி யேப்பமும் புளித்து நாறும்
எரிவுறு சுரமுங் காயு மிருகைகால் குளிர்ந்து காட்டும்
பருகிடுந் தண்ணீர் வாங்கும் வெளுத்திடு முகமும் பாண்டம்
சுரமதி சார மென்று சொல்லுவர் முறையு ணர்ந்தோர் ௨௮

## ௧௧ வாத அசிரணசுரம்

பசியின்றி மந்தமாகு முதரமும் பலகால் விம்மும்
வசம்றக் கனன்று காயு மந்தமும் பற்றி நிற்கும்
தசையினை யுருக்கு மூதை தயங்கிடு மிக்கு ணங்கள்
அசிரண சுரமா மென்றே யறைந்தன ராயுள் வேதர் ௨௯

## ௧௨ வாதஉதிரிச்சுரம்

உடம்பது மிகவும் வீங்கு மிடறடைத் தூதை விம்மும்
விடம்படு சுரமுங் காயும் விசிறிடுங் கானல் போல
முடங்கிடும் பொருத்துக் கட்டு மூர்ச்சையோ டிரத்தங் காலும்
திடம்படு முதிரி வாத சுரமெனச் செப்பினரே ௩௦

---

## அசாத்தியம் ௮

## ௧ வாதசிலேற்பனசுரம்

ஊதையுங் கபமும் பொங்கி யுவாந்தியுண் மூச்சு முண்டாய்ப்
பாதமுங் கரமும் வீங்கி யிருமலோ டிளைப்பும் பற்றி
நாதமு மடைத்துக் காய்ந்து நடுக்கமுஞ் சுரமு மாறு
வாதைசெய் வாதசேற்ப சுரமென வகுக்க லாமே ௩௧

## ௨ வாதத்திற் சன்னிபாதசுரம்

சிரமு மிடிக்கும் பற்கடிக்குஞ் சீறு மிருமு முவாந்திக்கும்
கரமுங் காலு மெடுத்தடிக்குங் கண்ணு முகமு மினுமினுக்கும்
உரமுந் துடிக்கு நாவரளு மோயாச் சுரமும் பிரமையுமாம்
சரீர நடுக்குந் தளர்ச்சியுமாஞ் சன்னி பாத சுரமிதுவே. ௩௨

## ௩. பூதசுரம்

பூதசுரத்தின் குணங்களாய் புலம்புங் கோபித் தேபேசும்
சிதத் துடனே சுரங்காயுஞ் சிறு முசமு முடல்கனக்கும்
பேதப்படவே வாதையுமாய்ப் பெருமூச் சாதல் தலைநடுக்கல்
ஊதை யிருந்து சிரமிடிக்கு முணர்வுமின்றி மயங்கிடுமே ௰௩

## ௪ பிரேதசுரம்

பிரேத சுரத்தின் குணமதனைப் பேசக் கேளும் பெய்வளையே
சிறிச் சுரமும் வயிறழியுஞ் சிரமு மிடிக்கு நடுக்கமுமாம்
ஊறு முடம்பு கனப்புண்டா யுளையுங் கைகால் போட்டாப்போல்
மீறும் பக்க முடல்நோவர்க்கு மிவையே குணமாய் விளம்பினரே

## ௫ மாங்கிஷப் பிரதாபசுரம்

கதித்திடுஞ் சுரமென் மேலுங் காந்திடு முகமுங் கண்ணும்
மதித்திடக் குத்தி னோவாம் பின்னடி சந்து மட்டும்
கொதித்திடுந் தசைதி ரண்டு குந்தியும் பிரமே கங்கள்
விதித்திடு மாங்கிஷ ரோக பிரதாப சுரமி தென்னே. ௰௫

## ௬ மாங்கிஷ வசூரிச்சுரம்

குாலடைத் திரும லுண்டாங் கோளையு மிருந்து காட்டும்
சிரபத மட்டும் வீங்குந் திணிந்திடுந் துவரைக் காய்போல்
அரபென வசடு பற்றி யதுவிரிந் தரிந்து வீழும்
சுரமுறு மாங்கிஷ ரோக வசூரியின் சுரமி தாமே ௰௬

## சோககுரம்.

தாகமுந் தாப முண்டாய் மலமொடு சலமுங் கட்டி
வகுநீர் சுரந்து வீழுஞ் சுரமிடை விடாமற் காயும்
மோகமாம் புறந்தாள் வீங்கு முவாந் தியு மிருந்து காட்டும்
சோகமாஞ் சுரமி தென்று சொல்லுவர் முறையு ணர்ந்தோர். ௰௭

## அ. விரண வாத சுரம்.

பாறிடு விஷங்க ளாலும் படுவனூற் பருவி னாலும்
மீறிடுஞ் சுரமிமன் மேலு மெடுபிடி யென்று வீழும்
மாறட்டா திடிக்கு நெற்றி சிரம்பிடர் வளைய வாங்கும்
கூறிடும் விரண வாத சுரமிஃ தென்று கொள்ளே. ௩அ

தொடுத்திடு மூன்று நாளுந் தோன்றிய வேழா நாளும்
அடுத்ததோர் சென்ம நாளு மட்டிடுங் கட்டசாத்தியம்
விடுத்தவிந் நாளி லன்றி நவசுரம் விலக்கஞ் செய்து
கொடுத்திடு மருந்தென் றெண்ணிக் கூறினர் முனிவர் தாமே. ௩௯

வாதத்தில் ௨௦-முற்றிற்று.

---

## பித்தத்தில் ௨௪.

## அவற்றுள்-சாத்தியம் ௧௦.

## ௧. பித்தசுரம்.

பித்த சுரத்தின் குணங்கேளீர் பிதற்றிப் பேசும் வாய்வெருவும்
ஒத்த நயனஞ் சிவந்திருக்கு மூடே வயிறு கழிந்துவரும்
மெத்தத் தண்ணீர் தாகிக்கும் வெதும்பி நாவுந் தடுமாறும்
புத்தி யடங்கு முகங் கறுக்கும் புகலு மிடறும் புண்ணாமே. ௪௦

கொடுதா யுள்ளங் கொதிப்பெய்திக்கொண்டே தாகமிகமிண்டிக்
கடிதாய் மெய்யுந் தழல்வடிவாய்க் கண்ணுங் கையுங் காறுனும்
வடிவாய் பஞ்ச ணிறமாகும் வாயுங்கைக்கு மனந்திகைக்கும்
பிடியாற் கிடையா விடையாரே பித்த சுரத்தின் குணமாமே

## ௨. பித்தவாத சுரம்.

அந்தப் பித்த மதுவிரண்டும் வாத மொன்றுஞ் சுரமானால்
உந்தக் காயும் பொருமலுமா முடப்பு மிகவு மஞ்சணிக்கும்
நொந்தங் குளையு முவாந்திசெயு நேர்க்குங் கண்ணும் வெளுத்திரு
மந்தம்பற்று மூளைமிகும் வருத்துங் குணங்க ளறிவீரே [க்கும்

## ௩. பித்தசிலேற்பன சுரம்.

பித்தசேற் பனசு ரத்தைப் பேசுவன் மனந்த ளர்ந்து
புத்திமா றுட்டம் பண்ணும் புகைந்திடு மிருமு மென்மேல்
சத்திடை விடாமற் காயுஞ் சலமல மஞ்ச ளிக்கும்
நித்திரை தானும் வாரா வழலைபு கெருக்க மாமே. ௪௪

பிறங்கைகால் முகமும் வீங்கும் பெருமூச்சோ டிளைப்பு விக்கல்
அறைந்திடு மாகம் போல நெஞ்சொடு விலாவி டிக்கும்
பிறந்திடு சுரமென் மேலும் பிதற்றிடுந் தண்ணீர் வாங்கும்
சிறந்தவிக் குணங்கள் பித்த சேற்பத்தின் சுரமென் றோதே ௪௫

சேர்ந்திடும் பித்த சேற்ப சுரத்தினிற் குணங்கள் செப்பில்
சார்ந்திடுஞ் சுரமுந் தொண்டை கட்டியே யிரும லுண்டாம்
மாய்ந்திடு மிளைப்பு நாவும் வழுவழுப் புடன்வ ரட்சி
பாய்ந்திடும் வேர்வை மென்மேற் பகர்ந்திடுங் குணங்க டேரே

## ௪ பித்ததாகசுரம்

நாவது துவர்க்கு மென்மேல் நையவே தண்ணீர் வாங்கும்
கோவமாய்ச் சுரமுங் காயுங் கூப்பிடிற் பேத மில்லைப்
பாவையே மலச லங்கள் வெதும்பிடும் பாத விக்கும்
காவியங் கண்ணாய் பித்த தாகத்தின் சுரங்கா ணீயே. ௪௭

## 5 பித்தவிட சுரம்

விடமாஞ் சுரத்தின் குணங் கேளாய் வெதும்பு மொருபால் வேர்
உடலுநடுங்குஞ்சிரமிடிக்குமூளைதகிக்குந்துவாய்வரளும் [வையுமாம்
குடலு மிரையுங் காய்ச்சலுமாக் கொள்ளா தனந்த லயர்தாகம்
இடரே செய்பு மிக்குணங்க ளியம்பு மாயுண் மறைதெரிந்தே. ௪௮

## 6 பித்த அத்திசுரம்

பித்தமோ கித்து நின்று பெலத்தையுங் குறைத்துக் கைகால்
குத்திநொந் துறக்க மின்றிக் கொதித்திடு முடலெண் சானும்

வத்திடும் பாவை போல நாவது வரண்டி நிற்கும்
சித்தமே மயங்கு மத்தி சுரமெனச் செப்பி னாரே. ௪௯

காந்திடு முகமுங் கண்ணுங் காலொடு கையு மெய்யும்
சேர்ந்திடு நீர்சி வந்து சுருக்கெனக் கடுத்து வீழும்
ஏந்திள முலையி னாய்கே ளினியவாய் கைக்கு மென்பு
நேர்ந்திட நீறு மத்தி சுரமென நிறுவி னாரே. ௫௦

## ௭ பித்தவிஷசிலேற்பன அத்திசுரம்

சாமத்தி னுலருந் தண்ணீர் தேடுந்
தழலெழுங்கண் முகமுள்ளந் தானு மொக்க
ஏமத்தில் வந்திடுகில் விஷசேற் பந்தா
னெழுந்தழலாங் குணமிதென விசைக்கும் போது
காமத்து சோவுமிகுஞ் சுவாச காசங்
கனலெனவே கண்டிதெனக் கருதிப் பின்னும்
தாமத்து முலைபாகே ளத்தி தன்னிற்
சார்ந்திடுமிச் சுரமெனவே சாற்றும் வேதம் ௫௧

## ௮ பித்தஅதிசாரசுரம்

கொதித்தெழுஞ் சுரத்தின் முன்னே கொண்டிடும் பேசிப்பு றுதே
சதித்திட மந்த மாகித் தாகமா வாட்சி யுண்டாம்
விதித்திடுங் கரமும் பாதம் வெதும்செனக் குளிர்ந்தி ருக்கும்
கதித்ததி சார பித்த சுரத்தினிற் குணங்கள் காணே. ௫௨

## ௯ பித்தமாறற்சுரம்

ஒன்றைவிட் டொருநாட் சீத மெழுந்திடு முரத்துக் காயும்
துன்றிடு மிரும லுதை துரப்பெழு முவாந்தி விக்கல்
மன்றினி லெழுதல் வீழ்தல் புலம்பொடு மயக்க மாகும்
பொன்றிகழ் முலையாய் பித்த மாறலின் சுரமா மென்னே. ௫௩

## ௧௦ பித்தஅசிரணைசுரம்

கொண்டதோர் சன்னி நின்று குமட்டியே மந்த மாகி
மண்டியே சுரமுங் காயும் வயிறுதாங் குளிர்ந்தி ருக்கும்
விண்டிட வலியு முண்டாய்த் தாகமுந் தாபம் விக்கல்
உண்டதாங் குணங்கள் பித்த வசீரண சுரமென் றோதே ௫௪

---

## அசாத்தியம் ௧௪

### ௧ பித்தசிலேற்பனசுரத்தில் அசாத்தியம்

சேர்ந்திடும் பித்த சேற்ப சுரத்தினிற் குணங்கள் செப்பிற்
காய்ந்திடுஞ் சுரமுந் தொண்டை கட்டியே யிரும லுண்டாம்
மாய்ந்திடு மிளைப்பு நாவும் வழுவழுப் புடன்வ ரட்சி
பாய்ந்திடும் வேர்வை மென்மேற் பகர்ந்தவிக் குணங்க ளோடே

காசமும் வெப்பு முண்டாய்க் கைத்திடும் வாய தாகிக்
கூசவே குளிர்ந்து சோம்புங் கொடுமைசேர் பிதற்றி யுண்டாய்
மாசறு மயக்க முண்டாய் மருளுறு துயர முண்டாம்
பேசினர் பித்த சேற்ப குணமசாத் தியமா மென்னே. ௫௬

### ௨ பித்தசன்னிசுரம்

முகந்தாறு குளிரும் பித்து மூர்ச்சையு மூமை போல
நகந்தாறு மொழிக ளாலு நல்லுடல் சோர்த லாலும்
மிகுந்தாறுங் குளிருங் கண்ணுஞ் சென்னியுஞ் செவியு மங்கம்
சகந்தனி னீரை யுண்ணுஞ் சுரபித்த சன்னி யாமே. ௫௭

### ௩ பித்தசீதசுரம்

மத்தமே கொண்டு மெத்த மயங்கியே குளி ருங் காயும்
பத்திடுஞ் சுரமென் மேலும் பயந்திடுந் தாக முண்டாம்
நித்திரையின்றிக் கைகா னீட்டிடும் பிரமை யாகும்
பித்தமே சுரமாஞ் சீதஞ் செய்குறி யென்று பேசே. ௫௮

## ச பித்தசயசுரம்

சுரமுட னிருமலுண்டாய்த் தொண்டையும் புகைந்து கட்டிக்
கரமொடு முகமுங் கண்ணும் வெளுத்தநிற் கறுத்திருக்கும்
அரமெனவிரிந்து நாவும் வெளுத்தநிலைசறு நாறும்
புரமுற வெரித்தோன் சொன்ன சுரசய மாகும் பொன்னே ௨௯

## ரு இரத்தபித்த உதிரிச்சுரம்

வாந்தியுஞ் சுரமு முண்டாய் மயக்கமு மிருமலாகிப்
போந்தகல் லுடம்பு வீங்கி வயிறது பொருமிக் கொள்ளும்
மாந்தியே கிடக்கு மிக்க மலமொடு சலமுங் கட்டும்
ஆய்ந்திடு மிரத்த பித்த வுதிரியின் சுரமிதாமே. ௩௦

## சா கரபாத பித்தசுரம்

எரிந்திடுங் கையுங் காலு மதில்வெடித் தசறு நாறும்
வருந்திட வனல்போற் காயும் வாந்தியுண் மூச்சு முண்டாம்
திருந்திய மலநீர் மஞ்சள் சேர்ந்திடுஞ் செவியிரைக்கும்
முருந்துறு மூரல்நல்லாய் கரபாத சுரமென்றோதே ௩௧

## எ பித்த இரத்தசுரம்

நெஞ்சமே லுடம்பு காயு நேர்ந்திடு முவாந்தி மூச்சுப்
பஞ்சென முகமுங் கண்ணும் பாண்டமு மஞ்சள் போலாம்
மிஞ்சவே யிரத்த மென்மே னீர்சிவந் திளைப்பு முண்டாம்
பஞ்சடி நல்லாய் பித்த விரத்தத்தின் சுரமாம் பாரே. ௩௨

## அ பித்தப்பிரமேகசுரம்

சுரத்தினிற் றுக மோகஞ் சேர்ந்திடும் வரளு நாவும்
உரைத்தநீர் கடுத்து நீர்த்து மஞ்சளாய்ப் புலவு நாறும்
வருத்திடு மனல்போற் காயும் வாயுவு மிருந்தூண் வற்றும்
தரித்திடுங் குணங்கள் பித்தந் தரும்பிர மேக மாமே. ௩௩

## ௯ பித்த இரத்தப் பிரதாபசுரம்

அனலெனச் சுரமுங் கர்பு மமர்ந்தகாப் புண்ணைய் நாறும்
சின்மென வயிறுங் காலுஞ் சிறிது மிருமல் வாந்தி
அனமுற வுதரம் விம்மு மலாக்குக்கிழ்க் குளிர்ந் திருக்கும்
கனமுற லெவருவுங் கண்ணுங் குளிர்ந்திடுங் கசக்கும் வாயே ௨௪

கரித்திடுங் கண்ணுங் காணுக் கலங்களுங் காந்து மன்மேல்
செரித்திடுங் குருதி நீரு செட்டைவிட் டிளையுங் கைகால்
சொரித்திடுஞ் சுரமென் மேனுந் தானுக்கமே லிளைப்புவிக்கல்
வருத்திடுங் குணங்கள் பித்த ரத்தப்ப தாப மாமே ௨௫

## ௧0 பித்தவிரணசுரம்

துடியென் விடிக்கு நெஞ்சு விலாவிலுந் துடித்துக்காட்டும்
கொடியதோர் சுரமுங் காயும் விரணித்துக் கைகால் குத்தும்
பிடியெடு மெனவே விழும் புலம்பிடும் பிரமையாகும்
கடியவிக் குணங்கள் பித்த விரணத்தின் சுரமாங் காணே. ௨௬

## ௧௧ பித்த இரத்த அதிசாரசுரம்

சுரத்திடை யுதரம் விம்மி யிரைச்சலுந் துன்னிக் காட்டிப்
பெருத்திடுங் கழிச்சல் மென்மே லாகும் பிரமையாகும்
பொருத்திடு மசைவை யெல்லாம் புண்ணெனக் குத்தி நோவாம்
உரைத்தவிக் குணங்கள் பித்த விரத்தநி சார மாமே ௨௭

## ௧௨ பித்தவிடசுரம்

ஒருபுறங் குளிருங் காயு மொருபுற முவாந்தி மூச்சுப்
பருகிடுந் தண்ணீர் வேண்டு மடிக்கடி சுரமும் பற்றும்
வெருவிடும் பிரமை தாக மூரியும் விக்க லெய்தும்
முருகவிழ் குழலாய் பித்த விடசுர மென்றார் முன்னோர் ௨௮

## க௩ பித்தமோகசுரம்

தாகமும் பிரமை யுண்டாய்ச் சுரமது தழல்போற் காய்ந்தே
ஆகமு மயர்ந்து காட்டி மலமொடு சலம டைத்துச்
சோகமே யெழுந்து காட்டி யிளைப்பொடு தாரப்புனா மூச்சும்
பாகுறு மொழியாய் பித்த மோகத்தின் சுரமாம் பாரே ௬௯

## க௪ பித்தரத்தப் பிரமேகசுரம்

அகங்கைகா லெரிப்புக் காட்டி யடிக்கடி சுரமுங் காய்ந்து
புகைந்திட விருமித் தொண்டை கனத்திடும் புண்போ னறும்
இகந்துநீர் குருதி காணு மிருசெவி யடைத்திரைக்கும்
பகர்ந்தவிக் குணங்கள் ரத்தப் பிரமேக சுரமாம் பாரே ௭௦

பித்தத்தில் உசம் முற்றிற்று.

---

## சிலேற்பனத்தில் உ0

## அவற்றுள் சாத்தியம் க0

## க சிலேற்பன பித்தசுரம்

வெப்பொடு வேர்வை யுண்டாய் வெளுப்பது நாவிலுண்டாய்த்
துப்பறு மிரும லுண்டாய்ச் சொல்லுநாக் கசப்பு முண்டாய்
அப்புறு தொண்டை கட்டி யருஞ்சுரந் தோன்று மாகில்
செப்புறு குணங்க பத்தின் சேர்பித்த சுரமா மென்னே ௭௧

## உ சிலேற்பனவாதசுரம்

தலையை மிகவு நடுக்குவதுஞ் சரீர முழுதும் விறைப்பதுவும்
அலையு மிரும லேன்றுவது மங்கை யொடுகால் குளிர்வதுவும்
குலையுஞ் சுரத்தி லிக்குணங்கள் கூடுங்க பத்தில் வாதமென
மலையின் முனிவ ராய்ந்து வகுத்தா ருள் வேதமதே ௭௨

## ௩. சிலேற்பனசய சுரம்.

இருமலுங் கூதலு மிளைப்பும் விக்கலும்
செருமலுஞ் சுரமனை வென்னக் காய்தலும்
தருமுகங் கனத்தலுஞ் சிரமிடித்தலும்
உரைசெயுங் கபசய சுரம தாகுமே. ௭௩

## ௪ சிலேற்பன மாங்கிஷ உதிரச்சுரம்

பொருத்துத் தொறுமுளைந்து புண்போல நொந்துடலம்
வருத்த மிகுசுரமு மயக்கமொடு வாந்தியுமாய்ப்
பெருக்கும் பிரமைவிக்கல் வேர்வையொடு பேதமுமாய்
இருக்குங் கபத்தின்மாங் கிஷவுதிரி யெனுஞ்சுரமே ௭௪

## ௫ சிலேற்பன கணசுரம்

காய்ந்து காய்ந்து வயிறிழியுங் கழியும்
கண்ணுந் தளர்ந்து குளிர்ந்திருக்கும்
வாய்ந்த நாவு மிகவெடித்துப்
புண்போ லூறு மசறுக்கும்
ஏய்ந்து முலையாய் கைகால்கள்
வெச்சையின்றிக் குளிர்ந்திருக்கும்
ஆய்ந்து கொள்ளு மிக்குணங்க
ளடைவாஞ் சேற்ப கணசுரமே ௭௫

## ௬ சிலேற்பன நீர்த்தோஷசுரம்

தாகமு மோக முண்டாய் மலமொடு சலமுங் கட்டிப்
பாகுறு மொழியி னாய்கேள் பாண்டமு முகமும் வீங்கும்
மூளையா மூதை விம்மி மூச்சுமு சென்றி ளைக்கில்
வாகுற முன்னோர் சொன்ன கபநீர்தோஷ சுரமிதாமே. ௭௬

## ௭ சிலேற்பன அத்திசுரம்

சுரத்திலே பொருமலாகிக் கழிச்சலுந் தொடக்கமாகி
வருத்திடுந் தாக மென்மேல் நாவது வரட்சியாகி

முருகுகிதழ் மின்னே நாகந் தாபமு முறையே யெய்தி
இருக்குமிக குணங்கள் சேற்ப வத்தியிற் சுரமா மென்னே எஎ

## அ சிலேற்பன அதிசாரசுரம்

காயு மிருமுந் தொண்டைகட்டுங்கனக்கு முகமும்பெருமனுமாய்ப்
பாயுந் தண்ணீர்த் தாசமிரும் பலகா லுதர மிரைச்சலுண்டாம்
வீயுங் கழிச்சல் புலானுறப் புறங்கால் கைகள் வீக்கமுற்றால்
ஆயு மறைசொற் சுரசேற்ப வதிசா ரத்தின் குணமாமே. எஅ

## கூ சிலேற்பனப் பிரமேகசுரம்.

செப்புஞ் சேற்பப் பிரமேக சுரத்தின் குணத்தைத் தேர்ந்தறியில்
வெப்பு மென்மேன் மாறுமற் கரமுங் கானு மிகவெரிந்து
துப்பாய் நீரு மிளாய்ந்துவிழு மசறு நாறுந் துடியடிபோல்
எப்போ தினுமெஞ் சிடிக்குமிது கபமா மேக சுரமென்னே. எகூ

## க0 சிலேற்பன நாலா மாறற்சுரம்

நாளிரண் டிடையே விட்டு நையவே சீத முண்டாய்க்
கோளுறு சுரமு வாந்தி யிருமனு மிரைப்பு முண்டாய்த்
தாழ்கழல் குறுகிச் சந்து பிடமொடு கழுத்து நொந்து
வீழுமேற் சிலேற்ப நாலா மாறலின் சுரமா மென்னே. அ0

---

## அசாத்தியம் க0

## க சிலேற்பனசுரம்

வெய்யசுரந் தனிலிருமல் துரப்பு விக்கல்
மெய்குளிர்த லுடல்வேர்வை யுளம்வெ தும்பல்
செய்யமுகங் கைகால்கள் வெளுத்துக் காட்டல்
தியக்கமுறல் மூச்சிளைத்தல் பிரதா பங்கள்
ஐபடைத்துக் குறுகுறுத்த லதிசா ரங்க
ளனமெலுப்ப லானகுண மவைகள் கண்டால்
வெய்யசுர மசாத்தியமா மென்றே யாயுள்
வேதத்தி லருளினர் பெரியோர் தாமே. அக

## உ. சிலேற்பன சன்னிசுரம்

ஓதுகப தோஷசுர குணத்தின் செய்கை
யுரங்குளிர்ந்து வேர்வையுண்டா யுபாதியாகிக்
காதுசேற் பனமடைத்தங் கிளைப்புமாகிக்
கண்குழியு நாக்கறுக்குங் காதுகேளா
வாதையுறு நாவரளு மூதை விம்மு
மலங்கழியு முகம்வெளுக்கு முவாந்தி யாகும்
சேதமுறு பசிதாப மிகவு முண்டாஞ்
சேற்பசுர சன்னியென்று செப்பினரே அக

## ந—மாங்கிஷ அதிசாரசுரம்

அழலுறவே சுரங்காய்ந்து நெஞ்ச டைத்தே
யதிகசி மாங்கிஷம்போ லசறு கக்கிப்
பழவெதுப்பு மிளைப்புடனே தாப்பு மாகும்
பாண்டமெலாம் வற்றுவிக்கும் பரத விக்கும்
உளமழிய வேர்வையுறுங் கண்வெ ளுக்கு
முதரமதி லதிசாரம் பற்றி நிற்குங்
கழுவிவிடு நிக்குணங்க ளசாத்திய மென்றே
நல்லாயுண் மறைதெரிந்து நவின்ற வாறே அந

## ச—சிலேற்பன தொந்த அதிசாரசுரம்

இக்குணங்க ளுண்டாகி யசறு கக்கி
யிருமலுட னிளைப்புமா யிளைப்பு மாகி
ஒக்கவதி சாரமாய்ச் சேற்பங் கட்டி
யரைக்குக்கீழ்க் குளிர்ந்திருக்கு முரமுங் காயும்
அக்கினிருக் தொண்டை கட்டும் பிரமை தாக
மையடைத்துச் செருமிவிடு மசாத்தி யத்தில்
புக்குணர்ந்து தேர்ந்தறிந்த குணர வல்லார்
பொருவிலா வுபநிடதம் போற்று வாரே அச

## ரு நீருதிரிச்சுரம்

வெதுப்புசுர முழற்றுதலை பரிதாபங்கள்
விக்கல்சத்தி யிளைப்பிருமல் மோகம் வீக்கம்
விதப்பெறவே வயிறழுத லல்லான் மேலே
விசிறுதனீ ரேபெருத்து வெடித்தங் கோடல் ?

இதம்பெறுநாக் கறுத்திளைத்த லெல்லாங் கண்டா
விக்குணங்க ளசாத்தியமா மென்னக் கண்டு
பதம்பெறவே யுரைசெய்தா னுமையாட் கீசன்
பழையமறைப் பொருளதனைப் பரிந்து தானே ௮௫

## ௬—சிலேற்பனப் பிரதாபசுரம்.

காய்ந்துகாய்ந் தத்திபுறு மூளை யெல்லாங்
கரைந்துகரைந் துருகிவிழுங் கருகி நீரும்
தீய்ந்துவிடு மலமுகமு முடலெலண் சானுஞ்
செறிபொருத்துத் தொறுமூளையும் புதைய வீங்கும்
ஆய்ந்தொருகா லிரத்தமுட னீரும் பாயு
மதிசார மிளைப்பிரும லாகம் வற்றித்
தேய்ந்துவிடு மிக்குணங்க ளசாத்தி யத்திற்
சேற்பபிர தாபசுர மென்று செப்பே. ௮௬

## ௭—சிலேற்பன கணசுரம்.

காயங் காயுங் கனக்கு மிருமலும்
தூய மாமுக மும்வெளுத் தோங்கியே
சாயம் போல மலசலந் தான்விடும்
ஆய சேற்ப கணசுர மாகுமே. ௮௭

## ௮—சிலேற்பன சோகசுரம்.

சுரத்திற் சேற்பமுந் தன்னு மிருமலும்
பொருத்துத் தோறு முளைவும் புலம்பலும்
வருத்துந் தாக மதிலுறு காசமும்
உரைத்த சேற்பத்திற் சோக சுரமிதே. ௮௮

## ௯—சிலேற்பன தொந்த சிலற்பனசுரம்.

பிரமை தாகமு மோகம் பிதற்றலும்
அரமும் போலடி நாக்குக் கறுத்தலும்
காமுங் காலுங் கனத்துத் தளர்தலும்
தாவுஞ் சேற்ப சுரசேற்பந் தானிதே. ௮௯

## ௧௰—சிலேற்பன சன்னிபாதசுரம்.

உடல்சேர் சன்னி பாதசுரத் துண்டாங் குணத்தை யுரைத்திடுகில்
பிடர்நோந் தலைநோ மறிவுகெடும் பிதற்று மிருமல் விளைப்பாகும்

படருப் புண்போலுடனேயாம் பருகுந் தண்ணீர்த் தாகமுண்டாம்
விடமே போல வாய்கசக்கு மிகவும் வெதும்பு முழுலையுண்டே கூ௦

உண்டே கழிச்ச ஞவுலரு மோது மிதற்கு வாய்நாசி
விண்டே புண்ணு நாக்கறுக்கு மிகவு நாக்குப் புண்ணுகும் [கும்
தண்டேன் மொழியாய், சத்தியமாந் தலையுங் கழுத்து மிகவேர்க்
கண்டா யிதுவே சிலேற்பனத்திற் காணுஞ் சன்னி பாதசுரம் கூக

## சன்னிபாதசுரத்தில் மரணக்குறி.

மேலே சேற்ப நாடியுறின் மார்பின் முகத்தில் வேர்வாகில்
சாலக் குளிர்ந்து நடுங்கியெழுந் நிருக்கி ஞப்பற் றுன்கறுக்கில்
சீலவுதர மிகவுளைந்தே யுதிரங் காணிற் சிரங்குனியில்
காலு முகமும் வீங்கிமுகஞ் சிவக்கின் மரணங் கண்டுகொள்ளே.

சிலேற்பனத்தில் உ௦ம் முற்றிற்று.
சுரம் கூச ம் முற்றிற்று.

---

## சுரத்திற்பேதம்.

### மூளைச்சுரம்-பித்தத்தில்வருவது (இது அசாத்தியம்.)

கண்ணெடு செவிகே ளாமற் கபாலத்திற் பித்த மீறிப்
பண்ணுற வெதும்பு மங்கம் பல்லடி யுதிரம் பாயும்
எண்ணிய பேச்சு மாறு மெழுந்தோ வரண்டு பேத
வண்ணமா மூளை வெப்பு வகையிது விதியின் வாறே. கூஈ

### தோலைப்பற்றியசுரம்-சிலேற்பனபித்தத்தில்வருவது.

காலொடு வயிறெ ரிந்து கண்களுந் தலையு நொந்து
பாலொடு பழமுங் கைத்து நாவது வரண்டு மெத்த
மேலுற வெதும்பி யங்கம் வெயர்வையு மிலாதி ருக்கும்
தோலினி லையும் பித்துந் தோன்றிய சுரமி தாமே. கூச

### தசையைப்பற்றியசுரம்-வாதத்தில்வருவது.

நடுக்கமுண் டாவது மைய நோவதும்
கடுப்புடன் வயிறது பொருமிக் காணலும்
அடுக்கலர் குழலிஞ யாற்ற லாவதும்
திடப்படு தசையினைச் சேர்ந்த வெப்பதே. கூரு

## தசையில் விடசுரம்.

குளிரதே யழுத்தி நாவரண்டு கொடிதாய் வெதும்பி மிசப்பிதற்
சுளர்ந்து சுவாச முடனிருமல் சலமு முகமு மெய்கருகி [றித்
உளைந்து சரீர மிகமெரந்தே யுவாந்தி விக்க லிவையுண்டாய்
விளைந்த சதையைப் பற்றிநிற்கும் விடமாஞ்சுரத்தின் விதியிதுவே

## இரத்தத்தைப்பற்றியசுரம். ×

ரகிக்கிப் பிதற்றி யுடம்புழுத்தி நாளுந்தண்ணீர் மிகப்பருகிக்
கடுத்து மெய்யு முகமினுக்கிக் கண்ணு நீரு மஞ்சணித்தே
அடுத்து மூன்றி லிரிரண்டி லனலாய் வெதும்பி மிகவேர்த்துத்
தொடுத்து விடுமித் தகுதியுடன் றோன்றும் பித்த சுரமாமே. ௯௭

## அத்திசுரம்.

நெற்றியுங் கழுத்தும் வேர்த்து நெஞ்சுமார் படைத்து மூர்ச்சை
பற்றியே யங்கம் புண்ணைப் பரந்துநா வரண்டு ழுத்திக்
குத்தியே யிருமிச் சோர்ந்து கொடுஞ்சுரம் காந்தல் தோன்றி
அத்தி யிலெலும்பில் வாத மையினு லடரும் வெப்பே. ௯௮

நலப்பெ றுஞ்சிர மெய்யு முளைதலும்
குலுங்க நோவதுங் கூப்பிட் டரற்றலும்
கலங்க வேதினங் காய்ந்துடல் வற்றலும்
இலங்கு மத்தியி லேய்ந்திடு வெப்பதே. ௯௯

## சுக்கிலத்தைப்பற்றிய சுரம்.

தாப மழுத்தித் தலைநொந்து சரீரங் கருகி மிகவெதும்பிச்
சோபம் வெளுத்து மலசலமுந் தோன்றிச் சத்தி வயிறெரிந்து
கோப முடனே விழிசிவந்து குளிர்ந்து பிதற்றி யார்ப்பரிக்கும்
தாபிக் கிழிற் சுக்கிலத்தி னணுகு மையி னடைச்சுரமே. ௧௦௦

---

## வைத்தியர் அறியவேண்டியன.

மந்திர மருந்து தீர்த்த மறைமொழி குருக்க டெய்வம்
புந்தியி லிவைபொய் யென்னிற் பொய்க்குமெய் யென்னின் மெய்
முந்திர வினைய கூந்தன் முகிழ்முலைக் கமல மின்னே [யாம்
தந்திர வகையால் வெப்புத் தணித்திடு மாறு கேண்மோ. ௧௦௧

பற்று பலசுரமும் விடமும் பலகுணமும்
குற்ற முறுமேது கொண்ட வசிரணமும்
சுற்றம் பிரதாப மூர்ச்சை முதலான
முற்று முணர்ந்துசுரம் போக்கு முறைபுரியே ௧௰௨

அரிய சுரம்வருமு ணைத்து றுகுணமும்
புரியு மியல்பொசிப்புப் போகங் குளு முடனே
பரியு மதன்மிகுதி பற்ற றுவாசிதமும்
விரிய வறிந்துசுர மீட்கும் வகைபுரியே ௧௰௩

வாதமொடு பித்தவகை மாறுபடு பேதம்
சேதமுறு சேற்பனஞ் செறிந்துவரு தன்மை
ஏதுமுறு மூன்றுசுர பேதமுறு காபர்
தீதறவு ணர்ந்தவர்க ளேசுர முணர்ந்தோர் ௧௰௪

கண்டுசுரம் வந்ததினங் காலமொடு கோட்கள்
மிண்டுசுரந் தன்னில்விட மிக்ககுண தோஷம்
உண்டுசுர மேழுகின மெட்டினுட னென்பான்,
மண்டுசுரங் கண்டுணரு வார்கண்மதி வல்லோர் ௧௰௫

குணமுங் குறிபு மேதுவுடன் கூறு முடலின் னிலையதுவும்
பிணியின் வேகம் விரோதங்கள் பேசுந் தோஷம் பிரித்தறிந்து
கணமுஞ் சூடு மாராய்ந்து கருது மருந்தி னியல்புடனே
தணியு நாளுங் கண்டுணர்வோர் மருந்தே தகைசான் மருந்தாமே

கல்லாப் பிராண வபகாரி கையின் மருந்தைத் தானுண்போர்
எல்லா நோயுங் குணமாகா மருந்தான் மேலு நோயுறுவர்
பொல்லா நோயு மதுதீர்க்கப் புகலு மருந்து மொன்றறியார்
கல்லார் மருந்தோ வதுகாலன் பாச மாகுங் கண்டீரே ௧௰௭

பொருண்மோ கித்து வாங்கியிடும் புன்மை யாளர் கலைமறையின்
அருள்பார்த் துணா வறியாதார் மருந்தொன் றறியா ரவனிதனில்
மருளாய்ப் பொருளிற் றடுமாறு மனிதர் பிணியின் வகையதுவும்
தெருளா ரவர்கை மருந்துண்போ ரொழியாநோயி லுழல்வர்தினம்

## சிகிச்சை

சுரந்தோன் றிற் சத்திபண்ணிற் சோறதுநின் றொழிக
உரந்தோன்று மிலங்கணமு மோரிரண்டு நாளாகும்

சுரந்தோன்று மூன்றுநாட் டுபகருக் குர்குடிநீர்
வரந்தோன்று மொன்பானாண் மருந்திடுக மடமானே ௧௦௯

## இலங்கணத்தின்பின் அன்னக்கஷாயம்

வில்வவேர். கூவிளை நெற்பொரி யரிசி சுக்குடன்
பாவையே சமன்புன லெட்டி லொன்றதாய்
மேவியீ தருந்திடிற் சுரமுந் தாகமும்
நாவுறு வாட்சியுந் தீரு நன்கதே ௧௧௦.

## சுர உவாந்திக்குக் குடிநீர்

துய்யமா தளம்பழத் தரிசி சுக்குடன்
செய்யநீள் விளாவிலை பட்டை திப்பிலி
வெய்துறு மேலமு மெட்டொன் றாக்கியே
பையவே யருந்திடில் வாந்தி பாறுமே ௧௧௧

வில்வவேர் சிற்ற மட்டி வேர்* தடி §யட்டி கோட்டம்
புல்லுநற் சீரஞ் சுக்குப் பொருக்கசந் தனமே†பூவின்
நல்லசர்க் கரையிட் டொன்றாய் நவிறாந குடிநீர்கொள்ளச்
சொல்லிய சுரத்து வாந்தி தொலைந்திடு மென்றார் முன்னோர் ௧௧௨

## சுரத்திற் கழிச்சலுக்குக் குடிநீர்

முத்தற் காசு கராம்புறு முந்திரி
கொத்தங் கூவிளை கோட்டமுப் பத்திரி
இத்தொட் டொன்றது திப்பிலி மேலிட்டுச்
சுத்தி யேகுடி தோற்குங் கழிச்சலே ௧௧௩

## சுரத்திற் தாகத்துக்குக் குடிநீர்

நல்ல சந்தன மேலமி லாமிச்சுப்
புல்லு முக்கடு கூவிளை பூசினி
வல்ல சர்க்கரை யிஞ்சி கராம்புடன்
வெல்ல வெட்டொன்று வீழ்ந்திடுந் தாகமே. ௧௧௪

* தடி—வலம் §அட்டி—மதுரம் † பூவின்சர்க்கரை—பூமிசர்க்கரைக்கிழங்கு

### முத்தோஷசுரத்துக்குக் குடிநீர்

†செஞ்சொட்டி தூதுவளை யாடா தோடை
சிந்தில்தா மரைவளையம் பற்ப டாகம்
பிஞ்சிட்ட நன்னாரி கண்டங் காரி
பெருங்கடுக்காய் நெல்லிக்காய் தான்றி சுக்குப்
பஞ்சிட்ட. வடியியொவ் வொன்று தானும்
பலங்காலாய்ப் பன்னிரண்டு படிநீர் வற்றி
மிஞ்சிட்ட குடிநீரிற் றேன்றிப் பிலியு
மேற்பொடியிட் டுக்குடிக்க விடுமூன்று சுரமே

முக்கடுகு பலைமூன்று முத்தற் காசு
முந்திரிகை நிலவேம்பு முள்ளி நாரி
தக்கவதி மதுரநா லேலல மோதஞ்
சந்தனம்வெண் கோட்டமுடன் சிறிய மூலம்
மிக்கசடா மாஞ்சில்குறுந் தொட்டி வில்வம்
வேர்வாசை யுடன்பிரமி சிந்தி லாமிச்
சொக்கவே யெட்டொன்றாய்த் தேன வாவி
யுண்டிடுகின் முச்சுரங்க ளொழியு மன்றே ௧௧௯

### சுரம் காசக்கும் ஒருகுடிநீர்

சிந்தில்வேப் பலகு சிறுகாஞ் சோன்றி
சார்ந்த சந்தனஞ் சாரணை யிஞ்சியும்
பெருங்கு ரும்பையும் பேய்ப்புடோ லிலையும்
பெருமுந் திரிகை பேரீச் சம்பழம்
வட்டத் துத்தி வரிக்கற் றாழை
விட்டுணு கிராந்தி வேரிலா மிச்சும்
ஆருநன் னாரி யாடா தோடை
வேருடன் வில்வம் மேற்றெருவி கொன்றை
முத்தற் காசு முதிய தூதுளை
சித்த மல்லி சேவதன் பூடு
நிலவேம்பு முள்ளிவேர் நீண்ட முல்லை

---

‡ செங்தொட்டி—செஞ்சொட்டி என்றுயிற்றுபோலும்.
செங்தொட்டி—சிறுகாஞ்சோன்றி

குலவிய மேலைங் கொள்கரு வேம்பும்
இருப்பையின் பூவு மிருவேலி கோட்டம்
கடுக்காய் மிளகு கவுரிபற் படாகம்
மிடுக்கா மதுரம் வெட்பா லரிசி
செல்லி தான்றி சேரிய திப்பிலி
சொல்லிய சுக்குச் சுகம்பெறு தேக்குத்
தேவ தாரஞ் சீரிய ரோமம்
தாவிய வரத்தை சதகுப்பை கருஞ்சீர்
கொத்த மல்லி கூறிய கடுகும்
இத்தனை யெல்லா மிதம்பெறச் சமனாய்க்
கூட்டியிடித்துக் கொண்டொரு பானையில்
வாட்டியநீரும் வாருநா னாழி 16 எட்டுத்து
இசையக் காய்ச்சி யெட்டொன் றாக்கிப்
பசையற வெந்து பதத்தி லிறக்கி
மெல்ல வடித்து மேற்பொடி திப்பிலி
தெள்ளித் தூவித் தேனுடன் குடிக்கில்
எள்ளிய சுரங்க ளெட்டெட் டானவும்
நள்ளிய சன்னி நான்மூன் றொன்றும்
மானிடர் தம்மை வருத்துவ தில்லையென்
றானதோ ராயுண் மறையது தன்னிற்
றேர்ந்துரை செய்தார் சிவனுமை தனக்குப்
போந்தது கண்டு பொதிகைமா முனியும்
மாந்தருக்காக வழுத்திய திதுவே கக௭

## வாதபித்தசுரத்தின் குடிநீர்

ஆடா தோடை பேய்ப்புடோ லட்டருஞ் சீந்தில் பற்படகம்
நீடார் கண்டங் கத்தரிவேர் நிலவேம் புடனே நீள்சுக்கு
வாடாக் குடிநீர் தேன்குத்தி வடித்துக் குடிக்க வல்லீராய்
பாடாய் வந்த வாதபித்தம் பாரிற் றீர்ந்து போய்விடுமே. கக௮

## வாதசிலேற்பனசுரத்திற்குக் குடிநீர்

கண்டங் காலி சிறுதேக்குக் கடுக்காய் சீந்தில் பற்படகம்
மண்டுந் திப்பிலி கோட்டமுடன் வருகச் சோலஞ் சிற்றரத்தை

கொண்டூர் நாழி நீர்விட்டுக் குறுகக் காய்ச்சி யுழக்காக்கிக்
கொண்டால்வாதசேடசுரங்குறைந்தே போமென்றுரைத்தனரே.

## வாதத்தின் மேற்குலைப்புக்கு.

நறைசேர் குழலா யிதுகேளாய் நாலா வகையிற் சுரந்தன்னுள்
மறையாதிருந்தொன் றுரைக்கின்றேன்வாதகுலைப்ப னீங்குதற்குச்
சிறுகாஞ் சொன்றி நிலவேம்பு சேர்ந்த முத்தம் பற்படகம்
இறையார் சுக்க துடன்கூட்ட வேகுஞ் சுரமுங் குளிரதுவும். ௧௨௰

## சீதசுரத்துக்கு.

இப்பொனூர் தம்பினூணை யிடும்புடோல் முத்தற் காசு
பற்படாஞ் சிந்தில் சுக்குப் பையவே நைய வெந்த
அப்பினூர் தேனி னூறோ டளாவினூ ரென்னக் கேட்டு
வெப்பினூர் குளிரி னூரை வினவினூர் விடைகொண்டாரே. ௧௨௧

ஆடா தோடை நன்னாரி யணியார் சிந்தில் வழுதலைவேர்
பாடார் படகம் வேர்க்கொம்பு படரும் பங்கம் பாலைசந்து
கோடாதொவ்வொன் றொருகழஞ்சு கூட்டிக்காய்ச்சி நாலொன்றாய்
நாடோறுந்தான் குடித்துவரி னலிந்தோ யோடுநளிர்சுரமே. ௧௨௨

நொச்சியிலை யுடனாடா தோடைப் பன்னு
நுண்ணியமீதாரிசங்கிலையுந் துளசி கூட்டி
இச்சையுட னிருநாழி நீரை மேவி
யெட்டொன்றாய்க் காய்ந்தநீ ரிதனின் மேலே
மெய்ச்சவருந் திரிகடுகு வெள்ளை யுள்ளி
மேவியசீ ரகமரத்தை விரும்பிச் சேர்த்தே
நச்சுவிழி மடநல்லீ ரருந்து வீரே
னளிர்சீத சுரமகலு நன்மை யாமே. ௧௨௩

திப்பிலி கோட்டம் பற்படகஞ் சிறுகாஞ் சொன்றி சிறுதேக்கு
மெய்ப்பாங் கண்டங்காலிபுடோல் வேர்க்கொம்புடனே நிலவேம்பு
கைப்பாஞ் சிந்தி லோரொன்று கழஞ்சு கொண்டே யிருநாழி
அப்பைவிட்டே யுழக்காக்கி யருந்தச் சுரங்க ளகன்றிடுமே. ௧௨௪

ஆடா தோடை வேப்பந்தோ லரிய சுக்குப் பற்படகம்
தேடார் சந்த மிருவேலி சேர்ந்த முத்தம் வெள்ளுள்ளி

வடார் குழலீ ரெட்டொன்று யிரவே காய்ச்சிக் குடிப்பீரால்
நாடாச் சன்னி தலைவலியு நளிருஞ் சுரங்க ளோடாவே. கஉரு

காரை வென்ற கனங்குழற் செய்யவாய்
வாரை மாட்டு வனமுலை மாதுகேள்
பேர மட்டியுஞ் சுக்குங் குடிப்பிரால்
ஊரை விட்டுக் குளிர்சுர மோடுமே. கஉசு

## பித்தசுரத்துக்கு.

கடுக்காய் சிந்தில் தூதுவளை கண்டங் காளி முசுமுசுக்கை
அடுக்காம் பற்ப டாகமுட னோடா தோடை சிறுபயறு [யிட்டுக்
வடுக்கண் மடவாய் சொடுப்பை புடோல் வற்றக் காய்ச்சிச் சீனி
குடிக்கும் போது பித்தசுரங் கூப்பிட் டோடுங் குறைப்பனுமே.

## பித்தத்தின் மேற்குலைப்புக்கு.

நெல்லி தான்றி வேப்பலகு நீண்ட சிந்தில் கொத்தமல்லி
நல்ல முத்தற் காசுடனே நருக்கி நாழி நீர்விட்டு
வல்லதாளை யிழக்காக்கி வடித்து நீரைக் குடித்திடுகில்
இல்லை யென்றே பித்தத்தி லெழுந்த குலைப்புப் போய்விடுமே

## பித்தசுரத்தில் மலங்கழிய

சீந்திற் றண்டு சிவதைவேர் சிறந்த கடுக்காய் களிப்பாக்கு
வாய்ந்த சுக்குக் கடுரோணி வதையத் தட்டிப் புனனுழி
சேர்ந்து காய்ச்சி நாலொன்றாய்த் தினமே குடித்து வருவீரேல்
போந்த சுரமுந் தான்குறைந்து பொருமு முதர மலம்போமே.

## முத்தோஷசுரத்துக்கு

வெட்பாலை யரிசிநெல்லி தான்றி யோமம்
வேர்க்கொம்பு கடுக்காய்நீள் முத்தற் காசு
தப்பாதே யிருவேலி யிலாமிச் சம்வேர்
தனம்பெறுபேய்ப் புடோலிவைகள் சமம தாக
மட்பாண்ட மதிற்காய்ச்சி யெட்டொன் றாக்கி
வருமுலைப்பால் தேன்கூட்டி யருந்து வீரேல்
வெப்பான முச்சுரம்விட் டகலு மென்று
விளம்பினா ராயுண்மறை யுணர்ந்த மேலோர். கநo

## மூளைச்சுரத்துக்கு.

கடுகு நொச்சி மஞ்சளுடன் காண்பார்க் குரிய வெட்பாலை
முடுகு நாவற் பூவுடனே மூன்று கடுகுஞ் சமநிறையாய்
திடமார் புனலீர் நாழியினிற் சிறக்கக் காய்ச்சிக் குடிப்பீரால்
கொடிய மூளை தனில்வெப்புக் குடிபோ மென்று கூறினரே. ௧௱௧

## தோலைப்பற்றிய சுரத்துக்கு.

கண்டங் காலி மாமஞ்சள் கடிய சுக்கு மிளகுடனே
உண்டா நல்ல வெட்பாலை யோங்கி வளர்ந்த நாகப்பூ
மண்டூர் நாழி நீர்விட்டு வற்றக் காய்ச்சி யுழக்காக்கிக்
கொண்டாற் றோலிற் சுரம்போகு மென்றே யுலகிற் கூறினரே.

## தசையைப்பற்றிய சுரத்துக்கு.

கோட்டஞ் சுக்கு மரமஞ்சள் கோதில் லாத வதிமதுரம்
நாட்ட முள்ள வின்பூற வீதமாங் கடுக்காய் நாயுருவி
கூட்டும் வில்வ நெற்பொரியுங் குறுகக் காய்ச்சிக் கொள்வீரேல்
காட்ட மாயே தசைமீதி னணுகுஞ் சுரம்போ நல்லோரே. ௧௱௩

## தசையில்விட சுரத்துக்கு.

கருவேம்பு துளசிபுளி வேப்பு சூதங்
கருதும்இவை யெலாமீர்க்குக் கடுகு மல்லி
மருமேவு துளசிகஞ்சாங் கோரை மாவின்
வளர்காந்தி நீர்முள்ளி முட்கா வேளை
திருமேவு தூதுவளை கண்டங்காலி
செப்புமிரு மல்லிகைசித் திரமா மூலி
உருமேவு மிவைசமமாய்க் கஷாய மூட்ட
வற்றதசை தன்னில்விட மொழியு மன்றே. ௧௱௪

## இரத்தத்தைப்பற்றிய சுரத்துக்கு.

காக்கட் டான்வேர் சிந்திலுடன் கடுக்காய் கடுகு ரோகணியும்
ஆக்க மாகும் வேர்க்கொம்பு மமருங் களிப்பாக் குடன்கூட்டித்
தாக்கீர் நாழி நீர்விட்டுத் தணியக் காய்ச்சிக் கொள்வீராய்
ஏக்கு மகதி சுரங்களுடனே குமுதிரந் தனிற்சுரமும். ௧௱௫

## அத்தி சுரத்துக்கு

சொல்லுஞ் சிறிய பயறுடனே சுகமார் நெல்லிற் பொரியதுவும்
விலவம் வேரும் வெண்கோட்டம் வேண்டுங் கண்டங் கத்தரியும்
நல்ல வம்பரா தாருவது நலமாய்க் காய்ச்சி யெட்டொன்றாய்த்
தொல்லைப் படுத்து மத்திசுரந் தொலையக் காய்ச்சிக் குடிப்பீரே.

## சுக்கிலத்தைப்பற்றிய சுரத்துக்கு

முத்தற் காசு வேர்க்கொம்பு முதிய விடயம் பேய்ப்புடோல்
ஒத்த சிந்தில் வேம்புடனே யுறுகாஞ் சோன்றி சமனாக
நத்திர் நாழி நீர்விட்டு நலமாய்க் காய்ச்சி யுழக்காக்கி
ஒத்த படியே குடித்துவரி லோடுஞ் சுக்கில சுரந்தானே. கரு௭

## மோகசுரத்தின்குணம்.

திரிதோஷ சுரஞ்சரிர முளைந்து நொந்து
தீன்மறந்து தலைகனத்து மயக்கி வேர்த்தே
அறிவழிந்து பதினாறு பேதம் பண்ணி
யதிகமாய்க் களைகளையாய்ச் சோக மாகி
நெறிகேடு செய்துமிண்டித் தொய்வு முட்டாய்
நின்றுசுர நெருப்பெனவே யெரிந்து நூறும்
வெறியெனவும் விஷமெனவும் பசாசு போலும்
விளம்புமுட லுந்தளர்ந்து விந்து கேடாம். கரு௮

## சிகிச்சை.

கெட்டாதரிசி மிளகுசுக்குக் கடுக்காய் கோட்டங்
கேடிலுள்ளி வறுத்தவித்துக் குடிநீ ராக்கி
விடாதருந்தி யவர்மோகத் திரிகள் தம்மை
விருப்பமுற வருகிருத்தி மெய்யிற் றெட்டுத்
தடவியவ ரின்னுரையாற் றண்ணீர் வெந்நீர்
தங்கையாற் கொடுத்திடவுந் தணியுமன்றி
அடாதசுர மோகித்த திரிமார் கூட
வணைத்திடவு மகலுமென வறைந்தா ரன்றே. கருசு

## சகலசுரம் காமாலை முதலியவற்றிற்கு வசுவாசிக்குடிநீர்.

வாச மிகுந்த வசுவாசி வளருங் காரம்பு கன்னாரும்
நேச மிகுந்த விலவங்க நெல்லி யிலாமிச் சிருவேலி

பாச முறுந்திப் பிலிபோமம் பகரும் வெட்டி செண்பகப்பூ
வீசுங் கடுக்காய் தான்றிக்காய் விளங்கு மதுரந் தான்கூட்டே.கசo

கூட்டு நாகம் பூவிடயங் கூறு மிருசி ரசுமுனுவா
வேட்ட முடன்சாத் திரவேதி மிகுமா தளையிற் பூப்பிஞ்சு
தேட்ட முடனே செஞ்சந்தந் தேவ தாரு வெண்கோட்டம்
நாட்டின் பூறன் மாசிக்காய் நயந்தோ ரொன்று முக்கழஞ்சே.கசக

கழஞ்சி ரிரண்டு நாழிபுனல் காய்ச்சி வடித்தே யுட்கொள்ளில்
முழங்கும் பித்த காமாலை மொழியும் வரட்சி யுட்காய்ச்சல்
விளம்பும் வாயு பரிதாபம் விக்கல் நெஞ்சி னுள்வரட்சி
குளிர்ந்த சுரங்க ளதிசாரங் குறையாச் சோம ரோகம்போம்.கசஉ

## வாய் நீரூறுஞ்சுரக்குடி நீர்

கண்டங் காலி காஞ்சொன்றி கருது முத்தஞ் சிறுதேக்குத்
தண்டு சீந்தி னிலவேம்பு சாருந் திப்பிலி பற்படகம்
கொண்டோ ரொன்று முக்கழஞ்சு கொண்ணீர் நாழி யுழக்காக்கி
உண்டா ராகி லுருவருப்போ டூறும் வாய்நீர்ச் சுரம்போமே. கசங

## முச்சுரக்குடி நீர்.

ஆடா தோடை யிலாமிச் சிறுவெலி யருங்கடு ரோணிபுடோ
லந்தச் சாறு கடுக்காய் திப்பிலி யானவ ரத்தைநெல்லி
காடார் சீந்திற் றண்டொடு முத்தங் காஞ்சொறி பற்படகங்
கடவுட டாரந் தேக்கொடு சுக்குக் கருதுங் கொத்தமல்லி
நீடார் மெய்ச்சத குப்பை கருஞ்சீர் நிலவேம் பொடுகோட்டந்
நேரொக் கக்கொண் டிருது ணியிலிட் டிருகோ துழக்கானல்
மேடாய் கேள்விடி யற்கா லங்கதிர் முன்னெதிர் கொண்டிடிலோர்
முற்றிய காலெதிர் பஞ்சென மஞ்சென முச்சுரமும் போமே.

கடுக்காய் தான்றி கொத்தமலி கடிய சுக்கு வெதுப்படக்கி
மிடுக்கா நெல்லி பேய்ப்புடோல் மிகுந்த சீந்தின் முத்தமுடன்
அடுக்காங் கடுகு ரோசனையு மடைவாங் கஞ்சாங் கோரையுடன்
இடத்தே கூட்டி யெட்டொன்றாய்ச் செவிக்கச் சுரங்கள் சேராவே.

## சுரவீக்கத்துக்குக்குடிநீர்.

கையாந் தகரை தூதுவளை கடிய நொச்சி பிரமியுடன்
மெய்யாய் விளங்கு நீர்முள்ளி விளம்பு மிருமல் லிகைத்தண்டு
செய்யாங் கரந்தை பேயமட்டி நிகழுஞ் சுக்கு கருக்கியிட்டு
ஆய்தாய்க் காய்ச்சிக் குடிப்பீராற் சுரத்தில் வீக்கந் தொலைந் திடுமே.

## பொதுச்சிகிச்சை

### கற்பம்.

செப்பரிய திப்பிலியும் வெண்கா யுள்ளி
சிறந்தசுக்குச் சீரகமு மிரிசி னோடு
தப்பாம லோரொன்று கழஞ்சு கொண்டு
தகுவெந்நீர் தனிலரைத்துத் தானே கொள்ள
அப்படியே மூன்றுநா ளருந்து வீரே
லனலெடுத்த சுரமுதலா யனேக நோய்கள்
வெப்பான வுதரமதி லிருமலி யாதி
வீடுமென மருத்துவநூல் விளம்பிற் றன்றே. ௧௪௭

## அழகிய சொக்கன்குளிகை

கெந்தகந் திப்பிலி வெண்காரங் கிளரு மிரத மூரோகணியும்
இந்துக் கொத்த நேர்வாள மிசையப் பாகற் சாற்றரைத்துச்
சந்தக் குன்றி போற்சமைத்துத் தழலாஞ் சுரத்துக் கிலவெந்நீர்
அந்தக் கொடிபோற் சிதம்விழு மழகிய சொக்கன் னிதுவாமே.

## இராசபேதிக்குளிகை

மூக்கடுகு மூப்பிலே முதற்சிவதை ரோகணி
முற்பகரு முப்பிரத முட்பிரகம் வாளம்
தக்கபொரி காரநவச் சாரமெவச் சாரந்
தட்டரிய சீரகமொ டேலமலர் காதி
ஒக்கவகை தேசிபழ நீரதனி லுண்டை
யோதுபய ருகவிடி லுதைபல மேகும்
முக்கணுடை யாதியா ரருளி னாலே
மூன்னுரைசெ யாயுண்மறை யோதுமொழி யாமே.

? சாதி 5. ஆடாதோடை, சீந்தில், சிறுசெண்பகம், தேக்கு, வேம்பு.



## இராமபாணக்குளிகை

கெவுரி துத்த மரிதாரங் கிளர நிறுத்தங் கொருகழஞ்சாய்
அவுரி மத்தஞ் சாற்றிலரைத் தரிய வுண்டை பயறளவு
துவர நருக்கி யோருண்டை கொடுப்பீ ரிஞ்சிச் சாறுதனில்
இவரும் வெப்புச் குளிர்சுரமுஞ் சேரா திராம பாணமிதே. கூ0

## சீதசுரத்துககு நாளையென்பார்நாயன்

தாராருங் குழன்மாதே சாத்திரத்தின் வேதியுடன்
சோராத பாஷாணந் தாரிசுத்த மாமிவைகள்
ஏராரு நற்செம்பை யிலைச்சாற் றரைத்தவுண்டை
நாராய ணனுரைத்தா ளையென்பார் நாயனிதே. கூக

## சந்தனாதிக்குளிகை.

சந்திரனொடு கோட்டமிரு வேலியகில் முத்தஞ்
? சாதிக்கறை பைந்தினுட னைந்திவைக டாமும்
முந்திரிபே ரிஞ்சுசினை பூரமுறு பாலை
முப்பழச்சு ழைகெருட பச்சையுறு பச்சை
இந்தவகை யேசமன தாகவிடி தூளா
யேயவரை †பூவிரியு நீரினி தாயே
சந்தனம தாதிகுளி கைப்பெயர தாகுந்
தக்கவிள நீரினுண வக்கினித மேகும். கூஉ

## மிருத்தியாதிக்குளிகை

முத்தமிரு வேலியிலா மிச்சுகறை வெட்டி
முப்பழச்சு ழைகெருட பச்சையகில் தாரம்
குத்தமறு பத்திரிகன் ஞெராடுதற கோலங்
கோட்டமொரு செண்பமல ரோசினைகொள் பூரம்
கொத்தமலி யதிமதுர மேலமில வங்கங்
கொண்டுவிள நீரதனின் மண்டிடவ ரைத்து
உத்தபிர தாபசுர முட்டணமெ டுத்தா
லோட்டிவிடு மேமிருத்தி யாதியிது வாமே கூ௩

## ஏலாதிக்குளிகை

இட்டமுறு மேலமில வங்கநறை முத்த
மின்பமுறு சீரமிரு வேலியுறு நாரி
சட்டபுனு கோடுசினை முந்திரிபே ரிஞ்சு
சாதிமுகை யாகுபெறு தாரமதி மதுரம்

† பூவிரியுநீர்-பன்னீர்

? சாதி 5:. சாதிக்காய், சாதிலிங்கம், சாதிபத்திரி, சாதிசம்பு ...

கொட்டமெரி யரிசியிலா மிச்சிறெடு வெட்டி
கொத்தமலி செண்பமலர் சந்தனமி தொக்க
மட்டுவரு பூவிரியி னீரினி லரைத்து
மாதுமுலை யூறுமமு துண்ணவனல் மாறும் கடு ச

## இராசசேகரவடிவு

கோரோ சனையே சாதிக்காய் கோட்ட மிந்து குராசாணி
சீரா மிச்சங் குங்குமப்பூச் சிறந்த வெள்ளி லோத்திரமும்
கோரா மேல மிலவங்க நிறைசேர் தங்கங் கஸ்தூரி
வாரார் முலையாய் பத்திரியும் வளர்சீர் கருஞ்சீ ரகம்வாங்கே
வாங்காய் மதுர மஞ்சிட்டி வாச வெட்டி வேருடனே
பாங்கார் நெல்லி சிறுதான்றி பவளம் பச்சைக் கர்ப்பூரம்
ஆங்காங் காரஞ் சடாமாஞ்சி லந்திக விடய மகிலுடனே
நீங்கா நிறைசேர் திரிகடுகு திப்பிலிமூல நேர் கொள்ளே கடுகூ

கொள்ளாய் முத்தங் கலங்கொம்பு கோதறுசெவியம்வலம்புரிக்காய்
விள்ளாய் புனுகு செண்பகப்பூ வேதி யக்ரா காரமுடன்
கள்ளார் குழலாய் நவச்சாரங் கமழுங் தேவ தாரமுடன்
விள்ளாய் சத்தி யெவச்சாரம் விரும்பி யோரொன் றொருநிறையே
நிறுத்தே கருப்பஞ் சாறதனி னோர வரைத்துப் பதமாநற்
கறுத்த வுளுந்தி னளவாகக் கடுகத் திரட்டிக் குளிகைதனை
மறுத்து முலைப்பால் தன்னிலிட வாத பித்த சுரத்துடனே
முறுக்குங் கழிச்சல் வயிற்றெரிச்சன் மூன்று சுரமும் வாராவே

## நேர்வாளம் சுத்திசெய்ய

மேதிச்சாணி நீர்மோரா மிக்க தயிர்பால் பசுங்கமூநீர்
சாதிக் கடுக்காய்க் குடிநீராக் தக்க நறுநெய் யிவைகளிலே
மோதுங் தோடு முள்ளிலையு முற்றுங் தள்ளி முழுங்கவெந்தால்
ஆதி மலமு மறுக்குமென வாயுண் மறையி லருளியதே கடுகூ

## சுரகோடாலி

பொன்னரிதா ரஞ்சிவந்த பாஷாணம் வெள்ளை
பொருந்தியநற் பாஷாண நேர்வாள நிறைதான்
சொன்னபடி மூன்றைந்தோ டனிரண்டு நான்கு
துலங்கியமுக் கடுகுவகைக் கிருமூன்று கழஞ்சு

பன்னுமிலைக் கள்ளியினிற் சாற்றினைவிட் டரைத்துப்
பயிலெருச்சி யிலைச்சாறு மதுபடிவிட் டரைத்து
மின்னனையீர் மிளகளவு பன்னீரிற் கொடுக்க
விடசுரங்க ளகலுமென விளம்பியிடும் வேதம். கருகூ

## சுரசிந்தாமணி

இரசங்கெந் தகமரிதா ரம்வச்ச நாவி
யிருவிகெச திப்பிலிநேர் வாளம்வெண் காரம்
திரிகடுகு திரிபலைநற் றுரிசினொடு அத்தந்
சிவந்தபா ஷாணமுடன் வெள்ளைப்பா ஷாணம்
கருதுங்நேர் சரிகொண்டு கைத்தகரைச் சாற்றிற்
கலந்தரைத்துக் குன்றிமணி யளவுருட்டிக் கொண்டு
பருகிடுமோ ருண்டைகடுக் காயவித்த சாற்றிற்
பலசுரமும் பறக்குமெனப் பகர்ந்தனர்கண் முனிவர்.

## அரிதாரக்குளிகை

தாரங் கெந்தி நாவிரசந் தருமுக்கடுகு பலைமூன்று
கார மிருவி சமன்கூட்டிக் †கடலா மணக்கு யிதிற்பாதி
சேர நிம்பச் சாற்றரைத்துச் சிறுக வுண்டை முர்க்கம்போல்
கூரு மனுபா னத்திலிடக் கொடிய சுரங்கள் குடிபோமே. கசுக

## சொர்க்கானந்தவயிரவன்

துத்தந் துரிசொ டெவிப்பா ஷாணம்
மெத்திய கெந்தக மிவைசம னகப்
பத்திய பாக விலைச்சாற் றரைத்துச்
செத்திய வெள்ளள வுண்டைகள் செய்யே. கசுஉ

## சீதசுராங்குசம்

சீத சுராங்குசஞ் செப்பக் கேளீர்
ஓதிய கெந்தக மிரசம் வாளம்
கோதறு திரிகடு கொடுகடு சிவதை
மோதுறு பாலினின் மாத்திரை செயுமே. கசுங

---

†கடலாமணக்கு–காட்டாமணக்குவிதை

## சுராங்குசம்

அரிதார மிலிங்கங் கார மப்பிரகந் துத்த நாவி
பரிசான துரிசி னோடு பார்மனோ சிலைநீ டிந்து
பெரிதான விரசம் பாம்பின் பித்துகல் விஞ்சிச் சாற்றில்
உரிதாக வரைநீ மாத்திரை யுடன்கொளச் சுரங்கள் போமே. கசுச

## வல்லார்க்குவல்லான்

எலிமருந் தொன்றே முக்கா லிலங்குரசந் சந்தஞ் சாதி
குலவுமுக் கழஞ்சு கூட்டிக் கூறிய முலைப்பால் விட்டே
இலகிட வரைத்த வுண்டை யெள்ளிடை தேனி லுண்ணக்
குலவிய குளிருந் காய்ச்சல் குலைகுலைந் தோடுங் காணே. கசுரு

## மிண்டார்க்குமிண்டன்

எலிமருந் தொன்று வாள மிதிலரி தார மொன்று
குலவுமுக் கடுகு துத்தந் துரிசொடு நாவி ரசம்
இலகவே யெருக்கம் பாலி லிதையரை மணற்போ லுண்டை
மலமறு நாலு நாளை மாறலு மகன்று போமே. கசுசு

## பாசுபதாஸ்திரம்

ஆறதாகு மெலிமருந்து மதற்கு நாலு சாதிலிங்கம்
வீறதாகு மெருக்கலம்பால் விட்டே யரைத்து மணற்போல
ஆறுஞ் சுரமு மாறலும்போ மான்பா லாகு மற்றொருண்டைப்
பேரு மிதனைச் செய்வதெனப் பெரியோர் பலரும் பேசுவரே.

## சூரியப்பிரபை

காயம் பொன்னரி தாரம் வெள்ளுள்ளி
காரந் நாவி யிருவி கடுதான்றி
மாயக் கெந்தகஞ் சூத மோர்நிறைகொள்
ளான மோர்நிறை முருக்கிலைச் சாற்றரை
நேய மற்றைநாட் சம்பீரச் சாற்றரை
நீடு குன்றி விரையென விஞ்சியில்
தூய நொச்சியிற் சாற்றின் முலைப்பாலிற்
றேன்று மேச்சுர முந்தொலைந் தோடுமே. கசுஎ

### சன்னிபாதசுரத்துக்கு எண்ணெய்.

எருக்கலையின் வேர்ச்சாறு நான்கு நாழி
யிசைபருத்தி யிலையின்சா றிரண்டு நாழி
திருக்குலவு மெலுமிச்சம் பழச்சா றொன்று
திலவெண்ணெ யொருநாழி கலந்து கொண்டு
மருக்குலவு மிருவேலி யிலாமிச் சம்வேர்
வளர்கோரை யெலுமிச்சை சிற்ற மட்டி
உருக்குலவு செம்பொன்னி னெருஞ்சி முத்த
முடனரி யோரிதழ்நா யுருவி மேனி. ௧௬௯

பெருமருந்து கிலுகிலுப்பை யவுரி யோடு
பேசுமலை தாங்கிகொடிக் கழற்சி சன்னி
வருகிராந்தி தயிர்வேளை சிந்த மூஷி
வளர்காட்டு மல்லிகையின் பூறல் வேர்கள்
ஒருமருந்தா பதின்கழஞ்சு கஷாய மாக்கி
யுடன்கலந்து முக்கடுகு வசம்பு காயம்
மாமஞ்சள் சதகுப்பை யிருசீர் பல்லி
வசுவாசி பிகாறி மதுர மேலம். ௧௭௦

மதுரமிகு சாதிக்காய் தேவ தாரம்
வாசமிகு வெண்கோட்டம் விடய மஞ்சள்
சதுரமிகு செவ்வள்ளி விழால்வெட் பாலை
சார்வெளுத்தற் பிசினு லவா, வாத்த, சந்தம்
புதுலசுனங் கச்சோலங் காய்ப்போ ரொன்று
பொருந்தவொரு கழஞ்சிடித்துப் புகல்சம் பீர
முதியபழச் சாறாற்றி யரைத்து முன்னே
மொழிந்தமருந் துடன்கலக்கி மூன்று நாளும். ௧௭௧

அனலிட்டு நாலாநாள் வடித்துக் காசி
னளவுள்ளும் புகட்டிமேற் பூசு வீரேற்
கனலிட்ட திரிதோஷ சன்னி பாதங்
கலந்தசுர முளைக்குத்துக் கடுப்பு வாதம்
எனுமுட்டுக் குளிர்சுரங்க டசவா யுக்க
ளிரிக்கேதகு மெனவுரைத்தான் பொதிகை தன்னில்
மனமெட்ட வரியசிவன் றன்னை நோக்கி
மாதவஞ்செய் திருந்ததமிழ் மறைவல் லோனே.

## பழவெதுப்புக்கு
## மிருதசஞ்சீவித்தயிலம்.

பசுமஞ்சட் சாறதனு மிருகாழி கேசிப்
　　பழத்தில்வரு புளியுநா னுழிநில வெண்ணெய்
இசையநா னுழியிவை யொன்றுகக் கூட்டி
　　யிதிலழிஞ்சி,பெருமருந்து,தழுதாழை,வேலி
அசுவகந்தி நன்னாரி யொடு*காளி †காரி
　　யவுரிகுன்றி பேய்மருட்டி யம்மையார் கூந்தல்
வசியமுறு கீழ்நெல்லி,பாவட்டை யிரண்டு
　　வளர்சிந்தி ¶ளிர்க்குண்டி,சிறியபுள்ளி,னடியே　கஎங

வயசெருப் படிமேனி,யுடன்வேம்பு,கொன்றை,
　　யினுமழிஞ்சி,கரிசாலை,ப்பைபொடு தலையும்
தூயசுழ லாவாரை,சங்குதரு குப்பி,
　　சொல்லியமுக் காவேளை,யாட்டானங் கொடியும்,
ஆயுமிரு மல்லிகைசா ரடை,தவசி முருங்கை,
　　யரியவிரு திராயெவா மவைவேரு மிலையும்
சேயவிலா மிச்சையின்வே ரொவ்வொன்று பலமாய்ச்
　　செப்புமிரு தூணிநீ ரெட்டொன்று வடியே.　கஎச

வடித்துமுன்னைக் கஷாயத்திற் கலந்து கோட்ட,
　　மஞ்சிட்டி,யதிமதுர மஞ்ச,ளேலம்,
தொடுத்தவிரண் டகிலரத்தை கடுகு ரோணி
　　சொல்லுமர மஞ்சடிரி பலைகச் சோலம்
அடுத்ததிரி கடுகுநறும் பிசினி,லேடே.
　　யானசத குப்பையில வங்கப் பட்டை,
விடுத்தசவர்க் காரமிலு மிரண்டு சீரம்
　　வேண்டிலவம் பிசின்கடக சிங்கி,யாமே.　கஎரு

ஆகுமிந்தச் சரக்கெல்லா மிடித்துத் தூவா
　　யதிற்கலக்கி மெழுகுபத மான வண்ணம்
வாகுபெற வடித்துடம்பிற் பூசி மேலும்
　　வளமையுடன் கண்காது நாசி தம்மிற்

---

*காளி—மணித்தக்காளி　　†காரி—கண்டங்கத்தரி
¶ளிர்க்குண்டி—வெண்ணொச்சி

பாகமது தவறுமற் றளித்து விட்டுப்
பயன்பெறவுள் ளும்புகட்டி முழுக வார்க்கில்
மோகமுறு பழுவெதுப்புப் பித்த சோக
முதலான சுரமனைத்து மொழியு மன்றே. ௧௭௬

(சேர்க்கப்பட்டவை)

## தங்கேலாதி மாத்திரை.

உரைக்கு மேலமிலவங்க முத்துப் பவளங் குங்குமப்பூ,
வுயர்ந்த வெள்ளி தங்கமிரு வேலி யுருத்தி ராக்கமணி,
விரைக்கு மாஞ்சில் குளவிந்தங் கெருடபச்சை கிளியூறல்
வெட்பா லரிசி யதிமதுர மிருகக் கொம்பு தற்கடகம்,
தரைக்கு ளியலுஞ் செங்கழுநீர்க் கிழங்கு கன்னு ரதிவிடயஞ்
சாருங் கோட்ட நன்னாரி சாம்பி ராணி செண்பகப்பூக்
கரைக்குஞ் சந்த மரத்தை செல்லி சிறுநா கம்பூ மாயாக்காய்
கலையின் கொம்பு வசுவாசி கராம்பு முத்தங் கச்சோலம். ௧௭௭

மேவு நற்சீ ரகமுடனே பூசினி விரைநா கணமிவைகள்
விளங்க வோரொன் றொருகழஞ்சு வேண்டி யிடித்துத் தூளா
காவில் வளரும் கரும்பினூறு சாற்று லாட்டி யொருசாமங் [க்கிக்
கருது மிளநீர் தனிற்சாம நாலு கன்னி முலைப்பாலால்
தாவுஞ் சாம நாலரைத்துப் புனுகு கோரோ சனையோடு
தருங்கஸ் தூரி யொருகழஞ்சு சாரக் கூட்டியரைத் திடக்
பாவு மிலாமிச் சிருவேலி முத்தற் காசு நன்னாரி [கேள்
பகரு மினிய விலவங்க மோரோ ரொன்று பலமதையே.

பலமே யுறுசீ ரெட்டொன்று யவித்துப் பிழிந்த நீர்விட்டுப்
பண்பா யரைத்து நாற்சாமம் பருத்தி விரையி னளவுருட்டி
நலமாய் நிழலி லுலர்த்தியபின் றீரு நோயு மனுபான
நாடி யுரைப்பன் முலைப்பாலி னலியும் பித்தசுர மதுதான்
வலமா யிஞ்சி பிழிந்திடுநீர் வாதசுரத்தை விடுவிக்கும்
வருதிப் பிலிநீர் முலைப்பாறேன் வருத்து சேற்ப சுரந்தன்னை
இலதாய்ச் செய்யுந் திரிதோஷ சுரத்துக் கிஞ்சி தேன்முலைப்பா
லேற்கு மத்தி சுரமதனுக் கிசைந்த கோணைத் தண்டாமே.

ஆமே நடுக்குஞ் சன்னியினில் வந்த சுரத்துக் கிஞ்சிநீ [ரேதன்
றடுத்த சன்னி பதினெட்டு மருகிம் பெண்ணெய் முலைப்பால்
நாமே யுரைத்த விஞ்சிநீ ரிவற்றிற் குளிகை யொன்றுரைத்து
நன்முக் கடுகு வறுத்திடித்த பொடிமேற் றூவி நல்கியிடப்
போமே விக்கல் கிறுகிறுப்புச் சத்தி மயக்கம் வலிமுறுக்குப்
புரைசேர் பித்த சேடசுர மூச்சு வாந்தி புகலுழலை
தாமே வாத சயித்தியமேல் வாத சுரமு மக்காத்திற்
சாருஞ் சுரமுஞ் சயமாறுங் கபமுந் தீருந் தகைகேளே. கஅ௦

தகைசேர் வில்வம் வேர்மல்லி முத்தற் காசு நன்னாரி
சாருங் கோட்டந் தேவதரு மிளகோ டொன்று சமனாக
வகைசேர் குடிநீ ரிட்டதிலே யருந்தப் போகு மிருவேலி
மணமார் சந்த மிலாமிச்சு வருமுந் திரிகை பற்படகம்
தொகைசே ரேலஞ் சிற்றமட்டி யாடா தோடை யொடுசீந்தில்
தொடுகூ விளைவேர் தேவதரு தூய பலைமூன் றிவையல்லால்
முகைசேர் தனத்து மடநல்லாய் நிலவேம் பல்கை யுற்றபுடோல்
முத்தற் காசு மிவைகுடிநீர் கொள்ள வொழியும் பலசுரமே.

## இரத்தினபூபதி மாத்திரை.

சூரியவே லெறிந்தசுரர் கிளையை மாய்த்த
குழந்தைவடி வேலனடி யிணைகள் வாழ்த்தி
நேரியமான் கொம்பினுடன் மிருகக் கொம்பு
நிகழ்பன்றிக் கொம்புவா ரணத்தின் றந்தம்
ஒரொன்று நாற்கழஞ்சு வருகஸ் தூரி
யுருத்திரமா மணிவகைக்குக் கழஞ்சி ரண்டு
சீரியநற் பவளநன் முத்துத் தங்கஞ்
சிவப்புமர கதம்வகைக்குக் காற்க ழஞ்சே. கஅ௨

பச்சைக்கர்ப் பூரமகில் குங்கு மப்பூப்
பலைமூன்று செங்கழுநீர்க் கிழங்கு சுக்கு
நச்சுமதி மதுரமிந்துப் பரத்தை யேல
நாகம்பூ வசுவாசி குலக்கா யோமம்

மெச்சுமாக் கும்பர்பொன்னி னம்பர் கன்னூர்
வெள்ளைக்குந் திருக்குமதி விடயங் கோட்டம்
இச்சையுறுங் காரம்புகிறு தேக்குக் காந்த
மிருசந்த னங்கறுவாப் பீத ரோணி. ௧௮௫

சீர்தருதிப் பிலிபினுடன் றேவ தாரு
செவ்வள்ளி மாயாக்காய் கடுகு ரோணி
நீர்தருமுந் திரிகைகட னுரைபே ரீஞ்சு
நிகழ்கனித வேதியுட னக்க ருவும்
சார்தருசா திலிங்ககவச் சாரங் கோரோ
சனைபுனுகு கன்மதஞ்சவ் வாது தானும்
கூர்தருமப் பிரகுமிவை பொருக முஞ்சு
கோரையமுக் கிராய்துளசி மாலின் காந்தி. ௧௮௬

நன்னூரி தூதுவளை யாடா தோடை
நவில்வெட்பூ விவைவேர்க ளரைக்க முஞ்சு
பொன்னூரு மடமானே யிஞ்சிச் சாறு
புகல்கரும்பு மாதளையின் பழத்தி னேடு
மின்னூர்தம் முலைப்பானு நாளொவ் வொன்று
மிகாதரைத்தே யிலகினுறு விரைபே போலச்
சொன்னாப் படியுருட்டி நிழனு லர்த்தித்
துயர்மேவு பலசுரங்கள சன்னி தோஷம். ௧௮௭

இருமல்கசங் கோழைதரு சுவாத சன்னி
யிளைப்புவிக்க லசதிமிகு சுவாத காசம்
செருமல்தரு நெஞ்சடைப்புத் தாப்பு மூச்சுச்
சேர்வயட்சி வயிற்றுப்புண் ணிரத்த பித்தம்
பொருமல்தரு மோங்காளஞ் சத்தி யாதி
போகுந்நோய்க் கேற்றவனு பானங் கூட்டப்
புரிதருமிம் மருந்தின்பே ரிரத்தி னத்தின்
பூபதியென் றேவேதம் புகலு முண்மை. ௧௮௮

சன்னிபாதசுரத்தில் ஏலாதிமாத்திரை

ஏலமில வங்கமொடு கஸ்தூரி யதிவிடய மினியசந் தனமிலாமிச்
சிருவேலிமுந்திரிகை பேரிஞ்சினற்கனி யிலுப்பையிற் பூமுத்தமும்

கோலமுறு மான்கொம் புருத்திராக் கங்கன்னுர் குலவுமதி மதுரமாஞ்சி ல்
கூறுசாத் திரவேதி சாதியின் காயினொடு கோரோசனைகெருடனும்
சீலமுறு பச்சைசக்கர்ப் பூரமறு சந்தனஞ் சேர்பச்சை நிலவேரினுஞ்
சேர்மூயிற்றண்டமிவை சரியிலாரோரகூரை சேர்காயினளவுருட்டிப்
பாலினொடு மாதளம் பழநீர் கரும்புநீர் பகரிஞ்சி தேன்முலைப்பால்
பாங்கா யறிந்துகொடு சன்னிசுர மாற்றிடப் பகருமே லாதியிதுவே.

## பிராணசஞ்சீவிமாத்திரை.

அருந்தமி ழுணர்ந்த மேலோ னகத்தியன் றெளித்துக் கூறும்
திருந்திய மருந்து நூலைத் தேர்ந்துபன் னேய்க ளர்க்கும்
மருந்துசஞ் சீவி கேண்மின் வளமுறு தங்கம் வெள்ளி
பொருந்துநற் பவளமுத்துக் குங்குமப் பூக்கஸ் தூரி. ௧௮௮
கல்லகோச் சிலைமான் கொம்பு நலந்தரு முருத்தி ராக்கம்
வல்லவா ரணத்தின் கொம்பு வருமிரு கத்தின் கொம்பு
சொல்லுதாம் பிரசிந் தூரஞ் சூதசிந் தூரந் நோயை
வெல்லுமப் பிரகந் தன்னின் மேவுசிந் தூர மின்னும். ௧௮௯

தப்பறு நாக பற்பந் தருதிரி கடுகு தேற்று
வெப்பறு கெருடபச்சை மேவுமீ ரரத்தை கோட்டம்
அப்புறு தாரிசு துத்த மக்கரு நாகம் பூவிந்
துப்புவான் மிளகு சாதிக் காய்சிறு தேக்கு வாசி. ௧௯௦

ஏலநற் கராம்பி னேடே யரிதகி கடுகு ரோணி
வாலிய கறுவாப் பட்டை வருமதி விடயம் பூவின்
பாலுறு நாக மின்னம் பகர்முயிற் றண்ட மெல்லாம்
சீலமாய்க் கொண்டோவ் வொன்றுஞ் சேரொரு கழஞ்சதாக.௧௯௧

கொள்ளுசா திலிங்கந் தன்னிற் கூறுசிந் தூரம் பத்து
விள்ளுறு முறையே கூட்டி யரைத்திட விளம்பு வன்கேள்
தெள்ளுறு மாடா தோடைச் சாற்றினிற் றினமொன ருட்டி
அள்ளுறு குன்றி மேவு மிலைச்சாறு மறுநா ளாட்டே. ௧௯௨

ஆட்டிப்பின் செண்ப கப்பூ வதுவொரு பலங்க ஷாயம்
போட்டொரு தினம ரைத்துப் புகன்றநற் குங்கு மப்பூக்
கூட்டொரு பலங்க ஷாயங் குறைவற வதுபோ லாட்டி
மீட்டுசெவ் வள்ளி முன்போல் விட்டொரு தினமுமாட்டே.௧௯௩

குன்றிபோ லுருட்டிக் கொண்டு கூறுமெட் டெட்டதாகும்
நன்றியில் சுரங்கள் சன்னி நாடுமுத் தோஷமீழை
துன்றிடு மிருமல் காசஞ் சொல்லிய நோய்கட் கெல்லாம்
வென்றிசே ரனுபா னத்தி லிட்டுண விரைந்து போமே. க௱௪

போகுநற் குங்கு மப்பூப் பொடிசெய்து தேனினோடே
ஆகுமிக் குளிகை கூட்டி யுண்டிட வடைப்பு முட்டுத்
தாகநா வரட்சி விக்க லகன்றிடுஞ் சுறனி வெட்டும்
வாகைசேர் மருந்தி னமம் பிராணசஞ் சீவி யாமே. க௱௫

## வெருகெண்ணெய்.

வெருகங் கிழங்கி ராறுபலம் வேண்டுஞ் சிற்ற மட்டியின்வேர்
வருமோ ராறு பலமிடித்து வாரு நீரெண் ணாழியினை
மருவ வவித்து காலொன்றாய் வடித்தங் கதிலே நல்லெண்ணெய்
திருவே நாழி யொன்றிட்டுச் சேரு மதூர மிருவேலி க௱௬

வேர்நன் னாரி யேலமிச்சு விளங்குங் கடுகு ரோகணியும்
சேர்சீ தேவி யமுக்கிரவு தேவர் தாரு பெருங்குரும்பை
நேரு மேல மிவைவகைக்கு நிறையாய்க் கழஞ்சொன் றிடித்துவிட்
பார்கொம் பரக்குப் பலமிரண்டு காடி யிரண்டு படிகூட்டி க௱௭

நாலொன் றாக வடித்துவிட்டு நலமாய்க் காய்ச்சி மெழுகுதனைப்
போலொன் றுறுநற்பதம்பார்த்துப்பொருந்தவடித்தேயுப்புகட்டித்
தோலொன் றூரு முடம்பதனிற் றுவாலை யிட்டு முழுகிவரிற்
பாலொன் றியமென் மொழிமடவாய் பழையசுரமும் பறந்திடுமே

## அமுக்கிரா வெண்ணெய்.

சிற்றமட்டி பலந்நாலோ டமுக்கி ராய்வேர்
சேரெட்டுப் பலமிடித்துக் குறுணி நீரிற்
குற்றமற வெட்டொன்றாய் வடித்தே தள் ளெண்ணெய்
கொள்ளுமொரு நாழிகற்கங் கோட்ட மேலம்
திற்பலியிந் துப்பரத்தை கொம்ப ரக்குத்
தேவதாரு சதகுப்பை முத்தற் காசு
மற்றுமா மஞ்சள்கெச திப்பிலி மாஞ்சின்
மா தனேவே ரதிமதுரந் தகர மோமம். க௱௮

சினத்தின் மிளகுவகை கழஞ்சி டித்துச்
    சேர்த்தபின் மெழுகுபதம் வடித்தே யுச்சித்
தானத்திற் பொருத்தியுட றனிலும் பூசித்
    தான்குடித்து முழுகிவரப் பழஞ்சு ரங்கள்
ஊனத்தி தனிற்சுரங்க ளுடல்வ றட்சி
    யுள்வெதுப்பு முறைச்சுரங்க ளான வெல்லாம்
வானத்திற் பருதிகண்ட பனியே போல
    மாறியகன் றிடுமெனவே வகுத்தா ரன்றே. ௨௦௦

## அரக்கெண்ணெய்—க.

தாமரைவளைபச்சாறு, சாத்தாவரிச்சாறு வகைக்குப்படி-2 பசுவின் தயிர்த்தண்ணீர் படி-4 கொம்பரக்கு ஒருபடி இடித்து நாலுபடி தண்ணீர்வைத்து ஒருபடியாய் வற்றவைத்து வடித்த கஷாயம் நல்லெண்ணெய் படி-க. இவையாவும் ஒன்றாய்க்கலந்து அதில் சிற்றமட்டி, சீந்தில், நன்னாரி, கோரை, அமுக்கிராய், இருவேலி, இலாமிச்சு இலாமிச்சவேர், கோட்டம், மரமஞ்சள், பெருங்குரும்பை, தேவதாரம், அகில், அரத்தை, அரேணுகம், செவ்வள்ளி, பச்சிலை, மாஞ்சில், ஏலம், இலவங்கம், மதுரம், செண்பகப்பூ, கடுகுரோகணி, சதகுப்பை, வெளுத்தற்பிசின்-வகை-கழ-க. இடித்தரைத்துக் கலக்கி ஆறும்நாள் மெழுகுபதத்தில் வடித்து தலைக்குவைத்து மேனும்பூசி முழுக உள்வெதுப்பு, வறட்சி, இருமல், காமாலை, பாண்டுமுதலியன தீரும்.

## அரக்கெண்ணெய்—உ.

சிற்றமட்டி சமூலம், விட்டுணுகிராந்தி சமூலம். மாதற்கிழங்கு, அமுக்கிராய்க்கிழங்கு-வகை-பலம்-கூ-இடித்து கூ-படி தண்ணீர்வைத்து உ படியாய் வற்றவைத்துப் பிழிந்தகஷாயம், பொன்மெழுகு-படி-க இடித்து நாலொன்றாய்வற்றவைத்த கஷாயம், தயிர்த்தண்ணீர்-படி-ச நல்லெண்ணெய்-படி-உ கலந்து அதில், மஞ்சிட்டி, சுக்கு, அரத்தை, கோட்டம், ஏலம், இலவங்கம, நாகம்பூ, தேவதாரம், சிறுமூலம், செண்பகப்பூ, சதகுப்பை, இருசீரகம், மஞ்சள், மரமஞ்சள், கடுகுரோகணி, சந்தனம், மதுரம், கராம்பு

மல்லி-வகை-கழஞ்சு உ நன்னாரிவேர், கோரைக்கிழங்கு, சிந்திற் தண்டு, இருவேலி, இலாமிச்சு, பொன்னாங்காணிவேர், சிந்தனி யார்செங்கழுநீர்வேர்-வகை-பிடி உ அரைத்துக்கரைத்து முன் போல வடித்துமுழுக இராக்காய்ச்சல் அத்திசுரம், எலும்புருக்கி வாட்சிமுதலியன தீரும்.

## மெழுகுசந்தனாதியெண்ணெய்

சந்தனம்-பலம்-அ இருவேலி, இலாமிச்சு, நன்னாரி, தாமரை வளையம், வகை-பலம் ச அமுக்கிருப்க்கிழங்கு பலம் உ சிற்றமட் டிவேர்த்தோல் பலம் ௫ இடித்து தூணிநீர் எட்டொன்றாய்வடித்து அதில் மோர் படி ச இளநீர் படி ச நல்லெண்ணெம் படி ச அரத் தை, சதகுப்பை, கோட்டம், தேவதாரு, அகில், இலாமிச்சு, வெட்டிவேர், பச்சை, கச்சோலம், செண்பகப்பூ, ஏலம், குளவிந் தம் கடுகுரோகணி, பெருங்குரும்பை, முத்தற்காசு, நற்சீரகம், தகரம் வகை கழஞ்சு ச இளநீராலரைத்துக் கலக்கி மெழுகுபதம் வடித்து, புனுகுசட்டம் குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், மீகாட் டம், கஸ்தூரி மேற்பொடிதூவி முழுகிவர பழஞ்சுரம், எலும்புச் சூடு முதலியன தீரும். உடம்புதேறும்.

---

## சுரதோஷம் எ.

### க--சுர அபத்தியதோஷம்.

சுரத்தினின் மந்தத் தாலுஞ் சொல்லபத் தியத்தி னாலும்
கருத்தினிற் பிரமை யோடு கடியதோர் மூர்ச்சை காணும்
வருத்தமாய்த் தாக மிஞ்சு மார்பு நோம் வாய்பு லம்பும்
தெரித்தவிக் குணஞ்சு ரத்தின் சேரபத் தியமாந் தோஷம். உ௦க

### உ திரிசங்கதோஷம்.

சுரமுற்றோர் மாதரோடு சுகித்திடி லுண்டாந் தோஷம்
கருவுற்ற வுடம்பு நோகுங் கருதுநெஞ் செரிவுண்டாகும்
பொருவுற்று விழிசி வக்கும் புலம்பிடு மெழுந்து வீழும்
பரிவுற்றுக் குளிருங் கைகால் பதறிடும் பிரமை காணும். உ௦உ

## ௩ மகாவிஷதோஷம்.

பிரமையுறு காய்ச்சலொடு பிதற்றல் காணும்
பேசரிய வுட்டணமாய்த் தாகங் கொள்ளும்
பெருகிமிக வயிறெரியு மூர்ச்சை யுண்டாம்
பேணுகின்ற நாடியது வாத மந்தம்
தெருமந்து சஞ்சலிக்கும் வேர்க்கு மேனி
தீப்போல வங்கமெலா மழற்சி யாகும்
மருவியே யுழலையிருந் துப்பிசமு மாகு
மாவிஷத்தின் றோஷமென மதித்தி டாயே. ௨0௩

## ௪ மகாசுரதோஷம்.

மதித்திட்ட மகாசுரத்தின் றோஷங் கேண்மின்
மயக்கமொடு தியக்கமுமாய்ப் பிரமை கொள்ளும்
விதித்திட்ட குளிருடனே காய்ச்ச லுறும்
விட்டுவிட்டுத் தான்காயுந் தாக முண்டாம்
கொதித்துமிகத் தலைநோகு நாவ ரட்சி
கொள்ளுமடி நாக்கதுவு முள்ளுப் போலாம்
கதித்துமிகப் புலம்பலுமாய்ப் புரளு மேனி
கழறினரிக் குணமறிந்து கலைவல் லோரே. ௨0௪

## ௫ சிங்குவாததோஷம்.

சுரங்காயு நாக்கிலுறு வாத தோஷஞ்
சொன்னாக்கி விறம்பொன்னும் வரட்சி காணும்
அரம்போல முட்கொண்டு வெடிக்கு நெஞ்ச
மதிரவே காய்ச்சலொடு மூர்ச்சை காணும்
புரக்தோய வேர்வைசிந்து முடல்பு ரட்டும்
புத்திமிக வேதியங்கு மருட்சி யுண்டாம்
வரம்போற்று மவர்க்கருளிக் கதிரை மேவும்
வடிவேலன் குறுமுனிக்கு வகுத்த வாறே. ௨0௫

## ௬ கிட்டின சிங்குவாததோஷம்

உண்மைபெறு கிருட்னசிங்கு வாத தோஷ
முண்ணாக்குக் கறுத்துலர்ந்து முள்ளுப் போலாம்

அண்மைபெற வெழுந்திருக்கும் பிரமை யாகி
யங்கமெலாந் தினவெடுக்கும் வெயர்வை யுண்டாம்
திண்மைபெற மேன்மூச்சோ டிழலை காணுஞ்
சிறுகவே சுராங்காயு முடல்க றுக்கும்
வண்மையறக் கைகால்க ளசந்து சோரும்
வாகடநூல் வல்லவர்கள் வகுத்த வாறே. உ0௬

## எ அதிசாரதோஷம்

விதிமருவு மதிசார தோஷந் தன்னை
விளம்புவன்கேள் புறங்குளிரு முள்ளே காயும்
கதிமருவு கைகால்கண் மிகக்கு ளிர்ந்து
கம்பித்துப் புலம்பியே யுவாந்தி பண்ணும்
சதிமருவு மிருமலொடு விக்கன் மூச்சுத்
தாழாதே யெழுந்தாடி யோடும் வேர்க்கும்
ததிமருவு சீதாத்த மிகுந்து தூக்கந்
தனையொழிக்கும் பொல்லாநோய் சாற்றி னோமே.

## தோஷம் பலவுக்கும்

## கண்டாவிழ்தச் சூரணமும் மாத்திரையும்

உருத்திர மணியே மானின் கொம்புறு மதுர மேலே
ராத்தைதிப் பிலிக ராம்போ டானையின் றந்தங் கோட்டம்
திருத்திகழ் சம்பீ ரத்திற் செழுவிதை யக்க ருவும்
கருத்துடன் கழஞ்சொவ் வொன்று கருதுகோ மதமி ரண்டே.

எழுமுறை புடமிட் டப்பா லெடுத்திடு சூர ணத்தை
வழுவறச் சிமிழில் வைத்து விதிமுறை வழங்கக் கேண்மின்
இழுதுடன் றேனுங் கல்லுக் காரமிங் கிவற்றி னோடு
பழுதறக் குழப்பி யுண்ணப் பறக்குமே நாழுட் டோஷம். உ0௭

நாக்கினில் வரட்சி வாய்ப்புண் ணக்கர நீர்க்கடுப்புத்
தாக்குறு முவாந்தி விக்கல் சாற்றிய தோஷ மெல்லாம்

போக்குமிங் கிவற்றி னோடு பொன்வெள்ளி பவள முத்துத்
தூக்குகஸ் தூரி ஞாழல் சொல்லிய புனுகு லிங்கம் உகo

வகைக்கொரு கழஞ்சு கூட்டி மங்கையர் பாலி னாலும்
முகைப்படு செண்ப கப்பூ மொழிந்திடு கஷாயத் தாலும்
தகைப்படு பன்னீ ராலும் வகைக்கொரு சாம மாட்டி
வகுத்திடு முழுந்துபோல மாத்திரை நிழலுலர்த்தே உகக

சொற்றவிக் குளிகைதன்னைச் சுகந்தரு மனுபா னத்தில்
உற்றிடச் சன்னி தோஷ முவாந்திரா முள்ளு விக்கல்
செற்றிடு சுரமே யாதி தீர்ந்திடு மென்றார் வேலன்
பொற்றிரு வடிபூ சிக்கும் புண்ணிய முனிவ ரம்மா உகஉ

சுரரோகநிதானம் முற்றுப்பெற்றது.

---

# பரராசசேகரம்.

## ஐந்தாவது
## சன்னி நிதானம்.

ஆதியாங் கயிலை தன்னி லமர்ந்தரு ளமல மூர்த்தி
நீதிசேர் நந்திக் கந்தா னிகழ்த்திய வாயுள் வேதத்
தோதிய சன்னி யீரொன் பானென வுரைத்தா ரன்றே |
தீதிலா தவற்றின் பேருஞ் சேர்ந்திடு குணமுஞ் சொல்வாம் க

### சன்னிதோன்றுங்காரணம்

மந்தத்தின் வலிமை யாலும் வருஞ்சல தோஷத் தாலும்
முந்திய கிரக தீமை முடிந்தசக் காத்தி னாலும்
வந்திடுஞ் சுரத்திற் குற்ற வலிமையி னாலு நீங்காத்
தொந்தமாம் வியாதி யாலுந் தோன்றுமுத் தோஷத் தாலும் உ

விடகலை தன்னிகாடி விஷப்பிருந் தோட லாலும்
கட முலை யவர்பால் வைத்த கனிப்பெரு மோகத் தாலும்

கடனிகர் செல்வ மாந்திக் கலங்கிய மிடியி னாலும்
திடமுறு மரபுக் கெய்தாத் தீமைவந் தெய்த லாலும் ௩

தயிர்பழ மிளநீ ரெண்ணெய் சாருமா வப்பம் பிட்டு
அயிலுநீர்ச் சோற்றின் மந்த மருந்துநெய் யிறைச்சி மாந்தம்
பயிலுறு முழுக்கி லெண்ணெய் பறிந்திடாத் தோஷத் தாலும்
உயிரினை மயக்கி வந்த சன்னியே யுடலிற் சேரும். ௪

## வாதத்திற் சன்னிதோன்றுங்குறி

வாதமு முழுக்கூ றெய்த மந்தமுஞ் சுரமு மெய்தச்
சீதமுங் குளிரு மெய்தத் திமையின் வலிமை யெய்த
ஊதைசேர் வாதந் தானு முடனிறைந் துயர வேறிப்
பேதமு மிருந்து காட்டிப் பெலத்திடும் வாத சன்னி. ௫

## பித்தத்திற் சன்னிதோன்றுங்குறி

பித்தமு முழுக்கூ றெய்தப் பெருமந்த சுரமு மெய்த
ஒத்திடு பித்தந் தானு முடனிறைந் துயர வேறிச்
சித்தமு மயக்கி யொன்றாய்த் தியக்கியே வெறிபோற் பேசும்
கத்திடுங் கழிந்து மூடிக் கதித்திடும் பித்த சன்னி ௬

## சிலேற்பனத்திற் சன்னிதோன்றுங்குறி

சேற்பன முழுக்கூ றெய்தத் தின்றிடு மந்த மெய்த
ஏற்பன கன்மந் தானு மிடர்செயுங் கால மெய்த
ஆற்பன சேற்பந் தானு மடர்ந்துட னிரம்பி யேற
வேர்ப்பன சேற்ப சன்னி விடமுறத் தோன்றுங் கண்டாய் ௭

இப்படி யனேக தோஷ குணமுடன் சன்னி தோன்றி
ஒப்பிடு மறிவை மூடி மயக்கியே யுயர வேறிச்
செப்பிட வரிய தாகித் தெளிவிலா மூட மாகிக்
கைப்படு நெல்விபோலக் கண்டிடு குணமுஞ் சொல்வாம். ௮

## சன்னிவருங் காரணமும் பெயரும் முதலியன

மானிடர்க்குச் சன்னி வருமேது வெங்ஙனெனில்
ஈனமற முன்னோ ரியம்பினார்-கானமரும்
பூங்குழலாய் மந்தப் புசிப்பினாற் கொண்டலினால்
ஓங்கு மழைபனியா லொண்டொடியார்-பாங்காய்ப்
புணர்ச்சி மெலிவாற் பொருமுநீர்க் கொள்கையாற்
கணக்கன்றன் பார்வையாற் காண்வெயிலால்-கணக்கிலா
ஓட்ட நடையால் விரணத்தாற் றுக்கத்தால்
வேட்டபுளி யாற்சுரத்தால் வெவ்விடத்தால்-வாட்டமிலா
எண்ணெய் முழுகுமிடத் தேறுநீர் மாற்றத்தாற்
பெண்ணார்கள் கெர்ப்பம் பிறக்கும்போ-தண்ணும்
புளிச்சித நீர்க்குளிராற் பின்பருந்த லாலும்
கழிச்சனீர்ப் பாட்டாலுங் காணீர்-தெளிச்ச
பனைநீர் மதுவதனாற் பாரிலுறு நஞ்சாற்
புனைமே கலையாய் புகலக்கேள்-சினமேவு
சன் சன்னிவரு மென்றறிநீ சன்னி யெனவறிய
னிக் அந்நேரம் வாய்மே லதரத்தில்-மின்னும்
குண உருத்திராக் கந்தெனி லுரைத்திடப் போதே
மறிய கருத்துற வோடிக் கழுக்கில்-முருக்கிதழீர்
தோஷ மெனவறிநீ தோஷத்தின் பேரதுவும்
மாசறு சாத்தியம சாத்தியமும்-பேசும்
குறியுங் குணமுங் குறித்தறிய வேண்டில்
அறிவை பதின்மூன்ற தாகும்-நெறியான
சன் சாத்தியமோ ராறுஞ் சாரு மசாத்தியங்கள்
னி எத்தரிய வேழென் றியம்பினார்-சாற்றிலவை
கட சந்திரிகந் தாந்திரிகஞ் சார்சித்த விப்பிரமம்,
ல் அந்தமுறுங் கர்ணிகமு மாயிழையீர்-முந்தவே
சாத் சாற்றிய சிங்குகந் தகக பிரலாபம்,
திய ம்-சுர மாற்றலா மோராறும் மானேகேள் வேற்றுமையாம்
அசா அந்தக சன்னி யருட்பொக்க நேத்திரமும்,
த்திய முந்தவபி ஞாசசன்னி மொய்குழலீர்-சிங்கை
ம்-ஏ உறுகண்ட குற்சகமு மோதுசீ தாங்கம்,

அசாத்திய மறுகுமிரக் திட்டிசன்னி,மாதே-அறிவை
ம் ீல் உருத்தாங்க மேழு மொழியாத தென்னக்

1. அந்தக கருத்தா லறிபக் கடவை-விருப்பாகச்
சன்னி. செய்யுங் குறிகுணங்கள் செப்பக்கே ளந்தகனும்
மெய்யே யிறைத்திருக்கும் வேண்டுநீர்-வெய்ய
பாதாபஞ் சென்னி பதைத்தே நடுக்கல்
உரையாடா மந்த முறுங்கால்-புரையாக
வீங்குஞ் சுரம்வாந்தி விக்கல் மொழிபிதற்றல்
ஓங்கு மசதி யுளதாகும்-பூங்குயிலே
நாக்கறுக்குங் கைபுறண்டு நாடுசல முங்கழியும்
தாக்கும் வயிறிரையுந் தாள்குளிரும்-மீக்கொள்
தலைசொறியு நாட்டமத்திற் சண்டனார் சேர்க்கும்
நிலையறித னேர்மையா நீடும்-அலைவுசெயும்

2.போக்க பொக்கநேத் ரக்குணங்கள் புற்புதமா கும்புகையும்
நேத்திர தக்கபனி நீர்போலச் சாடுமே-பொக்கம்
சன்னி. பலபிதற்றுங் காதடைக்கும் பாரிலெட் டாகாள்
கொலைசெய்யு மென்றறிநீ கோதாய்-குலவும்

3. அபநி யாசசன் னி அபநியாசஞ் செய்குணங்க ளானனமும் வீங்கும்
செவிகேளா நாடியுஞ் சீதமாம்-குவியும்
முலையிர் சுரமாகு மேன்மூச்சு முண்டாம்
கலைநாசி தானுங் கறுக்கும்-மலரான
வாயதுவும் பேசாது மாளுமே வைந்தாநாள்

4. கண்ட குற்சசன் னி வீயகண்ட குற்சம் விளம்பும்பொய்-சாய்வாகக்
கந்தாமுங் குன்றுமே கம்பமதா குஞ்சுரமும்
மந்தம் பிரமை தலைவலியாம்-தந்தமதில்
ஈறு கரைந்திரஞ் சோருமே நாமுள்ளசம்
வேறு முதரம் மிகப்பொருமும்-கூறுகின்ற
தாகம் பிரதாபந் தளர்வாந்தி விக்கலொடு
மோகங் குவளைபெரு மூச்சிளைப்பும்-ஆகமது
புண்போ லுளைவாம் பொருந்துபதின் மூன்றுநாள்

விண்பா லொடுங்குமதா வென்றறிநீ-தண்சேரும்

5.சீதாங்க சீதாங்கம் வேர்வை யுடல்குளிருஞ் சேற்பமெழும்
சன்னி மாதே வயிறெழுகும் வாக்கிலிக்கல்-போதே
பரிதாபந் தாகம் பதறி மிகைப்புத்
தரைமேல் விழுந்தெழுந்து தள்ளாடும்-புரையாம்
இருமல் பெருமூச்சோ டேக்கலிவை யுண்டாம்
மருவுபதி னைந்தாநாள் மாளும்-விரைவாம்

6. இரத் இரத்நிட்டி சன்னி யிதுநா வெடித்துப்
திட்டிசன் பெருத்த விரத்தம் பிதிராம்-வருத்தும்
னி சுரமூர்ச்சை சென்னி சுழற்றல் பெருமூச்
சுரைநாக் கறுத்தல் வயிறெழுகல்-திரைபோல்
இளைப்பொடு விக்க லிதுநாளீ ரைந்திற் 8 நாள்
பிழைப்பில்லை யாமரணம் பேண்ணே-இழைத்த

7. உருத் உருத்தாங்க மீருதடு மொட்டி யுலரும்
தாங்கசன் வருத்து மிருமன் மயக்கம்-பொருத்துறு
னி தொண்டையு நோகுஞ் சுரம்பிரமை நெற்றிவெயர்
விண்ட பிரதாபம் விக்கலுமாம்-மண்டி
அபய மிடுந்திருகி யாக நடுக்கும் (சுவைபற்றிய இடுப்புத்தாவு) T.
கபமா யிளைக்குங் கறுக்கும்-சபையறியப்

சாத்தியம் பத்தாநா ளின்மரணம் பாவா யசாத்தியங்கள்
6 ல் அத்தனர் சொன்ன குணமறிவை உத்தமமாம்

சந்திக 1. சந்திரி சந்திரி கண்ணாங்கள் வந்துறு குணங்கள்
கசன்னி முந்துத ரங்கள் சந்தக ரங்கள்
கொந்த துளைந்து மந்தமெ ழுந்து வாத, பித்தலம்ப.
உந்தவ யர்ந்து முந்தவெ ழுந்து
நோஞ்சரா ணங்க ளாஞ்சிர மெங்கும்
குத்துவலி நித்திரையு மற்றிருமல் பற்றிவெயர்
சத்திநெகிழ் முத்துதலை புத்திமயக்-கித்தனையும்

2. தாந்தி தீர்ந்திடு மேழிற் றுந்திரி தோஷம்
ரிகசன்னி எட்ந்துறு காலை தியந்திடு நீர்கள்

காய்ந்துட லேறப் போந்தது தாகம்
சோர்ந்துவரும்
ஊர்ந்தது பார்வை சாய்ந்துயி லாதல்
சோர்ந்துகண் ணீர்கள் பாய்ந்துடன் மேலும்
வாந்தியதாய்ப்
புலம்பல்வயிறுளைந்துவா னுடம்புளைதலகஞ்சொறிதல்
புகைந்திருமல் துளங்கமுறல் விழுந்தெழுதல் குளிர்ந்
புழுங்கலிவைனையந்ததனில் [திடுதல்

3. சித்தவிப்பிரமசன்னி உய்யும்பிரமை செய்யுங் குணங்கள்
நையுஞ்சுரமு மெய்யுங் குழைதல்
பொய்யும் பகர்தல் வெய்தும் பொருமல்
பையவே
நடித்திடல் படித்திட னடுக்குத னகைத்திடல்
அடித்திடல் பிதற்றுத லாற்றுதல்-மடக்கொடி
விழுத லெழுதல் புரளல் வெருவல்
அழுதல் வினவ வலறல்-சுழலிவை

4. கர்ணிகசன்னி இருபத் தோர்தின மகில்விடு மெனுமொழி
இதுசெய விவையறி செவியடி களமுறும்
அதிலழ லுறவெடி படுமலால்
மறுகநாவு-லர்வுமாகி
விரைவாகி யயர்வாகி யுரைநாச மதுவாகிப்
பாவுசுர மோடுழலை தாகபா தாபமோ
டுபாதியாகிப்
பூவை யெழுந்துவீழு மாகங் குளிர்ந்துசோரும்
காது மிரைந்து மேல்கள் தளர்ந்து
கால்க ளயர்ந்து பேச றகிர்ந்து
நாளு மொழிந்துவாய்

5. சிந்நுகசன்னி வயங்குநாள் தொண்ணூறு மாறினின் மீளும்
வேறு சிந்நுகவாறுகேள்
கூறிடு நாவு மீறுவு...ாகும்
தாகமு மோகமுங் கோபமுமாய்ச் சீறும்

விக்கல் பெருத்திடுதல் கக்கல் துராப்பெழுதல்
வெப்புற் றிளைத்திடுதல் வெட்கிக் குரைப்புறுதல்
சத்தித் துறக்கமற லச்சப் படுத்திடுதல்-அழகாகப்
பிச்சுப் பிதற்றிடுதல் பற்றற் றயர்ச்சியுறல்
மெத்தத் துளக்குறுதல் பொச்சுப் பழித்தலிவை
எச்சிற் றடித்துளறல் நச்சுத் தடித்துவரும்
துயில்விழி மங்கை யொருபதி னைந்தில்
விடுமிது வென்று மறைகள் விளம்பும்
அறிவ தறிந்து வழுவற விந்த
அகில தலங்க ளறியவே மொழிவனே

6. பிரலா சோர்பிர லாப தோஷ மானது
பசன்னி சேர்குறி மேலு மோத லாவது
வேர்சுர மேய தாகம்
வேதினை வாயு காவும்
நீரற வேயுவாதி
சேருத லாகமீது
சாருற வாத மேவிக்
கால்கள் சோர்வுறல்
ஈளைபோன் மூசுதல்
வாயுநாள் வெறுப்புறல்
அழுதல் நகைத்தல்
எழுத விருத்தல்
மதிமயக்க மொடுபுலப்பம்
அதிக விக்கல் மொழி பிதற்றல்
சதிசெய் சத்தி யிருமல் பற்றி
உடல் நடுக்கி விதிபோலப்
பத்தொரு நாளி னுற்றது தீரும்
அத்தினை யீயு முற்றறி வேறு
சிற்றிடை மாது கட்ட வசாத்திய
மெய்ப்படிசேளுஞ் செப்புவ னூனும்
தப்புறவே

o ஒதிய நாள்களி லேவிடுனை யாதியு
மோர்திரி யேழொடு மோரவ வேதினை
யாமதி லேமெவி யாவிடில் வேறய்யமோவிலே
மாதுகேள்
ஆதியி †ஊனையாறு தீயிலேதிரி நீரிடையேசது
வீதியிலே யுறுபேர்கள்
வேதவீச னுருளை தேசுதான்—ஒது
சிரத்திலுறு தோஷம் வேறறி
உடற்குளெழு தோஷ நீயறி
சினத்துவரு *வாத மோமுன்
னுரைக்குமொரு நாலு மேயறி
சிகிச்சைகளும் வேறு வேறறி
உணர்த்து மறைநீதி கூறிய—உறுபேர்கள்
குகிரைவலி வாத சன்னி
சரிரமொரு பாதி சன்னி
கொடியதனு வாத சன்னி—அதனோடு
சதிசெயுடல் மீது துன்னும்
மலசவலி வாதசன்னி
சதுவிதமு மாகநண்ணி—அறிகாலே
கம்பபிர லாபதோஷ
மென்பமுதலாக வேயுள
முன்புசிவ னோது மாறினை—யறிநீயே

---

o ஒதியநாள்களிலே வரும் விஷணையாகியு
மோர்திரியேமொடு மொன்று வேதினை
யாமதிலே மேவியாவுறில் என்று ஓர் பிரதியிற் காணப்படுகின்றது.
ஒதியநாள்கள் என்பதற்கு 3–5–7–9–11–13–17–18–21–27 ஆகிய
இவைகள் என்று மற்றோர்பிரதியிற் குறிப்புக் காணப்படுகின்றது.

†ஊனையாறு—வாதத்தில் ௬. தீயிலேதிரி-பித்தத்தில் ௩. நீரிடையேசது—சிலேற்பனத்தில் ௪. ஆக ௧௩.

*வாதத்தில் முன்னுரைக்கும் நாலுசன்னியாவன கீழ்க்கூறிய குதிரைவலிவாதசன்னி, பாரிசவாத சன்னி, தனுவாதசன்னி, மலவாத சன்னி என்பன. இவற்றிற் பிறப்பன உ–உட்பட வாதத்தில் ௬. இவை முதலியவற்றின் குணம் சிகிச்சைகள் பின்னர்க் கூறப்படும்.

தேகம் பாரிசகடு தோஷமு முன்பிற்
கொல்லுமோ கொல்லாதது
நம்பப்படுமோ படாதது
முந்துபெரியோர்கள் கூறிய முறையறி
வெம்புகுதிரையின் வலிபொடு பலமுறு வலியிவை
கொடியது விடுகினும் விடுமேகாண்
அதுசெயும் வகைகளு முதுகுண மெவைகளு
மறியவா யுண்மறை யடைவாயே
பொதியத்தகத்திய முனியியற்றியிடு சிகிச்சைவித
மவற்றை யறியதற்குளொரு
|| பொடிக்குவகை யுரைத்திடுவ
மறியக்கடவையே.

சன்னி நிதானங்கூறும் இச்செய்யுளின் முற்பாகம் கலி வெண்பாவாகவும், பிற்பாகம் வண்ணச்செய்யுள்போலப் பல சந்தங்கள் விரவியும் நடந்து முடிகின்றது. பிற்பாகத்தில் அனேக தவறுகள் இருக்கலாகும். ஐந்து பிரதிகள்வரை அகப்பட்டிருந்தும் அடி தொடை முதலியவற்றைச் செப்பஞ் செய்துகொள்ள முடியவில்லை. பிரதிகள் யாவும சில வேறுபாடுகள் காணப்படினும் ஒன்றைப்பார்த்து ஒன்று எழுதினதுபோல ஒரேவிதமான பிழைகளே பெரும்பாலும் விரவியுள்ளன. சிலவற்றிற் சில அடிகள் குறைந்தும் சிலவற்றிற் சிலஅடிகள் கூடியுமுள்ள வேறுபாடுகளே அதிகம்.

இனி, இதன்பின் மேற்படி கந சன்னியின் குணமும் சிகிச்சையும், அவற்றிற் கிளைத்த சன்னி கஅ-ற் குணமும் சிகிச்சையும் ஒவ்வொரு பிரதியிலுமே காணப்படுகின்றன. ஆயினும் 13 சன்னியிற் குணங்கூறும் செய்யுட்களோ பிரதிகள்தோறும் வெவ்வேறே. பெயர்களிலும் சிற்சில வேறுபாடுகள்உள்ளன. சிகிச்சை முறைகள் இரண்டொரு பிரதிகளிற்தவிர வனையவற்றிலெல்லாம் வெவ்வேறகவேயுள்ளன. அதன்பின் வரும் கஅ-சன்னிகளிலும்

|| இப்பொடி பின்னர்க் கூறப்படும்.

சிகிச்சைமுறைகள் பெரிதும் வேறுபடுவன. இவ் வேறுபாடுகளின் விளைவுக்குக் காரணம ஒன்றும் புலப்படவில்லை.

செய்யுட்கள் பிரதிகள்தோறும் வேறுபட்டிருப்பினும் ஒரு பிரதியிற் கண்டவண்ணமே இங்கு பதிப்பிக்கப்படுகின்றது.

## சன்னி 13-ற் குணமும் சிகிச்சையும்.

### 1. தாந்திரிகசன்னியின் குணம்.

நடுமேவு நீரற்று வெஞ்சுர மிருந்தே
　　நடுக்கம் மயக்க முளதாய்
உடலாதி வலுவற்று வதனஞ் சிவந்தசன
　　முணவின்றி வேர்வை யுளதாய்க்
கொடிதாகி யேயுற்ற வதிதாக மிஞ்சிக்
　　குறித்த விருகை கால்கடாம்
தடுமாறி யேயுற்ற தேகங் குலைந்தவது
　　தாந்திரிக சன்னி யிதுவே.

தாந்திரி கன்று ஞானை தலைபசைத் திடல்போற் காட்டும் [லும்
சோர்ந்துநித் திரையேகொள்ளுஞ் சொல்லெலாம் பொய்யேசொல்
காய்ந்துடல் பதறும் வேர்க்குங் கறுத்திடு முதடும் பல்லும்
வாய்ந்தவிக் குணங்க டம்மை மதியினுற் கண்டிடாயே.

### சிகிச்சை.

#### குடிநீர்.

அருந்து மாடா தோடையுட னரிய சுக்குக் கொத்தமல்லி
பொருந்துங் கண்டங் கத்தரிவேர் போந்த கடுகு ரோகணியும்
திருந்தீர் நாழி நீர்விட்டுச் சிறுகக் காய்ச்சி யுழக்காக்கி
விரும்பிக் குடிக்கிற் றந்திரிகன் விட்டுப்போகுங் கண்டீரே,

#### தைலம்-புகை-அஞ்சனம்-

கொண்டதோர் வசம்பு காயங் குன்றிவித் தெட்டிவித்தும்
இண்டைவேர்சர்ப்பக்கண்ட மிவற்றைவெப்பெண்ணெய்வையாய்
சுண்டைவேர் குதிரைப் பாதஞ் சொல்லுமைங் காயத்தோடே
அண்டையிற் புகைத்துக் கண்ணி லஞ்சன மெழுத நன்றே.

## 2. அந்தக சன்னியின் குணம்.

அந்தகன் கோபமாகி யறியாது விழியை மூடும்
வங்கபே ராரோ வென்னும் வாய்நாக்குக் கசக்கு மிக்க
சிந்தனை பலவுண்டாகிச சிரித்திடும் புலம்பிக் காட்டும்
கொந்துசே ரளகமின்னே கூறுமுன் னடுக்க மின்னும்,
அயதியெனு நித்திரையி லறிவு பித்தா
யதிகாக மரைக்குமேற் சுரமுண்டாகி
வயிறிரைந்து கழிச்சலுமாய் நீரும் போகும்
வாய்நாக்கி னுடன்பல்லு மிகக் கறுக்கும்
பயமுறவே விக்கலுமா நிலம்பு றண்டும்
பன்னுமுகந் தலைசொறியுங் காலுங் கையும்
புயமுட்னே யுளையுமிகக் குளிருங் காட்டும்
புகன்றனரந் தகனென்று கலைவல்லோரே.

### சிகிச்சை.

#### குடிநீர்.

கடுகு ரோகணி வேப்பீர்க்குக் கடிய கோட்டஞ் சுக்குடனே
வெடிய வெட்டி வேர்த்தண்டு மேலாஞ் சிறுகாஞ் சோன்றியிவை
மடியக் காய்ச்சி யிறுத்தாவின் வருரோசினை தேன் றிப்பிலிதூய்க்
குடியா யந்தக சன்னிகெடக் குறித்தே புவியிற் கூறினரே.

பூநாக முருங்கைப் பட்டை புதியமுக் கடுகு நீரில்
தானேர வெட்டெடான் ருக்கிச் ¶சக்கரங் கூட்டிக் கொள்க
ஈருத மாட்டின் கொம்போ டிங்கிவை புகைப்பி டிக்க
ஊறோடு மெண்ணு நாங்கு மூள்ளிவேப் பெண்ணெய் வையே.

## 3. சித்தவிப்பிரமை சன்னி.

சித்தவிப் பிரமை சன்னி செய்குணம் பிரமை யாகி
மெத்தவே சுவாச மேவி விழித்திடுங் கண்சி வப்பு
முத்தென வெளுப்புத் தோன்றி முகமிரு கைகால் வேர்க்கும்
பத்திய மிறங்கி டாது பதறிமெய் திடுக்கிட் டேங்கும்.

¶ சக்காம்-விட்டுணுசக்கரம். இது பின்னர்க் கூறப்படும்.

ஏங்கியே நினைவழிந்து பாடி மாடி
மிருக்குமிடம் விட்டோடு முடல்க றுக்கும்
வாங்கிமேற் சுவாசமா யிரைப்புக் கொள்ளும்
வாதமிகக் குறைந்துபித்த மதிக ரிக்கும்
தூங்கியே வாய்பிதற்று முடம்பெ ரிச்சல்
சொல்லியபற் பலகுணமாம் பேதி காணும்
தீங்கில்லைச் சாத்தியமா மென்று முன்னோர்
செப்பினரா யுருவேதத் தெளிந்து தானே.

## சிகிச்சை

### குடிநீர்-கண்டூஷம்-புகை

வெள்ளை யுள்ளி முடக்கொத்தான் வேம்பி னுக்குத் திரிகடுகு
முள்ளு முருக்குப் பட்டையொடு முன்னேகுடிநீர்சுராங்குசமும்
எள்ளினளவு பூபதியு மிட்டாற் றீருங் கண்டூஷம்
கொள்ளப்பாம்புச்சட்டைமஞ்சள்குதிரைக்குளம்பும்புகைப்பீரே

### தைலம் அஞ்சனம்

முட்டைத் தைலம் வசம்புள்ளி முதிய வெருக்கம் பால்சிறங்கை
எட்டி வித்து நிலவேம்பு மெண்ணெய் வெங்தே விடும்பாம்புக்
கிட்டங் காம்பு வெற்றிலைநீர் கீழே சிந்தா தேபிழிந்து
விட்டேயரைத்துக் கண்ணிலிட வெருவி யோடும் விப்பிரமை. உக

## 4 கர்ணிக சன்னியின் குணம்

சொல்லுங் கர்ணிக சன்னியது தொண்டை கட்டும் விக்கலுமாம்
வில்லாய் வளையு முடல்நடுக்கும் வெடித்துநாக்குக்கறுத்திருக்கும்
பல்லுங் கிட்டு மிரைப்பிருமல் பருகத்தண்ணீர் மிகவேண்டும்
அல்லார் குழலாய் செவிமூல மதைக்குஞ் செவியுங் கேளாதே. உஉ

## சிகிச்சை

### குடிநீர்

சிறுதேக் கரத்தை மூன்றுபலை செப்புங் கடுகு ரோகணியும்
வெறிசேர்கோட்டம்வசம்புமுத்தம்வேண்டுஞ்சிறியவழுதலைதான்

நிறைசேர்பலமொன் றதுகொண்டுநீர்விட் டெட்டொன் றதுவாகக்
குறுக விறுத்து முலைப்பாலுங் கூட்டிக் கொடுக்கக் குலைந்திடுமே

## சுரசம் அஞ்சனம் முதலியன

நாங்குழ் முருங்கைப் பூவுள்ளி நருக்கிப் பிழிந்து சிந்தூரம்
பாங்கார் சிந்தா மணியிடுக பன்னீர் கண்ணிலஞ்சனமும்
தேங்காய்நெய்யோடெண்ணெய்செம்போத்தெச்சம்வெள்ளையுள்ளி
வாங்காய் நாவிபோட்டுவைத்து மரிசம் புகைகண் டூஷமிடே. உச

## 5 சீவகசன்னியின்குணம்

சீவகச் சன்னி செய்தி செருமியே யிருமிக் கக்கும்
மேவிய சுரமெடுக்கும் வெருவவே மெய்யிற் பாதி
நாவது தடிக்கும் வாயும் நாறியே விரிந்து புண்ணும்
காவிலங் குயிலி னளே கருதுமிக் குணங் கடாமே. உரு

## சிகிச்சை

இஞ்சிச் சாறு தேனுடனே யிடுசக் காரமும் பூபதியும்
மஞ்சள் வசம்பு மைந்தெண்ணெய் மாலைகுன்றி கோழிமுட்டை
மிஞ்ச விட்டுத் தைலமத்தி வேளை சுக்கு மெருக்கிலையின்
பஞ்சும் புகைத்துத் திப்பிலியைப் பாகற் சாற்றிற் கண்ணிலிடே

## 6 பிரலாபசன்னியின்குணம்

பிரலாப முன்கால் விங்கும் பிதற்றிடு மிருமல் விக்கல்
பரிவுறமூர்ச்சை யுண்டாம் பலமொழி புலம்பும் ரோமம்
விரிவுறச்சிலிர்க்கும் வாதம் மிகுத்திடு முடம்புநோகும்
தெரிவுற வெரிச்சல் காங்கைசேர்ந்திடுங்கபமுங்கொள்ளும். உஎ

தொடியே வளரும் பிரலாப சன்னிக் குணங்கேள் சுரமிரவில்
கடிதாய் வெதும்பு முழற்சியுண்டாங் கடிபோ லெழும்பும் பிதற்றுமழும்
உடனே சிரிக்கும் படுக்கவிடா துறக்க மறுக்கும் பயம்பேசும்
படிமேற்கோபமிகுமதிர்ச்சிபண் ணும்பலகாற்பறைந்திடுமே உஅ

## சிகிச்சை

## குடிநீர் அஞ்சனம் முதலியன

பறையுமிதற்குச் சிறுதேக்குப் பகர்காஞ் சோன்றி நிலவேம்பு
தறையிற் கோரைக் கிழங்குவழுதலையின் வேரோன் றிருகழஞ்சு
நறிய புனல்நா ழியுட னன்று யெட்டொன் றுணக்காற்
செறியப் பருகப் பிரலாப சன்னி தீருந் தெரிந்துகொள்ளே. ௨௯

கொள்ளுநூ நாக மிஞ்சி கூறிய வோமஞ் சுக்குத்
தள்ளருங் குடிநீர் காய்ச்சிச் சாற்றிடு சுராங்கு சந்தான்
எள்ளவின் மருந்து வாத ராட்சத னிவற்றை யூட்டி
விள்ளுறு மிடபக் கொம்பு செண்பகத் திறகு மஞ்சள் ௩௰

ஐவிசல் புகைபிடித்து மஞ்சனங் கண்ணிலிட்டும்
பையவே வசம்புந் தேனும் பரிவொடு நாக்கிற் றீட்ட
மெய்புறு பிரலா பத்தின் மிகுசன்னி தீருமென்று
மையறீர் முனிவன் கூறும்வாசக முணர்ந்து கொள்ளே ௩௧

## 7 உருக்குநாத சன்னியின் குணம் -

## சிகிச்சை

உருக்குநாத னுவரனு முடம்பு வெதும்பும் விக்கலுண்டாம்
பெருக்க விருநீர் பேதிசெயும் பேய்கொண் டாற்போல் வீண்புலம்பும்
இருக்கு மயக்குங் கண்மூடி மிருமலாகு மச்சாரம்
முருக்கி னிலையிற் சுரசமதில் மொழிந்த பூபதியிட்டருந்தே ௩௨

கெந்த மிரதஞ் சாதிலிங்கங் கேவீர் நாவி முட்டையினில்
வெந்த வெண்ணெய் தனிற்றேய்க்க மிளகு வசம்பு சுக்குள்ளி
சந்தங் கோட்ட மெருக்கலம்வேர் சாரம் பன்றிக் கொம்புடனே
முந்தப் புகைக்கச் சன்னியெலா முறையிட் டோடுங் கண்டாயே

## 8 சீதாங்கசன்னியின் குணம்

சீதளங் கொள்ளுஞ் சந்து விறைத்திடு மிளைப்பு வாந்தி
காதுள மந்தம் வேர்வை கண்விரிந் தகன்று காட்டும்

ஓதுவாய் விழியுங் கூட வுறுநிறங் கறுப்ப தாகும்
பேதமா யுடல்ப தைக்கும் பிதற்றிடும் புலம்பல் கொள்ளும் ௩௪

## சிகிச்சை

சொற்றிடு கண்டங் காரி தாதுளை யாடா தோடை
வற்றிடு குடிநீர் தன்னில் மருந்துகேள் விசய ராசன்
மற்றுமக் கினிகு மாரன் மதுவினி லிட்டுப் பன்றி
உற்றிடு விட்டை சுக்குத் திப்பிலி மிளகி னோடே ௩௫

எருக்கினிற் கொம்பு தானு மிசையவே புகைபி டித்து
மருக்கிளர் கூந்த னல்லாய் வரிவிழிக் கஞ்ச னந்தான்
பெருக்கவே திட்டி நாவிற் பேசுகண் டீஷஞ் செய்யின்
உரைத்தசீ தாங்க சன்னி யொழிந்திடு மென்றுர் முன்னோர் ௩௬

## 9 விக்கநாதசன்னியின் குணம்

விக்க நாதனுடல்காயு மென்மூச் செடுக்கு மதிமயங்கும்
சிக்கி நெஞ்சு தனைக்கட்டுஞ் சிறுநீர் வீழு மிவையல்லால்
தொக்கு முழுதும்வசூரியெனத் தோன் றும் தொண்டை குருதிவீழும்
பக்கம் வெறிக்கப் பார்க்குமெனப் பகர்ந்தா ராயுண் மறைவல்லோர்

## சிகிச்சை

தொட்டால்வாடி முருங்கைவேர்த் தோல்தோடை கிராந்திசெம்முள்ளி
பிட்டா யவித்து மிருகாங்கம் பின்னை யிரச சிந்தூரம்
இட்டால் விசய வயிரவமா மெண்ணெ யிடுக மூன்மருந்தைக்
கட்டாய்ப் புகைக்கத் தலைசுற்றிக் கழிக்க மிகவு நன்றாமே.

## 10 கண்டகுச்ச சன்னியின் குணம்

கண்ட குச்சக் குணங் கேண்மின் கழுத்தி னடியில்மிகவீக்கம்
உண்டாய் நொந்து சுரம்விக்க லுடனே பிதற்ற லதிதாகம்
கொண்டு வாந்தி யிருமலுமாய்க் குருதி யுமிழ்ச் சீ ருடன்வீழும்
கண்டந் தன்னை வளைக்குமடக் கடியே மயங்குங் காங்கையுமாம்

## (மற்றொருபிரதியின்படி)

கூறுங் கண்ட குச்சன்னிக் குணங்கேள் கண்டம் நெருஞ்சுதாம்
சீறி மிகவு நோவுண்டாஞ் செப்பு மொழியும் வேற்றுமையாம்
ஊறு நீருங் கடுத்திறங்கு முறுமூச் சுண்டாந் துணுக்கமுடன்
காறு நாவும் வரண்டிருக்குங் கழுத்தி னரம்பு புடைத்திடுமே ௪௰

தடஞ்சேர் கண்ட குச்சன்னி தானே செய்யுங் குணமுரைப்பன்
உடம்பே நடுக்குந் தலைநோவா யுறக்க முண்டாம் வாய்புண்ணும்
இடஞ்சேர் வயிறு முதிரம்விழு மிருக்கே யழுது களைத்தயரும்
தொடர்ந்தே திரும்ப தின்மூன்றிற் சொன்னே மறிந்த படியாமே

## 11 பொக்க நேத்திர சன்னியின் குணம்

இன்னமும் பொக்க நேத்திர னிமைத்திடா வியல்பிற் றாகும்
உன்னியே யுதறுங் கைகா லுடம்புகாய்ந் தயர்ந்து வேர்க்கும்
சன்னையா மதிம யங்குஞ் சலமலம் பேதி செயும்
கொன்னைபோ லாரோ வென்னுங் குழியவே விளிப்புக் காணும்

## (மற்றொரு பிரதியின்படி)

கவித்த பொக்க நேத்திரசன்னி பாதந்தன்னைச்
சாற்றிடவே சரீரமெலாஞ் சயித்ய மாதல்
துவித்தகண்டான் திறந்திடா வியல்பிற் றுதல்
தூயகண்ணீர் பாய்ந்துமே தியங்கிக் காணல்
கவித்தகண்ணிற் பார்வைகா ணுதி ருத்தல்
கடுஞ்சித்தப் பிரமையாய்ப் பிரலாபித்தல்
பவித்தவுடம் பெலாங் குளிர்ந்து பதைப்புக் காணல்
பரந்தெழும்பு மக்கினிபோற் சுரமுண் டாதல் ௪௧

வருமே பொக்க நேத்திரத்தின் வாறு கேளாய் மிகக்காயும்
இருகா தடைக்கும்விழிபருக்குமெழுந்துப்பிசமாயெழும்பிதற்றும்
தருமே தாகங் களைத்துவிழுந் தக்க மருந்து செய்தாலும்
இருநாலாந்நாட் கொன்றிடுமென் றிசைத்தாராயுள்மறையுணர்ந்தோர்

## 12 அபதியாசசன்னியின் குணம்

அபதி யாசந் தலைபுரட்டி மதறிப் புலம்பு மெய்பூந் திருக்கும்
கபமே காணுங் தணுகுணுக்குங் காய்ச்ச லடிக்கு நீர்கழியும்
உபசா ரத்திற் றுனில்லா துள்ளே சுவாசம் விக்கலுமாம்
புவியோ ரறிய முகமினுங்கும் பொல்லா திதுவு மசாத்தியமே.

ஆமே யபதி யாசசன்னி யடைவு தன்னை யுரைத்திடுவன்
நோமே யுடம்பு வாதபித்த நுவலு மையு முண்டாகும்
பூமே லனைய முகமினுங்கும் பொல்லாப் பேச்சுத் துயில்கரமும்
தாமே யடிக்கி லேழாக்கா டன்னின் மரிப்பன் றப்பாதே சகூ

### சிகிச்சை

(இவை மேற்கூறிய மூன்று சன்னிகட்குமாம்)

உள்ளித் தயில மிஞ்சியினீ ருடனே முலைப்பால் தேன்விட்டு
மெள்ளப் பூரண சந்திரனும் விட்டுணு சக்கர பூபதியும்
கொள்ளப் பாம்புக்கண்டத்தைக்கு றகத்தரித்துமேற்புகைத்துத்
தள்ளப் படாத விஷமுட்டித் தயிலங் கண்டு ஷமுஞ் செய்யே சஎ

## 13 சந்திகசன்னியின் குணம்

உண்டாய் வருசந் திகசன்னிக் குற்ற குணங்கேள் தலைவலிக்கும்
விண்டோம் வியர்வை சீதளமாம் வீக்கந் தாக மறிவுகெடும்
தண்டா துடனே தெளிபுரிவ னுஞ் சந்திரனிலே யெழும்பிடுங்கேள்
துண்டாய்வலிக்கும்பொருத்தெல்லாந் துயரந்திரும்சொன்னேமே

இதற்கு மேற்கூறிய சிகிச்சைகளில்ஏற்பன கொள்க

இங்ஙனம் கூறிய சன்னி 13ல் அசாத்தியம் எழும் சாத்தியம் ஆறுமாம் என்பதும் அவற்றின் வயதும் 48ம் பக்கத்தில் "சன்னிவருங் காரணமும் பெயரும் முதலியன" என்னும் செய்யுளிற் கூறப்பட்டிருத்தல் கண்டுகொள்க. மேற்கண்டசெய்யுளில், இரத்திட்டிசன்னி என்பது இங்கு விக்காதன் என்றும், உருத்தாங்க சன்னி என்பது இங்கு உருக்குநாதன் என்றும், சந்திரிகம் என்பது சந்திகம் என்றும், சிங்ஙூகம் என்பது சீவகன் என்றும் பெயர் வேறுபட்டிருக்கின்றன.

சுரநோயானது வாதபித்த சிலேற்பனங்களாகிய முத்தோஷங்களுங் கூடித் தொந்தித்தலால் சன்னிபாதசுரம் எனப் பெயர் பெறுகின்றது. அச்சன்னிபாதசுரம் ஒன்றுதானே, வாதம் முதலிய அம்முத்தோஷங்களும் பல அளவாகக் கூடியும் குறைந்தும் தொந்தித்தலால் பொக்கநேத்திர சன்னி முதலிய 12 சன்னிகளாயும் மூன்றும் சமமாக அதிகரித்தலால் அபிநியாசசன்னியாகவும் பரிணமிக்கும். இவ்வாற்றால் சன்னி ஒன்றே என்பதும், அதை வருவித்தற்குக் காரணமாகிய சுரமும் ஒன்றேயென்பதும், வாதம் முதலிய முப்பிணிகளின் ஏற்றத் தாழ்விலேயே அவை பலபேதப்படுவனவாம் என்பதும் நுண்ணுணர்வால் நோக்கியுணர்ந்து கொள்ளப்படும்.

## பதின்மூன்று சன்னிகளின் சிறப்பியல்பு

பதின்மூன்று சன்னியையும் இது இது என்று எளிதிற் பகுத்துக்காணும்பொருட்டு அவ்வவற்றிற்குள்ள சிறப்பியல்புகள் சில இங்குக் குறிக்கப்படுகின்றன.

1 அந்தகசன்னி: விக்கல் அதிகப்படும் தலைசொறியும்

2 பொக்கநேத்திரசன்னி: கண் புகைந்து கலங்கிப் பனிநீர்போலத் துளிக்கும் கண்ணிமைகள் ஒட்டிக்கொள்ளும்

3 அபிநியாசசன்னி: முகம் பளபளப்பாயிருக்கும், வீங்கும், இந்திரியங்களெல்லாம் தொழிலற்றுப்போம்.

4 கண்டகுச்சசன்னி: கழுத்தை இறுக்கிப்பிடிக்கும், அவ்விடத்தில் நரம்புபுடைக்கும் நோகும்.

5 சீதாங்கசன்னி: உடல்முழுதும் குளிரும் வேர்க்கும்

6 இரத்திட்டி சன்னி: இரத்தமதிகமாகக்கக்கும், விக்கலெடுக்கும்.

7 உருத்தாங்கசன்னி: உடம்புமுழுவதும் நோகும் எரியும்

இவை ஏழும் அசாத்தியம்.

1 சந்திரிக சன்னி: பொருத்துக்களெல்லாம் மிகுந்து நோகும் உளையும்

2 தாந்திரிக சன்னி: உடம்பில் அதிக சோர்வைஉண்டாக்கும் தாகமும் ஆயாசமும் மிகும்

3 சித்தவிப்பிரமசன்னி: பத்தியைத் தடுமாறச்செய்யும் ஆடல்பாடல் நகைத்தல் முதலானவற்றை உண்டாக்கும்

4 கர்ணிகசன்னி' காதடிவிங்கும் சத்தங் கேளாது காதிரையும்

5: சிங்nுகசன்னி நாக்குத்தடித்து முள்ளுமுள்ளாயிருக்கும் வாய் பேசக்கூடாதிருக்கும் நாக்கு உலர்ந்துபோகும்

6 பிரலாபசன்னி: பலவகையாகப்பிதற்றும் அதிகதாகங் கொள்ளும்

இவை ஆறும் சாத்தியம்.

மேலேகண்ட சிகிச்சைமுறையில் கூறப்பட்டிருக்கும் பூபதி முதலியமருந்துகளை இந்நிதானத்தின் ஈற்றிற் காண்க.

இனி, இச்சன்னி பதின்மூன்றிற் கிளைத்துத் தோன்றிய சன்னி பதினெட்டும் அவற்றின் பேதங்களும் கூறப்படுகின்றன.

## சுரத்தில் சன்னிதோன்றும் குறி

முன்னமடிக் சடிகுளிர்ந்து நெஞ்சு காயு
　　முடிகவடிக் சடிகுளிர்ந்து வெதுப்ப முண்டாம்
சொன்னபித்த முடனைரைக்கால் வாதஞ் சேரிற்
　　சொற்றளர்ந்து நடுக்கமுறுந் துயரே செய்யும்
பன்னுபல விதமாகப் பேச்சுக் காட்டும்
　　பலபேத மாய்க்கழியு மயங்கிச் சோரும்
துன்னுசன்னி தோன்றுகுணச் சுரமீ தென்றே
　　சொற்றனர்மா மறையுணர்ந்த தூயோர் தாமே. 'சக

## சன்னியில் சாத்தியம் அசாத்தியம் அறிய

பொருந்துசன்னி திமிரமுடன் கழிச்சல் தாகம்
　　பொல்லாத குணம்மருந்தை மீறிற் குற்றம்
வருந்து பதினெட்டளவுஞ் சுகம்வா ராதேல்
　　வருமுப்பத்திரண்டளவும் வருந்திப் பார்க்க

இருந்த குணத் தகிகமெனில் மரணமாகு
மிதமாகி யிருந்தகுணந் திருஞ் சன்னி
அருந்துமன்னம் விருப்பாகித் தொய்வு மின்றி
யறிவிருக்கி லையமில்லை யகலுங் காணே ௫௦

கூறுமுத் தோஷந் தன்னிற் குறித்திடுஞ் சன்னிபேதம்
விறுயர் பதினெட் டாக விளம்பின ரெட்டுந் தீராத்
தேறிய பத்துந் தீருந் தெளிந்து று மருந்து செய்யில்
மாறுள குளிகை பெண்ணெய்த் தயிலமத் திக்க நன்றே ௫௧

## 1 வாதசன்னி

வாதசன்னி தான்கண்ணை விழிக்கொட் டாது
விலஞ்சலஞ் போ குவதுணரா வாருந் நாவும்
பேதமுற வறிவுகெடுந் தொய்வுண் டாகும்
பேசுவது முணராது தலைபு ரட்டும்
போதவிடாய் துனுக்கமுண்டா மெவருங் காணப்
பொருந்துகைகால் வழங்காது செவியுங் கேளா
திதமுறத் தின்மறந்து புறந்தாள் வீங்கிற்
றிண்ணமா மரணமெனச் செப்பி னாரே ௫௨

முகத்தைச் சுழித்து மோகித்து மொழிவாய் கோணிநாத் தடக்கிச்
சுகத்திற்கிடந் தெதுபுறங்குவர் போற் சோகித்தனுங்கித் துயருண்டாம்
சகத்திற் சலம்போ மறியாமற் றுகித்தபரு மறிவுகெடும்
இகத்திற் கைகால் வழங்காதா விடர்சேர் சன்னி வாதமிதே ௫௩

## வாதசன்னி மீறிநிற்குங் குணம்

வாதசன்னி மீறினுற் குணத்தைக் கேண்மின்
மந்தமாஞ் செவிகைகா லசையா தாகும்
வதமாய் விறைத்திருக்கும் பல்லைலை கிட்டு
மிருவிழியுந் தெரிவரிதா யிரவில் வேர்க்கும்
போதவுடல் காய்வுடனே குளிரு முச்சுப்
போதநிற்கு மெனத்தோன்றும் போட்ட கையும்

பாதமுந்தா னப்படியே கிடக்கு மென்று
பகர்ந்தனர்மா முனிவர்தன் பரிசு கண்டே. ருச
கூறரிய வாதசன்னி கோபங் கொண்டாற்
கொடுத்ததண்ணீ ரன்னமெலாங் கொப்ப ளிக்கும்
வீறுபெறக் கைகளைக் கொட்டி யாடும்
விழிசோர வேவிழிக்கு மேலே பார்க்கும்
ஊறுபெற வேமூரி முரிக்கும் பார்த்தே
யுடம்புநெளித் திடும்பாம்பு பூரான் றேளும்
யாறுபல மிருகமெலாம் விழிக்குத் தோன்றும்
பார்க்கில்விழுந் தழுஞ்சிரிக்கும் பயமுண்டாமே ருரு

கையைக் கொட்டி யாடுவதுங் கண்கள் சோர விழிப்பதுவும்
மெய்யைப்பலகானடுக்குவதும்வேண்டாதெவையும்பிதற்றுவதும்
ஐயச் சிரித்தே நடிப்பதுவும் பாரா தெல்லாம் பார்ப்பதுவும்
மையைப் பொருவுங் குழலாளே வாத சன்னிவகைதானே ருசு

## திமிர்வாதசன்னி

உறக்கமாகி யுள்ள னுங்கி யுவர்த்தி மிகுந்தே வெதுப்புண்டாய்ச்
சிறக்கு முகம்வாய் கருகியன்னஞ் செல்லா தறவே தாகமுமாய்
மறக்கும் வார்த்தை தடுமாறி மாறுக் கரிபோற் கழிந்துவரிற்
பிறக்குந் திமிர்க்கும் வாதசன்னி பேசுங் குணங்க ளிவையாமே

## மரணவாதசன்னி

காலுங் கையு மொருபக்கங் கடிதா யிழுத்துச் சோர்வுண்டாய்ச்
சூல வேல்போற் குத்திநொந்து தாயா மிகுந்தே கடுத்துளையும்
கோலச்சரீரம்விறைத்துவற்றிக்குறைந்தேமலமும்வாண்டுமுட்டாய்ச்
சால நெடுநாட் கிடந்துழலுந் தறுகா மரண வாதசன்னி. ருஅ

இருந்தாற் போலே யொருபக்க மிடரா யிழுத்துச் சோர்வுண்டாய்
வருந்தா முகமும் வலித்திழுத்து வசமற் றுளைந்து திமிருண்டாய்
அருந்தா தன்ன நாவிறைத்தே யடித்துப் பிடித்துநொந்துகுத்திப்
பொருந்தா துறக்கம்பிதற் றுமுண்டாம்பொல்லாமரணவாதசன்னி

வருந்து மதியின் மும்மதியின் மரண மாகா திருக்குமெனிற்
கருத்தைக் கெடுந்தேதார் வருடமதிற் கால னிலதேன் மூவருடம்
பொருத்த மாகவிருக் குமெனிற் புகல்வாஞ் சூடுதைலமெண்ணெய்
அருத்துஞ்சன்னிவாதசுரத்தேதண்ணெயருந்திமுழுக நன்றே ௯௦

இதர தைலம் பூசியுண்க விதமாய்ச் சுகமும் வாராதேல்
பதமாய்ச் சன்னி வாதத்தி லெண்ணெய் தானும் பகர்ந்தனமால்
கதுவார் சினேக பொட்டளியுங் கடிதா மண்டத் தைலமுமாம்
விதமா வலியின் சூடுசுட்டு விடவே யிவைக ளன்றுமே. ௯௧

இந்தப் பரிகா ரங்கள் செய்தா விதமா மிவைக்குச் சுகமிலதேல்
முந்த வரனார் விதித்தபடி மொழிந்த மரணந் தப்பாதால்
சந்த மறையோர் தமக்கன்னஞ் சாந்தி யரனுக் கபிடேகம்
வந்த தினந்தான் றொட்டெனவேவருத்தாராபுண்மறைவல்லோர்

## பெருவாதசன்னி

அடித்திடு மலறிக் கூப்பிட் டழுதிடு மெழும்பி யோடும்
கடித்திடுங் கஞ்சிதண்ணீ ரருந்திடிற் காறித் துப்பும்
பிடித்திடிற் பிடிக்கொட் டாது பெலத்துடன் முரிந்து வீழும்
படித்திடும் பேசு மேசும் பகர்பெரு வாத சன்னி. ௯௩

## வலிவாதசன்னி

மந்திக்கு முதர மூறி வருஞ்சுரந் திமிருண் டாகி
அந்திக்கு வலிக்குஞ் சோர்ந்தே யடுத்தடுத் ததிகமாகித்
தொந்திக்கு நாடி பூட்டித் துயர்செய்து மயக்கி யேறி
வந்திக்குங் கடினஞ் செய்யும் வலிவாத சன்னியாமே. ௯௪

இவை வாதசன்னியிற் பேதங்கள்

மேற்கூறிய சன்னிகட் கிரையாவோர்

சிவத்துரோ கஞ்செய் தோரு செய்நன்றி கொன்ற பேரும்
தவத்தருக் கிடர்செய் தோருந் தாய்தந்தைக் கிடர்செய் தோரும்

அவத்தராய்த் திரிந்து ளோரு மாவினுக் கிடர்செய் தோரும்
பவத்தினுக் கஞ்சா தோரும் பகர்சன்னிக் கிரையா வாரே ௯௫

## சிகிச்சை

### வாலசுந்தரி தைலம்

தூதுவளை கிலுகிலுப்பை பொன்னாங் காணி
தும்பைபெரு மருந்துமிசாச்சி குதிரை வாலி
மீதுவளர் கன்முருக்கோ டவுரி சிந்தின்
மிக்கமயி லடிக்குருந்து மணித்தக் காளி
மாதுவளர் சிற்றமட்டி பழுக்கி ராய்வேர்
மருவுநத்தைச் சூரிதுளாய் சன்னி நாயன்
தாதுவளர் நன்னாரி சாய வேருந்
தனித்திவைபொன் னொருபிடிவேர் சமனாய்க் கூட்டே

கூட்டுசத குப்பையுள்ளி கோட்ட மேலங்
கொத்தமல்லி பேரரத்தை சன்னி நாயன்
ஈட்டுவசம் பொடுவெருத்த வரத்தை நற்சீ
ரிலவங்கஞ் செண்பகப்பூக் கழஞ்சோ டொன்றாய்
நாட்டுசரக் குடன்சரிவே ரிடித்த தூளு
நல்லாமயிற் றண்டமுட னிலவேர்த் தூளும்
வாட்டுநிம்ப வெண்ணெய்தனிற் கொதியிற் றாவி
வடித்தெடுத்துச் சிரத்தில்வைத்து நசியம் பண்ணே

பண்ணுமிதன் பரிசுகண்டு திரும்பா தென்னிற்
பகரண்டத் தயிலமுடன் கலந்து வார்க்கத்
திண்ணமுடன் வாதசன்னி பிதற்றுஞ் சன்னி
திமிர்வாத சன்னிபிர லாப சன்னி
எண்ணரிய சேற்பசன்னி வலிக்குஞ் சன்னி
யிளகாத பலசன்னி சுரத்தின் சன்னி
கண்ணமருங் குமரகண்ட சன்னி யெல்லாங்
கதிரவன்முன் பனிபோலக் கழிந்து போமே. ௧௨

## விசயசுந்தரி தைலம்

குருந்துகொச்சி பெருமருந்து கான்றை சிந்தில்
கூறிலாமிச் சிறுவேளி பொன்னாங் காணி
மருந்தவுரி சிதேவி முத்தக் காசு
நன்னாரி கிலுகிலுப்பை மணித்தக் காளி
திருந்துநத்தைச் சூரிநிலக் குதிரை வாலி
சேவகன்பூ டுடன்சன்னி நாயன் வேரும்
பொருந்திருசி ரகமிரிசு கோட்ட மேலம்
போற்றுதிப் பிலிவெருத்தல் வசம்பு சன்னி ௭௧

விரைதருசுக் கரத்தையுள்ளி கொத்த மல்லி
விளம்புமத்தித் திப்பிலிசெண் பகத்தின் பூவும்
உரைதருசிற் றரத்தைசத குப்பை காய
முயர்கோரோ சனைகடுகோ டிலவங் கந்தான்
வரைதருநன் முயிற்றண்ட நிலத்தி னைகம்
வகுத்தசரக் குடனிலவேர்த் தூளுங் கூட்டிக்
கரைதருநல் லெண்ணெய்நிம்ப வெண்ணெய் நேராய்க்
காய்ச்சியபின் னீரில்வைத்து மருந்தைத் தூவே ௭௨

தூவியெண்ணெய் சிரசில்வைத்துப் பொருந்த நாளுந்
துயர்புரியும் வாதசன்னி சுரத்தின் சன்னி
தாவியுடன் மூடுசன்னி யமத்து சன்னி
சாற்றுபித்த சன்னியுடன் பிதற்றுஞ் சன்னி
மேவுபிர லாபசன்னி மந்த சன்னி
விளம்புசேற் பனசன்னி யசுவ சன்னி
மருவுலகிற் பருதியெதிர் பனியே போல
மாறுமென மாமுனிவர் வகுத்திட்டாரே. ௭௩

## ஏனாதி

தூதுவளை நன்னாரி வட்டுக் களப்பன்னை
துய்யபுன னைப்ப ழச்சா
ரேறுதுநில வேருடன் கோழியின் காரமிசை
யுற்றதிப் பிலிவ சம்பு

தீதில்கரு மிளகுடன் கரியநற் சீரகந்
திடமுட னரைத்த துண்டை
மீதுடன ருத்தவே சன்னிபதி னெட்டும்
விரைந்தே பறந்த கலுமே ௭௨

## அடக்கமெழுப்பி யெண்ணெய்-இரட்சை

கடுகுட னிலவேர் தானுமோர் சிறங்கை
கடுகவே வறுத்துடன் பொடித்து
விடுகெல்விக் கெந்தி தாிசுகன் மிளகு
வெள்ளுள்ளி கறிப்பெருங் காயம்
முடுகிய வெளுத்தல் திப்பிலி சுக்கு
முருங்கையோ டழிஞ்சில்வித் ததுவும்
கொடுவிய *கனற்புரம் பொடிநிறை யாகக்
கொட்டையுஞ் சாக்குநேர் பொடித்தே ௭௩

பொடித்துநிம்பெண்ணெய்காய்ச்சிப்போட்டவெற்றிலைவெடித்தால்
மடுத்திடு நீரில் வைத்தே வரைந்தது ரேவிப் பின்னர்
அடுத்திடு கோழி யண்ட மாறிரண் டவித்து மஞ்சள்
எடுத்ததை வறுத்து நன்று யிசைந்திடுபதம்வ டித்தே. ௭௪

வடித்தநற் றைலங் கலந்துடன் பொருத்தி
வலியநற் பிடரியின் முடிச்சில்
அடுத்திடு புறந்தோண் முதுகினிற் சுழியி
லரும்புறங் கையிரு விலாவில்
பிடித்திடு கதிர்போ விரும்பினைக் காய்ச்சிப்
பேணியே யிலக்கம்போற் சுட்டால்
அடுத்திடு சன்னி வலியுட னகன்றே
யடக்கமு மெழுமிது திடனே ௭௫

## கொதியெண்ணெய்

மாவிலங்கை யெருக்கவுரி முருங்கை நொச்சி
மாகாணி பெருமருந்து வாதங் கொல்லி

*கனல்-சாதிலிங்கம் புரம்-இரசகற்பூரம்

தாவிலங்கு கான்றையுவாய் மணித்தக் காளி
சாரணையு மிரிசுதுளாய் சன்னி நாயன்
தேவிலங்கு சிற்றமட்டி சிந்தின் மேனி
திகழ்குதிரை வாலிபன்னை பொன்னுங் காணி
பூவிலங்கு தைவேளை யாடா தோடை
பொருந்துமியார் குருந்திரண்டு புங்கு வேலி ௭௬

கொடிமேவு காற்றோட்டி பேரமட்டி நாரி
கோதில்கிலு கிலுப்பையியங் குடன்சாய வேரும்
படிமேவு தாதுவளை யொடுமுயிற்றி னண்டம்
பகருநில வேருடனே யமுக்கிராய தின்வேர்
துடிமேவு மொருநிறைகொண் டடித்தரித்து மாவாய்த்
தூயசாரக் குள்ளிமஞ்ச ளிருசிர மேலம்
கடிமேவு மிரண்டாத்தை வேர்க்கொம்பு கோட்டங்
காரம்புவசு வாசியகில் கமழ்தேவ தாரம் ௭௭

தார்செறிதிப் பிலியிரண்டு சன்னியள் நாயன்
சாதிலிங்க மிலவங்கம் வசம்புபெருங் காயம்
சீர்செறிநற் கெந்திசத குப்பைசோத்த மல்லி
செண்பகப்பூக் கச்சோலம் வெளுத்தலுடன் றரிசு
பார்செறியு மரமஞ்சள் சிறுதேக்குக் கடுக்காய்
பகர்சிறுமூ லகங்கடுகு பருத்தமலை வேலி
நீர்செறிவெட் பாலைவிழால் கழற்சிமகிழ் சில்லு
நீடழிஞ்சில் விரை* திக்கு நிறையாகக் கொள்ளே ௭௮

கொண்டிடித்து நிம்பவெண்ணெய் கொதிக்க வைத்துக்
கோதிலிலை வெடித்தபத மருந்து தூவிக்
கண்டவுட னீரில்வைத்துத் துழாவி யெண்ணெய்
கதிக்கவே சிரத்துமுள்ளும் பொருத்திப் பூசின்
மிண்டிடுமெண் பதுவாதஞ் சன்னி யெல்லா
மீளுமிதிற் பன்னிரண்டு வலியு மென்றே
பண்டுபெருங் கொதியெண்ணெய் சிவன்கைச் சூலம்
பகர்ந்தனரா யுருவேதம் படித்துணர்ந்தோர் ௭௯

* திக்குநிறை-நாலுகழஞ்சு

## பூநாகத்தைலம்

நிலநாக மரைநாழி யாய்முயிற் றண்டமுந்
நிறையொக்க வொருசட்டியிற்
பலமாக வொன்ருய் வழுத்தே சிவக்காத
பருவத்தி னிம்பவெண்ணெய்
நலமாக வேகாய்ச்சி வெடிபதந் தன்னிலே
நற்சரக் கதுசொல்லுவாம்
பெலமான காயம் வசம்புநற் கெந்தகம்
பேசரிய வெள்ளுள்ளியே. அ0

வெளுத்தலித ரங்களிவை யொன்றிரு கழஞ்சாக
மெத்தெனப் பொடிசெய்திட்டே
அழுத்தவப் பொடிதன்னை யெண்ணெயிற் றூவியே
யதிகமுட னேதுளாவி
முழுத்தபொன் னிறமாக வருபதந் தன்னிலே
நூடியே புகையைவிட்டு
விழுப்பமுட னுள்ளுங் கொடுத்துப் பொருத்தியிட
வேசன்னி வலியோடுமே. அக

## வசம்புத்தைலம்

பிள்ளைவசம் புடன்வெள்ளை யுள்ளிசரி கலந்து
பேதமற விடித்ததனைத் திரியினிலே பூசி
உள்ளபடி தெளிவெண்ணெய் தன்னைவார்த் தெரித்தே
யுறுதைலம் சிரம்பொருத்தி யுண்மருந்து செய்யில்
கள்ளமுறு சிறுசன்னி வலிமயக்க மாந்தங்
கதிரவன்முன் பனிபோல்க் கடிதகலு மென்றே
தெள்ளுதமி ழுணர்ந்ததிரு மலைமுனிவன் கூறும்
திறமறிந்து நோயியல்பு தேர்ந்துமருந் தருக்கே அஉ

## அஞ்சனம்

கொங்காருங் குழன்மடவீர் கொந்தா ளங்காய்
கூறுதிரி கடுகுள்ளி வசம்பு தானும்

மங்காமற் காடிவார்த் தரைத்து ருட்டி
மகிழ்வுடனே நிழலுலர்த்தி வைப்பீ ராகில்
பொங்காது முறைவெதுப்புச் சுரங்கள் சன்னி
பொல்லாத வலிமுற்றுந் தொலைந்து போகும்
சங்கார மெனவந்த பசாசு தானுந்
தரியாது கண்ணிவிடத் தண்ணீர் கொண்டே அ௩

நாறு காந்தை கன்னரி நறிய மிரிசு பேரிஞ்சு
கூறுஞ்சுக்கா மிவையைந்துங் கூடுமோ ரொன்றொரு கழஞ்சு
சாறு சொல்லு முலைப்பாலிற் றக்க வுண்டைநிழலுலர்த்திப்
பேறு நசியம் விட்டாக்காற் பிதற்றுஞ் சன்னி மாறிடுமே அச

## கண்டேஷம்-சன்னியறிய

சன்னிதா னுணர வேண்டிற் றருமுருத்திராக்கந் தன்னைச்
சொன்னதே வதிலுரைத்துச் சொல்லு நாவினிலே வைத்தால்
அன்னது சன்னியாகி லதுகறுத் திருக்கும் பார்க்கில்
வெண்ணிடு சன்னியல்லா விடிலது வெளுக்கு மன்றே அ௫

## உ பித்தசன்னி

பித்தம் போதவுதிர்ப்பு செயும் பெருகி யிழுகி வாயிறழியும்
மெத்தநாறு மலந்தானும் மேவிக் குளிர்ந்தபடி செப்பும்
ஒத்த வன்ன மறுப்பாகி யுவந்து தண்ணீர் மிகப்பருகும்
சுத்தமான முனிமுன்னட் சொல்லும் பித்த சன்னியிதே

செருமும் பித்த சன்னிமிகச் செருக்கிப்பிதற்றி யகஞ்சுழிக்கும்
புருவமெரிக்கும் மோகிக்கும் பொருமி மொழியும் வாய்வெருவும்
மருவு முதரந் தான்கழியும் வாயும் புண்ணும் பற்கறுக்கும்
கருதி யிந்தக் குணங் கண்டாற் கடின மிதுவென் றறிவீரே அஎ

## பித்த சன்னியில் அசாத்தியம்

மீளாத பித்தசன்னிக் குணத்தைப் பேசின்
மிகவழற்றும் வாய்வெருவு மிடறு புண்ணும்

தாளாது கண்குழியும் வாயும் புண்ணுந்
    தனியுழற்றிப் பிதற்றுமிக வனுக்க முண்டாம்
கோளாறு படக்கழியு மயங்கிப் பேசுங்
    கூரறிவைக் கெடுத்துமிகக் கோபங் கொள்ளும்
வாளாரும் விழிமடவீர் நாக்க டிக்கும்
    மருந்தினாற் றீராது மரண மாமே. அஅ

அகங்கடுக்கு நீர்சிவக்கு மனுங்கிப் பேசு
    மழுதுபிதற் றிடுங்கரிபோற் கழிந்து சோரும்
முகங்கறுக்கு நாக்கறுக்கும் வாயும் புண்ணா
    மொழிதவறும் பற்கறுக்கு மூச்சுண் டாகும்
நகங்கறுக்குந் தாகமுண்டா முறக்கம் வாரா
    நடுங்கிவிழுந் திடுங்கனல்போ லெரிந்து காயும்
சுகங்கெடுமிக் குணமதிக மிருந்த போதே
    துணித்திடுமிச் சன்னியெனச் சொல்லும் வேதம். அகூ

சுரந்தனிற் பித்தந் தோன்றிற் றுயர்செயுங் கழிச்சலுண்டாய்
உரத்திடு தாக மிஞ்சி யுவாந்தியாய்க் கருகு மேனி
சிரந்தனி னடுக்கி யேறித் தின்மறந் தோங்கா ளிக்கும்
புரந்தனிற் பித்தசன்னி பொருமலசலஞ்சி வக்கும் கூ0

பித்தத்திற் சுரமுந் தோன்றிப் பெருத்திடுங் கழிச்சல் தாகம்
மெத்தவே கடின மாகி வேகித்து மயங்கித் தொய்வாய்ச்
சுத்த மாய்ப் பிதற்றிப் பேசித் துயர்செயு நடுக்க முண்டாம்
சித்தமாம் பித்த சன்னி தெளிவின்றி வாய்புண் ணாமே கூக

### 3 சிலேற்பன சன்னி

சேட்ப சன்னிக் குணங்கேளீ ரிளைப்புண் டாகுஞ்
    சிறிதேதா னுட்காயுந் தியக்க மாகும்
வாட்டமுட னுக்குழறு நெஞ்சு தானும்
    வரண்டிகனத் திருமலமும் வெளிறு மேனி
ஈட்டமுட னெஞ்சுகள களத் திருக்கு
    மித்மறிவு தடுமாறும் வயிறு போகும்

மாட்டு மசாத் தியமடக்க மெழுப்பி யெண்ணெய்
மாற்றுகினும் பொருத்திய தின் வலியைக் காணே ௬௨

கண்ணும் விழியா வாய்திறவாக் கலையை விரும்பா தூண்விரும்பா
புண்போற் சரீர நொந்துளைந்துபொருமியிருமித்தொய்வுண்டாய்
விண்ணைப் பார்த்து வாய்வெருவும் வெளிறு மலமுஞ்சலந்தானும்
எண்ணு திரவி லுறங்காதா விடர்செய் சேற்ப சன்னியிதே. ௬௩

உறக்க மாகிக் கிடந்தலுங்கி யுதரம் பொருமி யிருமலுண்டாம்
சிறக்கு மசனஞ் செல்லாது தியங்கி மயங்கி யுணர்வுகெடும்
பிறக்குஞ் சோகங் களைவேர்வை பெருகுந் தாகங் கழிச்சல்மிகும்
துறக்குஞ்சேற்பசன்னியிது துடங்கித்தைலம்வைத்துணரே ௬௪

இருமி யிளைத்துக் களகளத்தே யிடராய் மயக்கிக் காதடைத்துப்
பொருமி மேனி வெளுவெளுத்துப் புறந்தாளதைத்து நாவரண்டு
செருமி யனுங்கிக் கிடந்துறங்கித் தீனு மறந்து கழிச்சலுமாய்
உருமத்துடலம்வேர்வைமிகுந்து றுமேகொடியசேற்பசன்னி ௬௫

## 4 சுரசன்னி-சிகிச்சை

சுரத்தினிலே மந்தமுடன் றலைக்கனப்பு மயக்கஞ்
சுரமொருகாற் காயும்பின் னொருகான்மெத் தென்னும்
உரத்திடுமெய்ச் சுழற்சியுடன் பார்வையதும் வேறு
முட்டணமா நாடியொரு நிதானத்தி னில்லா
வருத்துமிது சுரசன்னி யாகுமிதற் குள்ளி
வசம்பவுரி வேர்நிலவேர் முயிற்றினுறு மண்டம்
திருத்தமுறு தெளிவெண்ணெய் தனிற்கொதித்து வார்க்கத்
தினகரன்மு னிருளென்னத் தீர்ந்தகன்று போமே ௬௬

இதுவுமது

தலைகனத்துச் சுழற்சியுடன் காய்ச்சல் கூத
றணிந்துதணிந் துடன் வெதும்பி மயக்கியேறி
நிலைகெடவே தீன்மறந்து கழிச்ச லுண்டாய்
நின்றிருமித் தொய்வுண்டா யனலுண்டாகும்

கலைமறந்து பொருமியுடன் வேர்வுண் டாகிக்
கடினமாய்ப் பிதற்றுமிகப் பேதங் காணும்
கொலைதருமிச் சுரசன்னிக் குணங் கண்டானீ
கொதியெண்ணெய்த் தைலமுடன் பொருத்திக் கொள்ளே

## 5 பிரலாபசன்னி

பிதற்றும்பேசு மெழுந்திருக்கும்பேசுந்துயிலும் படுக்கைகொடா
மிதத்திற் கங்குல் வந்தடித்தான் மிகக்கோபித்துச் சுரமெழும்பும்
விதத்தி லுழற்றுமழுஞ்சிரிக்கும்விளம்பாதெனவையும்விளம்புவிக்கும்
மதிக்குமிந்தக்குணங்கண்டால் வருத்துஞ் சன்னி பிரலாபம் கூஅ

## குடிநீர்

சிறுத்த தேக்கு நிலவேம்பு சிறுகாஞ் சோன்றி வழுதலையும்
குறித்த முத்தக் காசுடனே குலவும்பொன்னுமுசுட்டையின்வேர்
தறித்தே யிதனை யிருநாழி தண்ணீர் விட்டெட் டொன்றாக்கி
இறுத்தே குடிக்கப் பிரலாப சன்னி யேகு மேந்திழையே கூகூ

## 6 விறுமசன்னி

விறுமசன்னி செய்குணத்தை விளம்ப வேண்டில்
வெகுமூட மாயிருக்கு மிகவும் பேசாக்
கறுவுமிரு கண்ணிருளாய் வெளுக்கு மேனி
கஞ்சிமறந் தரும்புளிமேற் றாக முண்டாம்
மறுகுமிது நெஞ்சடைத்து மயக்கி யேறி
வாய்குழறி வருகண்டம் பிதற்றல் செய்யும்
குறுகுமிந்தக் குணமானாற் கொல்லா தென்னிற்
கோழியண்டத் தைலமது பொருத்திக் காணே க00

## 7 அதிவேகசன்னி

அருந்தேன் மொழியா யதிவேக சன்னி யுதர மதுகழியும்
வருந்த வெழும்பு மூர்ச்சிக்கு மறுகாற் றெளியு மதிமயங்கும்
திருந்துஞ்சரீரமுழற்றும்பின்றண்ணீர்விரும்பும்பெலன்குறையும்
பொருந்துங்குணவீனங்கள்செயும்புகலுங்குணங்கடேர்ந்தறியே

உழற்றும் வெதும்புமுதரம்விடுமுடனேமயக்கிப்பெலன்கேடாம்
தழற்கொ டண்ணீர்த் தாகமுண்டாந்தானே மூர்ச்சாமதிமயங்கும்
தெளிச்சுத்தரும்பினுணர்வுகெடுந்திருந்தக்குணவினங்கள்செயும்
அளிச்சென் றலர்சேர்குழன்மாதேயதிவேகமதாமறிவாயே ௧௦௨

## 8 தனுவாதசன்னி

தனுவாத சன்னிசெயுங் குணத்தைப் பேசிற்
றனுப்போல வுடல்வளைந்து வலித்து வாங்கி
அனுபேத முடனனுங்கித் திமிருண் டாகி
யதிகமாய் மயங்கிமிகத் தலைநோ வாகும்
இனபேத மெனநடுங்கிச் சோக மாகி
யிருமிவயி றழிந்துநொந்தே யிடருண் டாகும்
தினவேக மிகுந்துகளை வேர்வை காணுந்
திமையிது திடனறிந்து மருந்து செய்யே ௧௦௩

## 9 உடல்மூடுசன்னி

தானஞ்செறியுமுடன்மூடுசன்னிக் குணங்கேள்கழிச்சலுண்டாம்
மானந் தருநாப் புண்ணாகும் வருமுண் மூச்சா முடனடுக்கும்
ஆன நயன மதுவிழியா தன்ன மருந்தா துயில்பொருந்தா
ஊனஞ் செறியும் பல்லிறுக்கு முடல்வீங் கிடுமுட் புண்ணாமே

## 10 அலட்டுச்சன்னி

அலட்டு மிருந்து கூப்பிடுப்பி னருகி லிருந்தோர் தமையடிக்கும்
பெலத்த சீலை தனைக்கிழிக்கும் பெருங்கைமூலத்திடைவைக்கும்
உலைக்குமுடலைச்செயலழிக்குமுகந்தேமருள்போல்விழுந்தெழும்பும்
தலத்திற்பெலத்தேயலட்டுசன்னி தான்செய்குணங்க ளிவையாமே

## 11 குமரகண்டசன்னி

குமரகண்ட சன்னிசெயுங் குணத்தைச் செப்பிற்
கொடுமையாத் தலைகனத்து நாடி பூட்டித்
தமரமிகு பற்கடித்து நடுங்கி வேர்த்துத்
தாகமிஞ்சி நாவுலர்ந்து காத டைக்கும்

சமரமிகு கையுதறி முகத்தை வாங்கிச்
சாரவலித் திடு மயக்கிக் கிளையு முண்டாம்
அமருமிந்தக் குணமதிக மிருந்த போதே
யண்டதைலம் பொருத்தி யதனைக் காணே ௧௦௬

## 12 மகரசன்னி

மகரசன்னி புரிகுணத்தை வகுத்துக் கூறில்
வயிறிரைந்து பொருமியமும் வாய்பே சாது
பகருமகா சுரமுண்டாந் தலைக னக்கும்
பலகாலு மயக்கமுறுஞ் சரீர நாறும்
அகவுதர மெரிவாகுங் கைகால் சோரு
மருமுடக்காய்க் கிடந்துறங்கு மசதி யாகும்
தகரமுறு வாய்வெருவி யலட்டுண் டாகுந்
தப்பாதிக் குணமிருக்கின் மரணந் தானே ௧௦௭

## (13) அந்திரங்கசன்னி

கண்கள் கரிக்குந் தலைவலிக்குங் கடிதே யுடலைப் படப்புரளும்
விண்க ளதிர வெழுந் திருக்கு மீள வறிவே கெடுந்தெளியும்
புண் போல்வெதும்பு மெளிமுதுகா ப்பொருந்துஞ்சேற்பமனுக்கமு மாய்
எண்கள் பலவா யிடர்செய்யு மியம்பந் திரங்கசன்னியிதே ௧௦௮

## 14 அசுவேகசன்னி

அன்னமறந் தேதாக மதிக மாகு
மலட்டிமிக மயக்கமுறு வதிகோ பிக்கும்
சொன்னமொழி கேளாது துணுக்கிட் டேங்கித்
துயரமுட னடுநடுங்கிச் சோப மாகி
உன்னருமே னியுங்கருகிக் குளிரு முண்டா
யுறுமூச்சுத் தொய்வுடனே கிடந்து சோரும்
பன்னுமசு வேகசன்னிக் குணங்கண் டானீ
பதினெட்டு நாளளவும் பரிந்து பாரே ௧௦௯

## 15 அமரிசன்னி

அமரியெனுஞ் சன்னிசெயுங் குணத்தைச் செப்பி
னதிகமாய்த் தலைபுரட்டு மசத்தி யாகும்

சமரமிகு புயநெரிக்குஞ் சரீரம் வாடுஞ்
சலஞ்சிவந்து கடுத்துவிழுங் கைகால் சோரும்
தமரமிகுந் தாகமுண் டாய் மயக்கி யேறுந்
தன்வசமின் றிக்கிடக்குந் தளரு மேனி
திமிரமென வறிவுகெடுந் தீனம யாகுந்
திட்டாந்த முணர்ந்துநல்ல மருந்து செய்யே கக0

## 16 சீதாங்க சன்னி

சீத மிகுந்து தலைகனத்துத் தீனு மறந்து தாகமுண்டாய்ப்
பேத மிகுந்து விக்கல்சத்தி பெருத்துக் கைகான் மிகக்குளிரும்
போதவுடலுமேமெவதும்பும்பொருந்தாதுறக்கந்தொய்வுண்டாம்
ஏத முறுஞ்சீ தாங்கசன்னி யிதமா மீரேழ் தினமகன்றே ககக

## 17 மட்சசன்னி

மட்சசன்னி புரிகுணத்தை வகுத்துக் கூறின்
மந்திப்பாய்க் காதுகண்ணு மிருளாய் மூடும்
உட்குமுடல் கால்முடங்கி யுபாதி யாகி
யோயாமல் வாய்வெருவி யலட்டிப் பேசும்
முட்குமிழ்நேர் மூக்கிரத்தம் விழுந்து சோரு
முடங்கியகை நடுக்கமுறு முகம்வி யர்க்கும்
விட்குவடு நிகர்புயமு நெளிப்புண் டாகும்
விளம்பியவிக் குணமிருக்கின் மரண மாமே ககஉ

## 18 அறமருசன்னி

நேரே யெடுக்கும் பெலன்குன்று நெடுங்கால் கைக டாமோயும்
தாரே செறியும் புயநெளிக்குந் தலையும் புரளு மெழுந்திருக்கும்
வாரே கண்வா யழற்றுமிக மயக்கஞ் சோக மசதியுமாம்
காரே கரிய குழலணங்கே காணு மறமரு சன்னியிதே ககங

சன்னிபதினெட்டும் முற்றிற்று

சன்னியில் வேறுசில பேதங்களும் சிலபிரதிகளிற் கூறப்பட்டிருக்கின்றன. சன்னிநீர் காதின் உள்ளாவது காதடியிலாவது திரண்டுவீங்கினால் வெடிசன்னி யென்றும், முகத்தின்

உறுப்புக்களை ஒருபக்கத்திற்கு இழுத்து விகாரத்தை உண்டு பண்ணினால் முகவாதசன்னியென்றும், எண்ணெய் தேய்த்து முழுகிய அன்று தயிர் பழவகை முதலிய குளிர்ந்த உணவு உட்கொண்டு மாதர்போகஞ்செய்தோர்க்குத் தோன்றினால் சுகசன்னியென்றும், கழிச்சல் அதிகரித்துத் தோன்றினால் நீர்ப்பாட்டுச்சன்னியென்றும், பெண்களுக்கு, மாதவிடாய் காலத்திலாயினும் பிரசவித்தபின்னாயினும் தோன்றினால் சூதிகாசன்னியென்றும், கெர்ப்பகாலத்தில் தோன்றினால் கெர்ப்பசன்னியென்றும் கூறப்படும். அவற்றின் குணங்களைக் கீழே காண்க.

## 1 வெடிசன்னி

காதுக் குள்ளே இரண்டெழுந்து கடிதாய்க் குத்திவலியுண்டாய்ச்
சேதப் படவே முகமதனைத் திருகி வலிக்குந் தடுமாறும்
வேதப் படவே வெடிசன்னி விழுக்கோகிருக்குஞ் சிலேற்பனமும்
பேதப் படவே யிக்குணங்கள் பிரித்தே பெருகப்பேசினரே ககச

## 2 முகவாதசன்னி

கண்ணிற் றலையிற் புருவத்திற் காதிற் கன்ன மதிற்குத்திப்
பண்ணில் பதைக்க முகமதனைப் பக்கம் பற்றித் திருப்பிவிடும்
நண்ணிப்பகர நாத்தடக்கு நாடுங் குணங்க ளிவைகண்டால்
எண்ணிச் சொன்னர் முகவாத சன்னி யாகு மிதுவெனவே ககரு

## 3 நீர்ப்பாட்டுச்சன்னி

பெருத்தே கழிந்து குளிரேறிப் பிரண்டு விழித்துக்காலுளைந்து
உரித்தாய் மயக்கித் தாகித்தேயுடலந் திமிர்த்து விறைத்தேறும்
கருத்தைக் கெடுத்துக் கண்குளிருங் காது மடைக்கு நாவிழுந்து
வருத்து நீருமடுத்தெடுக்கு மறுநீர்ப்பாட்டுச்சன்னியிதே ககக

## 4 சுகசன்னி

வருத்துசுக சன்னிசெய்யுங் குணத்தைச் செப்பில்
வரிவிழிகண் மிகச்சிவந்துள் ளுழலை யாகிப்
பெருத்திடுநீர்த் தாகமுமாய் வரளு நாவும்
பேசுந்நாத் தடக்கியுடல் பதறிச் சோரும்

கருத்தழிந்து வெயர்வை சொட்டும் வெப்புக்கொள்ளுங்
கையினனிலம் புரண்டுங் கடினமாமென்
றுரைத்தனர் மாமுனிவ ரிதன் பரிசு கண்டே
யுறுதைல மருந்து விரைந் தருத்துவீரே ௧௧௭

## 5-சூதிகாசன்னி

சூதிகா சன்னிவருங் குணத்தை யாய்ந்து
சொற்றிடுகி லுதிரமிகப் பெருக லாலும்
பேசுமனக் கவலையினு லலைவு தன்னாற்
பிறக்குமிது சுரமிகுந்து காங்கை யாகும்
வீசுதரநோ வுண்டாம் பற்க டிக்கு
மிகுந்துகுளிருட னடுக்கும் வாய்பி தற்றும்
வாசமிகுங் குழலாரே யிக்கு ணங்கள்
வகுத்தறிந்து நோய்க்கேற்ற மருந்து செய்யே ௧௧௮

## 6 கெர்ப்பசுரசன்னி

வருகெர்ப் பத்திற் சுரமெழும்பும் வயிறு நோவாங் கழுத்துரசம்
புரமாய்ப் புடைத்துமார்புகண்டமுடனேநோவாய்மொழிபதறும்
திருநா வரண்டு முகஞ்சுழிக்குந் திடுக்கிட் டேதான் மூச்சாகும்
கருநீர் கடுத்துச் சலங்கழியுங் காட்டுங் கெர்ப்ப சுரசன்னி ௧௧௯

இனி, சன்னிபாதசுரத்திலுண்டாம் வலிகள் கூறப்படுகின்றன

## குமரகண்டவலி

இயம்புஞ் சன்னி பாதத்தி லியலுங் குமர கண்டனெனில்
வயங்கு விழியா யவயவங்கள் வளைத்துந் திருகி வலியுண்டாம்
புயங்கள் சுழலும் வாயிசிக்கும் பொருமிச் சீறி விறைவிறைக்கும்
அயர்ந்து மூர்ச்சை யடிக்கடியா மந்தக் குணங்க ளறிகுவையே
அவையே யன்றி யுடம்பையெடுத் தடித்து முறித்து வேர்வையுமாம்
கவையாம் பிரமை வாந்திவிக்கல் கடியதாகம் பரதாபம்
இவையே யாயின் வெண்ணுரையா யிழாய்ந்து விழு மலகங்ழியும்
குவையாய்க் குவளை குறுகிவிழுங் குமர கண்ட வலியாமே ௧௨௧

## மலட்டுவலி

ஆமே சன்னி பாதத்தி லதுவு மலட்டு வலியாகில்
தாமே யொருகை படபடத்துச் சரீர மெங்கும் வலியாகி
ஊமை போல மூர்ச்சையுண்டா முடம்பு வெயர்க்கும் பிராத்தியமாம்
போமே யுயிரு நாளேழிற் புகன்று ருணர்ந்த முனிவோரே கஉ௨

## திருகுவாதவலி

இருக்கு முனிவ ருரைத்தகுணத் தியம்புஞ் சன்னி பாதத்தில்
திருக்கு வாத வலிக்குணங்கள் சேருங் குறிகளவை கேளாய்
பெருக்கும் வாயு வுதரத்திற் பிடரி கரங்கா லிடுப்புமுதல்
பொருத்துத் திருகும்விறைத்திசிக்கும் புகலுங் கட்டசாத்தியமே

விழியுஞ் சொருகி முகந்திருகி வேர்த்து வெதும்பிப் பற்கிட்டிக்
கழியும் வாயு மென்மேலுங் கண்டத் துள்ளுங் கபஞ்சேரும்
மொழியும் பகரா தழுகையுமாய் மூர்ச்சை விக்கல் பரதாபம்
குளிருஞ் சுரமு மிருமலுமாங் கொடிய திருகு வலியாமே கஉ௪

## துணுக்குவலி

பயிலுஞ் சன்னி பாதத்திற் பற்றுந் துணுக்கு வலிக்குணங்கேள்
மயிலின் றுயில்போலிடை துணுக்கி வலிக்குமுடல்சர்வாங்கமெங்கும்
கையிலுங்காலுங்குளிர்ச்சியுறுங் கண்ணின் மணிகள் மேற்சொருகும்
செயலுங் குறைவு மிக்குணங்க ளாராக் கட்ட சாத்தியமே கஉ௫

## சன்னிபாத தொந்தவலி

கூடிய சன்னி பாத தொந்தமாங் குணவீ னத்தால்
நாடியே நடக்கும் போது விசைநரம் பிடையே யூதை
கூடியே யெழுந்து வேகங் கொண்டிடுங் குணங்க ளோட்டம்
சாடியே யெடுத் தடித்து மூர்ச்சைதா கங்க ளாக்கும் கஉ௬

## துடிவாதசன்னிவலி

வடிவுறு முனிவன் கூறுஞ் சன்னிபா தத்தி னூலே
இடருறு சரீர மேயெப் போதும்போ லிருக்குங் காலே

முடிகியே யவய வத்தின் மீட்டுமோ ரிடத்திற் றாண்டில்
துடியுற வலியே யாகுந் துடிவாத சன்னி யாமே கஉ௭

## பிரமராட்சதவலி

ஓதிடு முடம்பெண் சாணு முரத்திடு கால்கள் கைகள்
பேதமே தங்க ளாக வுழுத்தியே பேசு விக்கும்
வாதமும் பிரகோ பித்து நகைத்திடு மாடும் பாடும்
பேதுறு வலியே யாகும் பிரமராட் சதனு மன்றே கஉ௮

## நடைவாதசன்னி

பெடையன்ன நடையாய்ச் சொர்ந்த வாதமே தங்க ளாலே
இடைதுடை நடுக்கித் தெற்றி யிடருற மயிர்சி லிர்த்துப்
திடமற நாத்த ளர்ந்து பேச்சினை தடக்கிப் பேசிப்
படருறத் தரையில் வீழ்த்தும் பகர்நடை சன்னி யாமே- கஉ௯

## பக்கவாதசன்னி

கையுங் காலு மொருபக்கங் கனத்துத் திமிர்த்துச் சோர்வாகி
மெய்யு மறவே நொந்துவரும் வெதும்புந் நாவு தடுமாறும்
செய்யுங் குணத்தை நாடியறி செப்பும் பக்க வாதசன்னி
உய்யும் படிக்கு வழிகாணு துலகோ ரறிய வுரைத்தோமே கௗ0

## சோர்வாதசன்னி

இருபுறக் காலுங் கையு மிடாதாய் விழுத்திக் குத்தி
வெருவுறத் திமிர்த்து ஊங்கே விறைத்திடு மிருந்தாற் சோரும்
பொருவறு மேனி வாடிப் பொருந்திடு முறக்க மாடும்
மருவுசோர் வாதன்னி வசமற விழுத்துங் காணே கௗக

சோர்ந்திடு மரைக்குக் கீழே விறைத்திடுஞ் துயரஞ் செய்யும்
போர்ந்திடி லவல மாகிப் பேதித்து நொந்து குத்தும்
சேர்ந்திடுங் களையுண் டாகுந் திமிர்த்திடு நடுங்கி வீழ்த்தும்
தீர்ந்திடாச் சோர்வா தத்தின் செய்குண மிதுவென் றுரே

## சன்னியில் மரணக்குறி

உறங்கி டாதனுங் குற்றிடும் வேர்வையும்
கறங்கு கண்ணுங் கறுப்புச் சிவப்பின்றித்
திறங்கொள் சேற்பர் திரண்டு வரண்டிடில்
மறங்கொள் காலன் மலைவது திண்ணமே கநந

அறிவு மின்றி யயர்ந்து வலித்திடில்
நெறியு மின்றியுண் ணீர்மலஞ் சேர்ந்திடில்
பொறியி லொன்றும் பொருந்துவ தின்றெனில்
செறியுங் கால னகர்புகுந் திண்ணமே கநச

## பொதுச்சிகிச்சை

### சர்வ சன்னிவகைகளுக்கும் பூபதிச்சூரணம்

வகுத்த விதரந், தாளக, மிலிங்க, மிருவி, தாளம் பவளம்
சயிந்த திரிகடுகு. கடுகு, கறுவு, வசிவுகொடியவறுவு குல்வு,
மூடுகும்-அபமீள நிமிளை அரிசிவகைகள், கமழு நிறுவி. தாவும்
குமிறு சிவதை. ரோகணி சிரகலவணமவை யின்வகையு,மவினுஞ்
சுவைகொள் திரிகை, துவற்சிவதைகள், அரியலகிரிவகைகள், கரிய
சன்னிநாயகன், மின்னுநீள்சிலே, மன்னரோகிணை, அன்னபேதியு,
மன்னு நாவிகள், துன்னுபாஷமு, முன்னுநீள்வெறி பொன்னுரு
கிடு,மன்னமேதார் பொரிகாரவகை, சாரவகை, பூநீவசுவாசி, மரு
மேவு-வெறியான வகையோடு வரிமேவு பீதரோகணி, ஏலமூமு
கைபேதி, சாரவகை யாவுமே, காதுபாடண மோது காழுக, காரகி
லொடுநாளுமே, தீதில் கெந்தகம், விளங்குமோமமு, மஞ்சளுந்,
தரங்கநிணுரைகிம் புரந்து ளங்குபாசியுங், கிளர்காயமும், சந்த
தம், பொருந்தவே சமன் நந்திபின் பகர்ந்த பூடுகள்- சம்பிராங்
கொழிஞ்சி, சாறணை தசமூலம்-முந்தவே- எருக்கு, வாய், கரிச்சை,
யோடாத்தி, தேயிருப்பையால் பருத்தி, நால் மாதேதாலி, யிர்கு
ரூட்டை, கருக்குவாய் புடைவரிபூடு, கழல்மணிவேளை, உமிரி-
நன்னாரி, முரிமுரி செடியுறு ழுவி, யவுரி, வேண்வேல்கள், தழல்
கொடுவேலி, எழுமுள்வேர், பெடைநடையீர். காந்தையங்கு
காஞ்சம், நெரிஞ்சி பிரண்டை குருந்து பிருங்சி செருந்தில் அழிஞ்

சில் முருங்கை யடம்பு கடம்பு இலந்தை குறிஞ்சிலும் உழிஞ்சி
திலும் மதமத்த முடனெட்டி வளர்துத்தி குடசத்தி, பதுமித்தி,
னெடுகுப்பி சடைநொச்சி யிவையொக்க நிழலுலர்த்தியே விரவியிடி
பொடித்திடு நெறிகொள்கற்கமுமளவுமிக்குள திளவெந்நீர்தனில்
வெருகடிப் பொடியினிதுட்கொள வளமதாபுள சன்னிபாதத்
தினொடு குன்னு சூலக்குணமும் மன்னு சோகைத்திரளும்-
முன்னுளோர் உரைத்த புறவலி வளைத்த தனுவலி வருத்தமாம்
மலட்டுவலி மறுத்தகலு மகத்தியமுனி நலத்தினுடனுரைத் தரு
ளினரே.

## சன்னிக்கு பொடி.

முன்னுரைசெய் நாவியைந்து, சாள மைந்து,
மொழிசூத, மரிதார மோதங், கெந்தம்,
மின்னுசிலை, காரமைந்து, முப்போ ரைந்து,
வியலான சாரமைந்து, வெள்ளை யுள்ளி, கக0
துன்னுவசம் புனுகடுகு, துரிசு, துத்தஞ்,
சோம்பினொடு, குக்கில்துவர்ச் சிகையி னோடு,
மன்னுமுருத் திராக்கமொடு பவள, முத்து,
மருவிய ரோகணியுஞ், சிவதை தானும்,

அக்கருத் திரிகடுகோ டோம, மிஞ்சி,
யாத்தையத்தித் திப்பிலியு, மட்ட வர்க்கம்,
மிக்கசத்த வர்க்கமொடு, விடயங் காந்த,
மென்முருங்கைப் பூக்கொ தாவியும் வெள்ளை நொச்சி
தக்கதுளிர், செழுங்கொன்றைப் பழக்க ளிம்பு,
தகரைவிரை, நான்வேர், கோழிக் தாரம்,
ஒக்கவிவை சமன்கூட்டி யிஞ்சி நீரி
லுண்டிடவே சன்னியெலா மோடிப் போமே கஙக

சன்னி பதின்மூன் றின் சிகிச்சைமுறையிற்கண்ட மருந்து
களும் சன்னிக்கியைந்த வேறுதைலங்கள் முதலியனவும் கைமு
றைப் பிரதிகளிலிருந்தெடுத்து இங்கு சேர்க்கப்படுகின்றன

## விட்டுணுசக்கரக் குளிகை

கல்லரி தார மரிதா ரம்பொரி
காரங் காரம்பிரு சீரகமும்
வல்ல மனோசிலை சுக்குட னேவசு
வாசி மிளகச மோதகமும்
கல்மத நாவி நிறுவிஷ மிந்துப்புக்
காட்டு மதுரநற் கோட்டமுடன்
சொல்லிய துத்தந் துரிசுட னேலிங்கஞ்
சூதந் திரிபலை தேடுகவே ௧௫௭

தேடிடு திப்பிலி குங்குமப் பூநல்ல
தேவதா ரஞ்சீனக் காரமுடன்
கூடிடு வால்மிளகா மதுவுமு ணங்
கொண்டிடு சாதிக்காய் தன்னுடனே
பாடிடு நல்ல வசம்பதுவு மினும்*பச்
சாணியுஞ் சுட்டிடு சாம்பலிவை
நாடிடு மொன்றோர் கழஞ்சுகொண் டேயிஞ்சி
நற்சாற் றொருநா ளரைமாதே ௧௫௮

மாதேநீ கேளுநகஞ் சாங்கோ ரைச்சாறு
மற்றநாள்விட் டேயரைத் தபின்பு
தீதே யகற்றப் பயறள வாயுண்டை
திட்ட மதாகத் திரட்டிடுமே
சூதே யணுகாமல்மா னிடர்தங் கட்குத்
தொந்தித் தெழுந்தபி ணிமாற்ற
வாதே புரிந்திடுவா கடுரை வெல்ல
வாய்த்த மருந்தடி வஞ்சியரே ௧௫௯

வஞ்சி யேசுக்குக் கடுக்கா யும்வளர்
வாகா மிருப்பைவயி ரமுடன்

---

*பச்சாணி சுட்டிடுசாம்பல் - தங்கபற்பம்.
பசுச்சாணி சுட்டிடுசாம்பல் என்பாருமுளர்.

மிஞ்சிய தேற்று விரையிரு சந்தனம்
மேன்மையா நீரிலுரைத் திடுமே
கொஞ்சிய கோதைமு லைப்பால்நல் லெண்ணெய்
கூட்டிக் குளிகைய ருந்திடுகில்
சஞ்சிவி தானிது தீரும் பிணிகளைச்
சாற்றிடக் கேளடி தையல்மின்னே ௧௪0

மின்னே யுடம்பு தலைநடுக் கம்மிக
மீறிய காய்ச்சல் விழிமருட்டல்
சொன்ன மொழிதடு மாறுத லும்மிரு
தோள்கள் துடித்தல்வி தற்றுதலும்
இன்னமுறு தொய்வு நெஞ்சடைப்புக்கண்
ணிருட்டு மருட்டு மிளைப்புகளும்
முன்னமே மூக்கு மலருத லும்மேன்
மூச்சுஞ் சுவாசமு மோய்ந்திடுமே ௧௪௧

ஓய்ந்திடுங் கால்கர மேனி விறைத்தலு
மோதும் புடவைபாய் கீறுதலும்
தேய்ந்து நிலத்தைப் புரண்டுதலு நெஞ்சிற்
றொண்டை யிலையங் கழறுதலும்
வாய்ந்த விழிமேல் சொருகுவ தும்மிக
வன்புற்றுப் பார்த்து மறுகுதலும்
சாய்ந்தே யெழுந்து நழுவுவ தும்மவை
சாதக மாமடி தார்குழலே ௧௪௨

தாரார் குழலே நாத்தடிப் பானதுந்
தன்னிலீறு குஞ்சிலேற் பனமும்
நேரார் நெஞ்சில் வரட்சியு மீளையும்
நேர்ந்திடு தாகம்வெள் ளோங்காளம்
காரார் வாதப் பிணைப்பதி னால்வந்த
காந்தியுங் கால்கை யழற்றுதலும்
ஏரா வெரிவு மலங்காய்த லிங்கிவை
யெல்லாந் தீர்ந்திடுங் கும்மியடி ௧௪௩

கும்பியடி பெண்ணே செவ்விள நீர்முகங்
    கூசா தறுத் தந்திறந் துகொண்டு
அம்பியு ளைக்கு மனுபா னமமருந்
    தாகுநல் லெண்ணெய்முலைப் பாலும்
இம்பியே முன்போ லுரைத்திள நீர்தனி
    லிட்டுக் கலந்துகுளி கையைந்து
தம்மில் நறுக்கியிட் டம்முகிழால் மூடித்
    தானியமேற் றுமடுப்பில் வையே ௧௪௪

வைத்தே யெரித்துக் கொதித்தபின் பேயதை
    வாகா யிறக்கியே மூன்றுசந்தி
துய்த்திடிற் சன்னிகள் மூவா றும்மதிற்
    றொந்திக்கு மெண்பது வா தங்களும்
எய்த்திடும் பத்திரண் டைய முடன் முன்
    னுரைத்த பிணிக ளொழித்தோடும்
கைத்திடு மெண்ணெயி லோர்குளி கையிடக்
    காணாது மூவாறு சன்னியுமே ௧௪௫

சன்னிமூ வாறுடனெய்ப் பிளைப் புமதிற்
    சார்ந்திடு சேற்பன மானதிற்கும்
உன்னிதவைந் தெண்ணெய் தான்கூட் டயதி
    லுட்பட வைந்துகுளி கையிட்டு
வன்னி யெரித்துக் கொதித்த பதத்தினில்
    வாகா யிறக்கிய வெண்ணெய்தனை
சென்னிவிழி பொருத்தான தெங்கு மிட்டுச்
    சிராக வுட்கொடு சேயிழையே ௧௪௬

செய்ய சுரசன்னி யெப்பிளைப் பும்மதிற்
    சிக்கிய கோழைதினக் காய்ச்சல்
ஐயமிரு பதுடன் மூச்சுத் தொய்வு
    மானசுவா தமை யாறினுக்கும்
துய்ய நிலவேர் முசிற்றண்ட மிந்துப்புத்
    தோகையர் பால்விட் டரைத்தபின்பு

வெய்ய கடுக்காய வித்திடு நீரினில்
விட்டுக்கு ளிகையொன் றிட்டிடுமே ௧௪௭

இட்டம ருந்திடிற் றெய்விளைப் புக்நெஞ்சி
லேறிய டைத்தசி லேற்பனமும்
கட்டுவிட் டோடிக்க லங்கும்பி ணியெல்லாங்
காணுதொ ழிந்திடுங் கும்மியடி
விட்டுனு சக்கர நற்குளி கைதன்னை
வேண்டிய ருந்திநற் கும்மியடி
தொட்டபி ணியெல்லாம் விட்டோடய கன்றிடுத்
தோழியே வாழிநற் கும்மியடி ௧௪௮

## விசயராசன் குளிகை

திருமலி கடுக்காய் கோட்டந் திப்பிலி மூல மல்லி
வருமிரு சீர கந்தான் வசுவாசி குலக்கா யோடு சாதிக்காய்
மருவுறு சிவந்த சந்த மாசிக்காய் கடுகு ரோணி
தருமதி மதுர மல்லாற் சாற்றுமக் கருக்க ராம்பே ௧௪௯

திப்பிலி யிவற்றி னோடு சேருமிந் துப்பு நாவி
நற்பொரி காரம் வெள்ளை நபக்தபா ஷாணஞ் சீனம்
சொற்பெறு மிரசங் கெந்தி சூழ்மனோ சிலையே பின்னும்
பொற்புறு சுவர்ண தாரம் பொருந்தவொவ் வொருக ழஞ்சே

சாரணை வெள்ளை யுள்ளி தக்கது தளையின் வேரும்
சீர்மட லிதா ரந்தான் சேரிரு கழஞ்ச தாக
நாரியர் பாலி னூடு நற்றேருடம் பழச்சாற் றுனும்
நேருற வகைக்கி ரண்டு சாமமு மரைத்த பின்னர் ௧௫௧

சுத்தியிற் றெளிந்த வாளஞ் சொல்லிரு கழஞ்சு தன்னைச்
சத்துள மருந்திற் பாதி தன்னிலே கூட்டி யாட்டி
ஒத்துள வில்வி னுற்ற விரையென வுருட்டிக் கொண்டு
மற்றினித் திருநோயு மனுபான வகையுங் கேளே ௧௫௨

கேளாடா தோடைவேர் வேப்பம் பட்டை
கிளர்காண மதிமதுர மவித்த நீரில்
மாறாத கோழைவகை யனைத்து மாறும்,
வளரிருமல் விலவினுறு பட்டைச் சாற்றில்,
கோளாறு படுஞ்சுரங்க ளிளைப்புத் தாகங்
குறைந்திடநன் னரிமுத்தங் குப்பை மேனி
வாளாரும் விழிமடவீர் பற்ப டாகம்
வளருமிரு வேலியிலா மிச்சி னோடே ௧௫௪

நிம்பநெட்டுச் சிந்திறு யுருவி சுக்கு
நிகழுள்ளி யவித்திடுநீர் தேனி னோடே
கும்பமுலைப் பாலுஞ்சந் தனமுங் கூட்டிக்
கொடுவகலு, நாவரட்சி தண்ணீர்த் தாகம்
நம்புமதி மதுரமது பொடியாய்ப் பண்ணி
நறுநெய்யுங் கூட்டியிட நன்மை யாகும்,
துன்பமுறு தொய்வுக்குச் சீனக் காரஞ்
சொன்மதுரம் வெள்ளைபுள்ளி கொத்த மல்லி

சந்தனமுஞ் சமனரைத்து முலைப்பால் தேனுஞ்
சாரித்துக் கொடுக்கவதிற் சாந்த மாகும்,
மந்தமுறு முவாந்தியுடன் பேதி யாகில்
வருத்தசிறு புள்ளடியுந் தேனுங் கூட்டி
வெந்திடுநீ ரதிற்கொடுக்க நிவிர்த்தி யாகும்,
விளம்புசுரந் தன்னோடு வாந்தி பேதி
வந்தகைகா லுளைவுழந்தி வெதுப்பு மாற
வசுவாசி காரம்பிருசி ரகங்கு லக்காய் ௧௫௫

சுக்குமிள குடனெநற் பொரியு மெல்லாந்
தூளாக்கி யிளநீரிற் போட்டுக் காய்ச்சி
மிக்கவந்நீ ரிறுத்ததிலே கொடுக்க நீங்கு,
மிகுசத்தி கழிச்சலசீ ரணம்வ யிற்றில்
கக்கிநிற்கும் பொருமலிவை நீங்கு தற்குக்
கடுகுமிள குள்ளிபெருங் காய மல்லால்

தக்கவசம் பிவையரைந்து வெள்ளை ருக்கின்
சாறுபிலே தனிற்பூசிச் சாற்றக் கேளே ௧௫௭

சாற்றியவே ழிலேதம்பிற் பூசி யொன்றாய்ச்
சாரவடிக் கிச்சுருட்டிச் சாம்பர்க் குள்ளே
ஏற்றிவெந்த பின்கசக்கிப் பிழிந்த நீரு
மெலுமிச்சம் பழநீரு முப்பு நீரும்
ஆற்றலுடன் கூட்டியே குளிகை யிய,
வருஞ்சன்னி கைகால்க ளுளை வி வைக்குத்
தோற்றுகஞ்சா விலைநொச்சி குருந்து வில்வஞ்
சொற்கோரை யுடன்கான்றை சூழும் வேர்கள்

அவையுடனே நெற்பொரியு மவித்த நீரி
லருத்திபிட நீங்குமிவை யல்லாற் சன்னி
நவைபெறுபத் தெட்டுக்கும் புறங்கை தன்னி
ஞறியிலே நொச்சிவரு துளிரும் வேம்பின்
*சிவைபுள்ளி சுக்கிடித்து வெந்த நீரிற்
றீட்டுபிர சவசன்னி சுரமு பூத்தி
தவநீங்கப் பெருங்காய மிரண்டு சீரஞ்
சாற்றியதிப் பிலியுளவாச் சசியி லுப்பு ௧௫௮

நிறுத்தெடுத்துச் சமனாக வரைத்து நன்றாய்
நிறமுடைய செவ்விளநீர்த் தண்ணீர் விட்டுச்
சிறுத்தநெருப் பிற்கொதித்துப் பிழிந்த நீரிற்
செப்பியநற் குளிகையிடச் சீரி தாகும்,
குறித்தபிர சவசுரத்துக் கின்னமொன்று
கொள்ளுவசம் புள்ளிநொச்சி வில்வம் வேரும்
மறுத்தவிர விடித்தவித்த குடிநீ ராகும்,
வருகொளுவல் பிறவிச்சு மாற்றக் கேளே ௧௫௯

மாற்றுகழல் நொச்சிசிறு மட்டி கான்றை
வருமுருங்கை யிவைவேர்கள் மாவி லங்கை

---

சிவை-வேர்

சாற்றுமிலை யுடன்வேரு நிம்ப ரெட்டுத்
தகுசுக்கு வசம்புள்ளி யவித்த நீராம்,
தோற்றியநோய் மீறிநிற்கில் வசம்பு நிம்பத்
*துவக்குமத விலைமுருங்கை மாவி லங்கை
ஏற்றவிவை வேர்பொன்னுங் காணி தேசி
யுடனனிச்சை முடிதும்மை யிலைக ளெல்லாம் ௧௱0

எல்லாமோர் நிறையாக வவித்த நீரி
லிடக்குணமாம், வயிற்றுவலி வாயுக் குத்துப்
பொல்லாநோ யிவைநீங்க மாவி லங்கை
புகன்முருக்கு முருங்கையிவை பட்டை யுள்ளி
நல்லாய்சுக் குடன்வசம்பு மிளகி டித்து
நல்வண்டு கட்டியவி பிழிந்த நீரில்
சொல்லாரும் வேப்பெண்ணெய் கூட்டி யிட்டாற்
றொலையுமின்னும் வயிற்றுவலி யூமைச் சன்னி ௧௱௧

சன்னிக்கு மிளகுவேர் முருங்கை யின்வேர்
சாருமா விலங்கைவேர் சம்பீ ரத்தின்
மன்னுமிலை பொன்னிறு விரைவேர் கூட்டி
வறுத்தவித்த நீரிட நடுக்கற் சன்னி
துன்னுவயிற் றின்வலிக்குச் சுக்குக் கஞ்சாச்
சொல்லுதயிர் வேளையினின் வேரி றோடே
இன்னமுங்கேள் கொடுவேலி காட்டு மஞ்ச
ளிலையவித்த குடிநீரின் முலைப்பால் கூட்டி ௧௱௨

கூட்டியதிற் கொடுத்துவிடிற் றீரு முட்டுக்
கொண்டுமல சலமடைத்தாற் குளிகை யொன்று
நாட்டுமெனு மிச்சையுறு பழச்சாற் றிட்டா
னன்றுகு மந்தசன்னி வாத சன்னி
வாட்டுநீர்ப் பாட்டினுறு சன்னி தீர
வருநொச்சி வேம்பாடா தோடை. கான்றை

---

*துவக்கு-பட்டை

ஈட்டுகழல் தயிர்வேளை மாவி லங்கை
யெலுமிச்சை யுடன்றேடை யிவைக ளெல்லாம் ௧௧௩

எல்லாநற் கொழுந்துவகை பிடியோவ் வொன்று
மெடுசுக்கு மிளகுள்ளி கடுகுங் கூட்டி
நல்லாக வேயிடித்து வண்ட வித்து
நாட்டியவைத் தெண்ணெய்மேற் கூட்டி யூட்டப்
பொல்லாத காய்ச்சல்பொறுப் பிவைக ளரப்
புகல்காட்டா மணக்கினுறு பட்டைச் சாறும்
நல்லாய்கேள் பித்தசுரங் கொதித்துக் கொண்டால்
நாயுருவி வேர்கஞ்சாங் கோரை வேரே ௧௧௪

வேருடனே வேம்பினுறு பட்டை யுள்ளி
மிகுசுக்குக் கொள்ளவித்துப் பிழிந்த நீரில்
நாரியர்பால் தேன்கூட்டிக் கொடுக்க நன்று
நாடிநின்று விடாதசுரந் தனக்குக் கேண்மின்
சேருமிரு வேலியிலா மிச்சுச் சிந்தில்
திகழுபெருங் குமிழ்நிம்ப விலைகு ருந்து
வேரிகமழ் சந்தனமுங் கடுக்காய் முத்தம்
வேண்டியவித் திடுகுடிநீர் தேனுங் கூட்டே ௧௧௫

கூட்டியிட மாறுதேற் கஞ்சாங் கோரை
கூறுதயிர் வேளையிலை யிலையு மல்லி
நாட்டியமுந் திரிகையினிற் பழமுஞ் சேர்த்து
நன்கவித்த குடிநீரிற் கொடுக்க நன்றும்
வாட்டுமந்த பித்தசன்னி தனக்குத் தோடை
வருமுருக்கு முருங்கையெலு மிச்சை தானும்
சூட்டுமா விலங்கையிவை யெல்லாம் பட்டை
தொகைசரியாய்க் கூட்டியொரு பங்கு கொண்டே ௧௧௬

கொண்டுமிள குள்ளிசுக்குக் கடுகி ருப்பை
கூறரைப்பு மொருபங்கு சமன தாக
வண்டவித்துப் பிழிந்திடுநீ ரதிலஞ் செண்ணெய்
வளமுடனே கூட்டியிட மாறு மின்னும்

மண்டுகுன்மம் வயிற்றுவலி பிரட்டிச் சந்தி
    வாயூற லிவைதீர வருக டற்சில்
அண்டுகழ லிவைபருப்பு வன்னி கர்ப்ப
    மதனிலெரித் தெபாரியின்று மவற்றி னோடே ககஎ

சொல்லுமெலு மிச்சையினிற் பழத்தின் றோலைச்
    சுட்டெடுத்துக் கூட்டியிடி பொடிய தாக்கி
நல்லவெங்கீ ரதிற்கலக்கி யுப்பு நீருந்
    நவிலுமெலு மிச்சையுறு புளியும் விட்டு
மெல்லவொரு குளிகையுடன் சீனி கூட்டி
    விரும்பியுணத் தீருமினி வாத மேவும்
வல்லசுரந் திருக்கொன்றை சமூலந் தன்னில்
    வருகுடிநீ ரிட்டருந்த மாறிப் போமே, ககஅ

மாறுகண்ட மாலைக்குத் துரிசு சினம்
    வட்டினிலை வெள்ளுள்ளி பொடிய தாக்கிக்
கூறுமொரு குளிகையதிற் கூட்டி யுண்க,
    கொடியபேய் பிசாசுகட்குக் கருப்பஞ் சாறு
நாறுகின்ற வேப்பெண்ணெ யிலுப்பைப் பட்டை
    நற்சாறுங் கூட்டியிட நன்று, மின்னும்
வீறுகொண்ட பலசன்னிக் கஞ்ச னங்கேள்
    வேப்பிலைச்சா றெள்ளெண்ணெய் விரவிக் கொள்ளே

விரவியகா தினிற்குத்துக் கெள்ளி லெண்ணெய்
    மேலெருக்கி னிலைச்சாறுங் குளிகை தானும்
மருவியிடத் தீர்ந்துபோம் பிதற்றுஞ்சன்னி
    வந்துமெதனிற் றெட்டிற்றோல் வசம்பு மாகும்
சருவுருட்டு சன்னிக்கு கிம்ப வெண்ணெய்
    தனிவிடுக மடமானே கதறுஞ் சன்னி
உருவுகெடப் பாவட்டை யிலையுஞ் சுக்கு
    முறுவேட்டு வன்கூடுங் குடிநீர் காய்ச்சே கஎ0

ஆய்ச்சியநீ ருடன்றேசிப் புளியுஞ் சீனி
    கழுநீருங் கூட்டியொரு குளிகை யிட்டால்

ஆச்சுநின்று மங்கையர்பால் சினி தானு
மதற்காகுஞ் சிரவின்ற வரிவை யர்க்குக்
காய்ச்சல்குளி ரையுமுடன் மூச்சுக் கண்டாற்
கருதுமுத்த நன்னாரி யாடா தோடை
வாய்ச்சபெரு மருந்தசுவ கந்தி யோடு
வளர்பிரமி யதிமதூரம் வளைய லுப்பே கஎக

உப்புமிவை குடிநீராம் பித்த சன்னி
யுறுமென்றால் வேம்பாடா தோடை கோரை
செப்பியவீ சுரமூலி வளைய லுப்புச்
சீந்திலதி மதுரமிவை பொடிய தாக்கி
ஒப்பியிட வதிவெலிவு மிகுந்து தென்று
லுளசீந்தி விலவேம்பு நிம்பங் கோரை
தப்பறவேர் சமனுக்கு கெல்வி சுக்குத்
தான்றியிவை குடிநீராய்ச் சாற்றி னோ கஎஉ

சாற்றுமவள் பலசன்னி தீரக் கான்றை
தருநொச்சி வேம்பிலைகள் பிடியொவ் வொன்று
மாற்றமிகு நன்னாரி கோரை வில்வம்
வருமிலாமிச் சிறுவேலி சிறுகாஞ் சொன்றி
தோற்றும்வேர் கழஞ்சிரண்டு வகையொவ் வொன்று
சுக்குமிள குள்ளிகடுக் காய்க ராம்பு
தேற்றமுட னொருகழஞ்சு விதங் கூட்டிச்
சேர்த்திடித்து வண்டிலவி பிழிந்த நீரே கஎங

நீரிவிடச் சுகமாகு மின்ன மொன்று
நிம்பவேர் கான்றைவேர் கஞ்சாங் கோரை
சாருநாய்க் குருந்துகிலு கிலுப்பை நாவித்
தண்டையிஞ்சி தயிர்வேளை யாடா தோடை
சேருமங்கா[1]ரிகையுஞ்சா ரணையு மல்லாற்
றேசியின்வேர் மிளகொடுதிப் பிலியு மெல்லாம்
சேரிடையா யிடித்தரைத்துக் காயங் காய்ச்சி
நிகழ்த்துமொரு குளிகையதி லிட்டுண் மாதே கஎச

1 அங்காரிகை நன்னாரி

மாதராசே பித்தசுரம் வந்து தென்றன்
மலைதாங்கி வேர்சீந்தின் முத்தக் காசு
பேதமறு மிருவேலி வேப்ப நெட்டிப்
பேய்ப்புடோ லிலாமிச்சுப் பற்ப டாகம்
சிதமுறு நீரிவிட்டு வற்றக் காய்ச்சிற்
றிருமிதன் பேர்விசய ராச னுரும்
ஓதுமனு பானமிறுங் குணங்கள் கண்டே
யூட்டவெகு நோய்திரு முண்மை யாமே ௧௭௫

## சன்னிகாலன் மாத்திரை

சீர்பெறு கோரோ சனையொடு புனுகுஞ்
செப்பிய சூதமுங் கெந்தி
கார்பெறு நாவி யிரசகர்ப் பூரங்
கடுகிய கெவுரிநல் வெள்ளை
பேர்பெறு தொட்டி பொன்னரி தாரம்
பீடுறு நிருவிட மிலிங்கம்
நேர்பெறு சீன முடன்பொரி கார
நிறுத்திவை சமனுற வெடுத்தே ௧௭௬

எடுத்திடு சரக்கின் முன்னிரண் டொழிந்த
விவையெலாங் கிளிபெற முடிந்தே
அடுத்திடு குமரிச் சாற்றினிற் றேரலா
யந்திர மாவலித் ததற்பின்
விடுத்திடு சரக்குங் கூட்டியம் மியினில்
விதித்திடு மங்கைதன் பாலால்
மடுத்தொரு சாம மரைத்துச்செம் முள்ளி
வந்திடு சாறொரு சாமம் ௧௭௭

சாமமே கையாந் தகரையின் சாறு
தரும்படி விட்டரைத் ததற்பின்
நீமணித் தக்கா ளியின்வரு சாற்றி
னிகழொரு சாமமு மரைத்தே

Good for malaria & bile fever

காமுறு குளிகை யுழுந்தள வாகக்
கட்டிநன் னிழறனி லுலர்த்தித்
தாமமார் குழலா யிஞ்சியி னீரிற்
சன்னிகள் சுரங்கள்போய் விடுமே ௧௭௮

## சாதிலிங்க மாத்திரை

¶நீலகண்டர் பொரிகாரந் துத்த மூன்றுந்
திறத்துவகைக் கொருமூன்று கழஞ்செ டுத்தே
ஆலமுண்ட கண்டனடி நினைந்தெ ருக்கி
னகன்பாலா லரைத்துப்பின் சாதி லிங்கம்
நாலிரண்டு கழஞ்சுக்குக் கவசஞ் செய்து
நயந்தகரி யுப்பெருக்கின் பாலா லாட்டி
மேலுமண்டிக் கவசித்துப் புற்று மண்ணு
மேற்கவசஞ் செய்ததற்பின் விளம்பக் கேளே ௧௭௯

கேளிரண்டு படிமணலின் மறைவி னுள்ளே
கிளத்துமிரு நான்கெருவிற் புடமிட் டுப்பின்
மீளவுமே முன்போலக் கவசஞ்செய்து
விள்ளுபுடமிரண்டு முன்போலிட்டுக்கொண்டு
வாளனைய விழிமடவாய் கவச நீக்கி
மருந்தெடுத்துக் கோநீரிற் கழுவிப் பின்னைக்
கோளகலச் சுத்திசெய்த *விடங்க ணத்தைக்
குறையாதே யெண்கழஞ்சு பொரித்துக் கூட்டே

கூட்டிமுலைப் பாறன்னு லரைத்து ருண்டை
கூறுசுண்டைக் காயளவா யுருட்டி வைத்து
வாட்டமுறு சன்னிவகைக் கிஞ்சிச் சாறு
மங்கையர்பா றேன்கூட்டி யாறு நேரம்
ஊட்டிவர நன்றுரும் வாயுந் தொந்த
முள்ளியிஞ்சி பிழிந்திடுநீ ருட்டப் போகும்

¶நீலகண்டர்-துரிசு *இடங்கணம்-வெண்காரம்

பாட்டி னுள்ள முறைப்படியே வழுவுறாத
　　படிசெய்த மடமானே பண்ப தாமே　　கஅக

### சாதிலிங்கமிருத்தியாதி மாத்திரை

சீர்பெறு தங்கம் முத்தொடு பவளஞ்
　　சேர்ந்திடு வெள்ளிகுங் குமப்பூ
நேர்பெறு கோரோசனையொடு *பளித
　　கேழ்மிரு கத்துறு கொம்பு
கார்பெறு கெருட பச்சையிற் றுப்புக்
　　கடியதேற் றுவிதை மான்கோம்
பார்பெறு சுக்கு மதூரஞ்சா திக்கா
　　யக்கரூத் தன்னெடு கோட்டம்　　கஅஉ

கொச்சியி லேலம் விடயமீ ரரத்தை
　　கூர்கடுக் காயிரு சீரம்
நச்சுதிப் பிலியின் மூலமுந் தேவர்
　　நாடிய தாரநன் மிளகு
மெச்சிய கறுவாக் கடுகுரோ கணியு
　　மென்வசு வாசியுங் காம்பும்
அச்சிறு நாகம் பூச்சிறு தேக்கு
　　மக்குமா மணியும்வான் மிளகே　　கஅங

வயுமப் பிரகத் தாம்பிர மிவற்றி
　　னிலைத்தகிக் தூரமு மொவ்வொவான்
றுபுமோர் கழஞ்சு சுத்தியிற் றெளிந்த
　　வரியசா திலிங்கம தறையில்
பாய்பதி னாறு கழஞ்சுமாய்க் கொண்டு
　　பகர்சிறு செண்பக மலரை
நேயமாய்ப் பலமொன் றவிந்தெடுத் திட்ட
　　நீரிலோர் நாளரைத் ததற்பின்　　கஅச

சாற்றில வங்கப் பட்டையோர் பலத்தைத்
　　தகவுற வவித்திடு நீரில்

*பளிதம்-பச்சைக்கர்ப்பூரம்

தேற்றமா யோர்காட் சந்தன மவித்த
திப்பிய நீரினு மோர்நாள்
எற்றுறு மாடா தோடையின் வேரி
லெடுத்திடு நீரினு மோர்நாள்
மாற்றறு அறு வனையின்வே ரவித்து
வந்தநீர் தன்னிலோர் நாளே ௧அ௫

இப்படி யரைத்த மருந்தினைப் பதமா
வெடுத்தாகப் பயறுபோ லுருட்டி
மெய்ப்படி நிழலி லுலர்த்தியே சன்னி
யீச்சுடன் சுவாதநோய் தமக்குத்
தப்பற வின்சி தேன்முலைப் பாலிற்
றருமிரு குளிகையூட் டிடுவாய்
செப்புறு முள்ளித் தைலம்வேப் பெண்ணெய்
சேர்த்திடாய் வலிக்கனு பானம் ௧அ௬

## கௌரிமாத்திரை

சீரார் பொன்னரி தாரமுடன் சிறந்த கெந்தகஞ் சாதிலிங்கம்
வாரார் கௌரி பாஷாணம் வளருங் கடுக்காய் நேர்வாளம்
நேரா யோரான் ளெருக்கிலை யாய்ந்த துக்கஞ்சாவிலைச்சாற்றால்
சீரா யரைத்துப் பயறளவு திரட்டி நிழலி லுலர்த்திடுமே ௧அ௭

உலர்த்துங் குளிகைக் கனுபான முற்ற கடுக்காய் சிற்றமட்டி
பெலத்த வட்டுப் போமட்டி பேசுங் கண்டங் கத்தரியும்
நலத்த சுக்கு மிவை சமனுப் நாடி யவித்த குடிநீரில்
மலத்தைச் சலத்தை முறுக்குசன்னி மாறிப் போகு மடமானே

மானே நிம்பத் தைலத்தில் வாருங் குளிகை யொன்றுரைத்துத்
தானே கொடுக்க நடுக்குசன்னி சகல சன்னி வகையும்போம்
கானேய் நாவற் பட்டையுமாங் கருதுஞ் சேற்பன சன்னிக்குத்
தேனே முலைப்பால் பூநாகஞ் சேர்த்துக் குளிகை யிட்டிடுமே

இடுமே யலட்டு சன்னிதனக் கினிக்குந் தேனி லொருகுளிகை
கொடுமே பல்லுக் கிட்டியிடுங் கூறு (மீச்சம் பழச்சாற்றில்)

சன்னிமலத்துக்கும் இஞ்சி முலைப்பால்.
மலமிளக்கம் போனால் இஞ்சி, தேன் ...

விடுமே நயன மூடிநிற்கின் மிளகு நீரி லஞ்சனமாம்
தொடுமேயிருப்பையாமணக்குச்சொல்லுநிம்பமெள்ளெண்ணெய்

எண்ணெய்நாலுங்கொதிப்பித்தேயிசைவாய்க்குளிகைபொடித்திட்டுக்
கண்ணு நாசி செவிகளிலுங் கருதி யிட்டு மேற்பூசி
வண்ண மேவுஞ் சிரசினிலும் வைத்தே யுள்ளும் புகட்டியிடில்
எண்ணி வலிக்குஞ் சன்னிவகை யெல்லாந் தீருமென்றாரே ௧௯௧

என்றார் புருவ நெரிப்பதனுக் கிசைத்த சுக்கு வசம்புடனே
குன்றா மஞ்சள் மூன்றுபலே கூட்டிச் சமனாய்ச் சிறுநீர்விட்
டொன்றா யரைத்துக் குளிகையுட னுற்ற நுதலின் மத்திக்க
நின்றே பிரட்டுஞ் சத்திக்கு நிகழ்கா ணத்தி னவிநீரே ௧௯௨

நீரே துளசிச் சாற்றிலிட நிறைந்த சன்னி குறைந்துவிடும்
பாரே யிஞ்சிச் சாற்றிலிடப் பகர்கொட் டாவிச் சன்னிபோம்
சேரே வெள்ளை வெண்காயஞ் செப்பும் வசம்பு சன்னிவிரை
தேரே வெள்ளை வாரணத்தின் சேருங்காரம் பூநாகம் ௧௯௩

நாகமுடனே முயிற்றுமுட்டை நாடும் வெளுத்தற் பிசினிவைகள்
ஆக வெல்லா மோர்நிறையா யாடா தோடை யதின்சாற்றில்
போகவரைத்துத்தேற்றாவின்பொருந்துவிரைபோ லுண்டைபண்ணி
வாகு பெறவே நிழலுலர்த்தி வைத்தே பின்னர் வகைகேளே

வகைகேளுரைத்த விலைச்சாற்றில் வகுத்தகுளிகை தன்னுடனே
பகருங் கெவுரி யுண்டையதும் பண்பாங் கோரோ சனையதுவும்
தகவே கூட்டிக் கொடுத்திடுகிற் சாருஞ் சேற்ப சன்னியறும்
மிகவே யின்னுங் குணங்கண்டு விதித்த பானங் கொள்ளநன்றே

## வாதசிந்தாமணிக்குளிகை

இரசம், கெந்தம், பெருங்காயம்-வகை-கழஞ்சு-௪. அரிதாரம், மனோசிலை, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, துத்தம், துரிசு வகை-கழஞ்சு-௨. மஞ்சள், சிற்றரத்தை, இந்துப்பு, சதகுப்பை, கராம்பு, வால்மிளகு, ஏலம், வசம்பு, மரமஞ்சள், தேவதாரம்-வகை-கழஞ்சு-௧. வெள்ளுள்ளி இரண்டுபலம் உரித்து

அரைத்துப்பிழிந்த தைலம்விட்டு நன்றாயரைத்துப் பின் மாவிலங்கமிலைச் சாறுவிட்டு ஒருநாளும், நொச்சியிலைச் சாறுவிட்டு ஒருநாளும், உத்தமாகாணிச்சாறுவிட்டு ஒருநாளுமாக மூன்று நாட்களரைத்துப் பதத்தில் வழித்து மிளகளவுருட்டி நிழலுலர்த்திவைக்கவும்.

சுக்கும் பெருங்காயமும் பொடிசெய்து பத்துக் குளிகை கூட்டிப் பொடித்து உச்சந்தலை, பிடரி, கன்னச்சுழி முதலுத் தானங்களிலே மத்தித்து உள்ளியும் அரிசியும் வறுத்தவித்த குடிநீர் கொடுத்துவரவும். சன்னிகுறைந்துவந்தால் இதுபோதும்; அதிகப்படுமானால் இஞ்சிச்சாற்றிலும் உள்ளிச்சாற்றிலும் ஒருகுளிகை கொடுத்துவரவும். நாவரட்சி தாகத்துக்கு சுக்கு திப்பிலி வகைக்கிரண்டு கழஞ்சு வறுத்தவித்த தண்ணீர் கொடுத்துவரவும். சன்னி 18ம் சுரம் நாவரட்சி தாகம்முதலியனவும் தீரும். இந்த மருந்துக்கு மிஞ்சினால், கொத்தியெண்ணெய், சன்னிபாதசுரத்திலெண்ணெய், முக்கூட்டிலெண்ணெய், கோழிமுட்டைத்தைலம் இவற்றில் இணங்கின எண்ணெய் வைக்கவும்

## வாதசிந்தாமணிக்குளிகை

(மற்றொரு பிரதியின்படி)

இரசம், கெந்தகம், பெருங்காயம்-வகை-கழஞ்சு-௪. ஊசிக்காந்தம், சாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை, வெளுத்தற்பிசின், சன்னிநாயன், சுக்கு மிளகு கடுகு துரிசு, துத்தம்-வகை கழஞ்சு-௩. மஞ்சள், சிற்றரத்தை, பேரரத்தை, இந்துப்பு, சதகுப்பை, கராம்பு, வால்மிளகு, ஏலம், வசம்பு, மரமஞ்சள் தேவதாரம், வகை-கழஞ்சு-௨. திப்பிலி, ஓமம், வகை-கழஞ்சு-௧. அரைப்புமுதலியன முன்போலவே.

இதன்கீழ் "சூசிகாபாணம்" வரை பரராசசேகரப் பிரதியிலுள்ளனவாம். சஞ்சீவிரசம், தீபாக்கினிகுமாரன், மாறனுக்கு மனோகர அக்கினிகுமாரன் என்னும்மூன்று மருந்துமுறைகள் கூறப்பட்டிருக்கும் செய்யுட்கள் இடையிடையே சில அடிகள்

விடப்பட்டிருத்தலால், சிலராக்ருகள் தவறிப்போயிருக்கவேண்டுமென்னும் ஐயத்தினால் இங்கு சேராது நீக்கப்பட்டன.

## சுபச்சந்த பைரவம்

நாவியிரதங் கெந்தகத்தே டைப பற்ப
நல்லிரச பற்பமிவை சமனாய்க் கூட்டித்
தேவிபலை கஷாயத்தி லிரண்டு சாமஞ்
சிக்கெனவே மத்தித்துச் சென்ற பின்பு
வாவுமிகு தோலாயெக் கிரத்தில் வைத்து
மந்தாக்கினி யாயெரித்து வாரகப் பித்தில்
பாவனைகள் பண்ணியுண்டை குன்றி போலப்
பருத்தவிஞ்சி தனிற்குப்ச சன்னி பாறும் ௧௧௬

பாருசுபச் சந்தபை ரவவுண் டைக்குப்
பத்தியங்கேள் பசுத்தயிருஞ் சோறு மாக
வீறுபெறக் கொடுத்தபின்பு தண்ணீர்த் தாக
மிஞ்சிநிற்கிற் றண்ணீரை வேண்டு மட்டும்
ஊறமிர்த பானமெனப் பருகப் பண்ணி
யுலருகாத் திடுமரசர்க் குபகா ரஞ்செய்
பேறுபெறச் செய்திடுகிற் குப்ச சன்னி
பேசாமல் விட்டேகும் பிசகில் லாதே ௧௧௭

## சித்தானந்த பைரவம்

இரசமெகந்த மனோசிலையோ டரிதா ரங்க
ளிசைவுறுதாம் பிரபற்ப முலோக பற்பம்
பிசகின்றிச் சமனாய்க்கொண் டாடா தோடை
பேணுகண்டங் கத்தரிசம் பீர்க்காய்ச் சாறு
வசையன்றி யொவ்வொருநா ளேற வைத்து
வாலுகா யந்திரத்தி னைஞ் சாமம்
இசைவொன்ற வெரித்துப்பின் மூன்று நாள்க
ளிஞ்சிச்சாற் றரைத்துண்டை யிணங்கச் செய்யே ௧௧௮

செய்யகுன்றிப் பிரமாண முண்டை தன்னைச்
சித்திரமூ லிச்சாற்றிற் றீய சன்னி
ஐயசன்னி விஷமசுர மறிவ ழிச்ச
லதிகசன்னி பாதசுர மீனத்துந் தீரும்
கையுமிடை செய்யவிதழ் மானே கேளாய்
நம்பனுயர் தவத்தாலே வந்த தூயன்
பையரவ மணிந்திடு நற் சித்தானந்த
பைரவன்றன் குளிகையெனப் பகர லாமே ௧௯௯

## ஆனந்த பைரவம்

மேவுகின்ற நாவியொன்று சூத மொன்று
வெண்கார மிரண்டிலிங்க நாலிஞ் சிச்சா
றேவறவே சாமந்தா லரைத்து நல்ல
வுழுந்தளவா யுண்டைபண்ணி யிஞ்சிச் சாற்றில்
தாவறவே கொடுத்துவரச் சுரமுந் தீருஞ்
சன்னியுடன் பாதசுரந் தானும் தீரும்
ஆவுயர்த்தா னந்தவயி ரவனு ருண்டை
யவனியுளீர் தவறின்றி யறிகு வீரே ௨00

## பஞ்சரசம்

வீறுகெந் தகம்வெண் காரம் விளங்கிய விரதத் தோடு
சீறிய மிளகு நல்ல திப்பிலி சமனுய்க் கூட்டி
ஏறிய மூன்று பத்தா மெலுமிச்சம் பழநீ ராலே
மாறவே யரைத்துக் குன்றி மணியென வுண்டைசேரே ௨0௧

சேர்த்தபி னெருக்கம் வேரைச் சிறக்கவே கஷாய மிட்டுக்
போர்த்திரி கடுகு மந்தப் பொடியுமோ ருண்டை யிட்டு
மாற்றமாய்க் கொடுத்தாற் சன்னி பாதமுஞ் சுரமுந் தீரும்
சாற்றுமிவ் வுண்டை பஞ்ச ரசமெனச் சாற்ற லாமே ௨0௨

## காலாக்கினி யிரசம்

அறிந்திடு காலாக் கினிரசந் தன்னை
யாயுண் மறையினர் சொல்வார்

PHARMACY 456 HOSPITAL ROAD JAFFNA DIAL 7386

பிறிந்திடு சத்திச் சாரநல் லுப்புப்
பெலத்த காய்ச்சுப்பிங் துப்புச்
செறிந்தநல் லுப்பு வளையலுப் புடனே
சேர்ந்த கெந்திரச நாவி
எறிந்தவெண் கார மிவைசமன் கூட்டி
யிப்படி மருந்தினை முகியே ● உ0௩

முகிதிரி பலைசமன் கஷாயமே விட்டு
மூன்றுநா ளம்மியி லரைத்து
வகைபடு வச்சிரக் குகையிலே வைத்து
வாலுகா யந்திரந் தனிலே
புகையிலா வெரியிட் டேயொரு சாமம்
பொறுத்தபி னாறியே யெடுத்துத்
தொகைபெறு பன்றி யாடுடன் மீனும்
தோற்றிய மயிற்பித்து மெடுமே உ0௪

எடுத்திடும் பித்து மிவையெலாம் பிசறி
யேற்கவே சிமிழினில் வைத்து
மடுத்திடு குன்றி மணியென வெடுத்து
வந்தவா டாதோடை யிஞ்சி
கொடுத்திடுஞ் சாற்றிற் கொடுக்கவே சுரமுங்
கூறிய சன்னியின் வாதம்
படுத்திரி தோஷம் பன்னிரு சன்னி
பறந்துபின் னோடுமக் கிளியே உ0௫

## செயரசம்

அக்கினி யாகு நவசுரத் துக்கு
மறிந்திடுஞ் செயரசஞ் சொல்வேன்
மிக்கமுக் கழஞ்சு கெந்தக மிரசு
மேலுமுக் கழஞ்சுடன் சமனுப்ச்
சிக்குமா மணக்கி னெண்ணெய்விட் டரைத்துத்
திகழ்குகை தன்னிலே வைத்துத்

தக்கமண் சிலை செய்து பூமியிலே
தாழ்குழி கெல்விமண் போடே உ0சு

போட்டபின் குகையை வைத்ததன் மேலே
புதுமணல் சொரிந்துமேற் புடமாய்
நாட்டமா வெரியிட் டாறின பின்பு
நாவியைச் சுத்திகள் பண்ணிக்
கூட்டியே சம்னு புழுந்தள வாகக்
கொடுத்திடு சர்க்கரை தனிலே
சாட்டுமச் சுரங்கள் சகலமுந் தீருஞ்
சனிபதின் மூன்றுடன் போமே உ0எ

## திரிமூர்த்திரசம்

போகுமது திரிமூர்த்தி ரசத்தைச் சொல்வேன்
புகலிலிங்கம் வெண்காரங் கறுத்த வீயம்
ஆகுமது மூன்றுசமன் கூட்டிப் பின்னே
யரிபவெலு மிச்சையுறு பழச்சாற் றாலே
பாகுபெற வொருசாம மரைத்தி ரண்டு
பகர்குன்றிப் பிரமாண முண்டை பண்ணிப்
பாகுபெறு சர்க்கரையி விடவே மிக்க
நவசுரமுந் தீருமெனப் பகர லாமே உ0அ

## சுராங்குசரசம்

பகர்சுராங்கு சந்தன்னைப் பகரக் கேண்மின்
பண்பான வெண்கார மிதர மிந்து
புகல்மிளகு கெந்தகமும் புளியம் பட்டைப்
பொடிச்சாம்ப லொவ்வொன்று கழஞ்ச தாக
மிகவுநேர் வாளமறு கழஞ்சு கூட்டி
மேவுமெலு மிச்சஞ்சாற் றரைத்த வுண்டை
தகவுசணல் விரையளவு மிளகுத் தூளிற்
றன்கொடுக்கச் சகலசுரந் தணிந்து போமே உ0கூ

## நீலகண்டரசம்

தணிக்துவிடு நீலகண்ட விரசமதைச் சொல்வன்
    றக்கசாத் திரவேதி கழஞ்சதுவு மொன்ருய்த்
துணிக்துகேர் வாளமிரு கழஞ்சாக வெள்ளை
    சொல்கெவுரி முக்கழஞ்சு மோரொன்று கூட்டிப்
பணிக்துமோர் தனிலரைத்துப் பபறளவி லுண்டை
    பண்ணியே மோரிலிட நவிர்க்தசுரங் திரும்
அணிக்துவருஞ் சீதசுர மாறிவிடும் பின்னே
    யறிநீல கண்டரச மம்புவியிற் ருனே ௨௧௦

## சித்தாக்கினிகுமாரன்

அம்புவியிற் சித்தாக்கி னிகுமாரன் சொல்லே
    னைபச்சை நாவிரசங் கெந்தகம்வெண் காரம்
இன்பமுடன் சமன்கூட்டி யெருக்கஞ்சாற் றரைத்தே
    யியல்வச்ரக் குகையிலிட்டுச் சீலைமண் ணுஞ்செய்து
தம்பமுடன் பூமியினிற் சாண்குழியி லிட்டுத்
    தக்கவரா கப்புடமே தானறப் போட்டு
நம்புமிஞ்சி தனிற்குன்றிப் பிரமாணங் கொடுக்க
    நடுநடுங்கி விடுஞ்சுரமுஞ் சன்னிபதின் மூன்றே ௨௧௧

## இலகுவக்கினிகுமாரன்

மூன்றலகு வக்கினியாங் குமாரனதைச் சொல்வன்
    முந்துரசங் கெந்தகம்வெண் காரமரி தாரம்
ஆன்றமனே சிலையிவைகள் சமனகக் கூட்டி
    யகன்றசெருப் படிச்சாற்றி லுற்சாம மரைத்து
மான்றகா சியிற்குப்பி தனின்மருந்தை வைத்து
    வாலுகா யந்திரத்தி லறுசாம மெரித்தே
வன்றகுன்றிப் பிரமாண மிஞ்சிச்சாற் றிடவே
    யியல்சன்னி பாதசுர மிவைமேகுந் தானே ௨௧௨

## பிரதாப அக்கினிகுமாரன்

ஏகுமது பிராணாக்கி னிகுமாரன் சொல்வ
னிதாங்காழ் பிரபற்பம் பச்சிலையி னுவி
வாகுதிரி பலைபஞ்ச லவணந்தம் மோடு
வகைசமனா யிஞ்சிரசம் விட்டரைத்துக் காசி
ஆகுபெறு குப்பியினின் மண்சீலை சுற்றி
யடைவுவா லேந்திரத்தி னற்சாம மெரித்துப்
பாகுபெறு பதத்திலொன் றுநாவிபொடி யிட்டுப்
பகிஞ்சிச் சாற்றருந்தப் பலபிணிகள் போமே உகங

## பிராண அக்கினிகுமாரன்

போகுமது பிராணாக்கி னிகுமாரன் சொல்வன்
புகல்பச்சை நாவிரசங் கெந்தகமப் பிரகம்
ஆகுமது செந்தூரஞ் சமனாகக் கூட்டி
யந்தவச்சி ரக்குகையி விட்டுவா லுகத்தில்
வாகுபெற வெரியிட்டு மச்சமயி னாடு
வகையிச்சுச் சேர்த்துலர்த்தி வருகுன்றி யளவாய்த்
தாகமுட னெச்சிவரு சாற்றினிலே கொடுக்கச்
சகலசன்னி சுரமுடனே தணிந்துவிடுந் தானே உகச

## உத்தம அக்கினிகுமாரன்

பின்னுத்த மாக்கினிகு மாரனினிச் சொல்வன்
பேருநக்குக் காந்தமப்பி ரகமுடன் செம்பு
மன்னுமிவை செந்தூர மிரசத்தி னோடு
வகைசமனாய்ச் செருப்படிச்சாற் றரைத்துப்பின் காசி
மன்னுகுப்பி தனிலடைத்துச் சீலைமண் ணுஞ் செய்து
வாலுகா யந்திரத்தி லறுசாம மெரித்துத்
தன்னுமூந்துப் பிரமாண மிஞ்சிச்சாற் றிடவே
சன்னிபா தச்சுரங்க டாமகன்று போமே உகரு

## நவலோக அக்கினிகுமாரன்

அகன் றநவ லோகாக்கி னிகுமாரன் சொல்வ
னுருசொர்ண பற்பமுட னப்பிரக பற்பம்
இகன் றரச வெண்கலம்பித் தளை துத்த நாக
மீயங்கா ரீயமிவை சமனாகக் கூட்டிப்
பகன்றெருக்கம் வேர்க்கஷாயத் தரைத்துமே காசி
பகர்குப்பி வாலுகத்திற் பன்னிரண்டு சாமம்
புகன்றெரித்துப் பின்னெடுத்துக் குன்றியள விஞ்சி
புகல்சாற்றிற் கொடுத்துவிடப் போகும்பல் பிணியே

## நவரத்தின அக்கினிகுமாரன்

வயிரத மஞ்சுப்பு மாணிக்க முத்து
மிந்திரநீ லம்பவளங் கோமேத நீலம்
பாயுநவ மணியுடனே சமனாகக் கூட்டிப்
பாரிலங்கு கொடுவேலி பகர்கஷா யத்தில்
ஆயிரண்டு நாளரைத்துக் காசிக்குப் பியிலே
வாலுகா யந்திரத்தி லறுசாம மெரித்துத்
தேயகுன் றிப் பிரமாண மிஞ்சிச்சாற் றிடவே
திகழ்ரத்ன வக்கினிக்குச் சேராது பிணியே உகஎ

## ஸ்ரீமதாக்கினிகுமாரன்

சேரவே ஸ்ரீமதாக்கி னிகுமாரன் சொல்வன்
றிகழிரதந் தாம்பிரபற் பமுடனே நாவி
ஏரியல்கெந் தகமிவைகள் சமனாகக் கூட்டி
யிரண்டுநாட் செருப்படியின் சாறுவார்த் தரைத்து
வாருகர சியிற்குப்பிக் குள்ளாக வைத்து
மண்சீலை நாலுசெய்து வாலுகாயந் திரத்தில்
பாரிலொரு நாளெரித்தே யாறினபி னெடுத்துப்
பகர்நாவி சுத்திபண்ணி நாலிலொன்று கூட்டே உகஅ

கூட்டியே மிளகுபொடி நாலிலொன்று கூட்டிப்
கோதறுமிம் மருந்துதனை யாறுமதி சென்றால்

தாட்டிகமா யொருகுன்றி யளவுமருந் தெடுத்துச்
சர்க்கரைபால் கூட்டிநிதந் தானருந்தி வரவே,
வாட்டமுறு கிழவருக்கு மாண்மைபெல முண்டாம்
வகையான வீரியமும் வலுவடைந்து நிற்கும்
ஈட்டமுறு சன்னிக்கு மனுபானங் கூட்டி
லெளிதாகத் தீர்த்துவிடு மிம்மருந்து செப்பே. ௨௧௯

## சூசிகாபாணம்

செய்யுமிது சூசிகா பாணமது சொல்வன்
சேர்ந்தமனோ சிலையிரத மரிதாரந் துத்தம்
வையிரத நேர்வாளங் கெந்தகம்வெண் காரம்
பகரிலுப்பை முத்துப்பச்சை நாவியுடன் சமனாய்
வெய்யகொடு வேலிச்சாற் றரைத்துநல்ல பாம்பின்.
பித்துமொக்கப் பிசறியதை யீயக்குப் பியிலே
மையல்பெற வைத்தேதாட்டால் வாய்மூடிச் சீலை
மண்செய்து வாலுகத்தில் வைத்தெரிமுச்சாமம் ௨௨0

முச்சாம மெரித்திறக்கி முன்னீயச் சிமிழில்
முயற்சியாய் வைத்ததனை முன்புபெறச் சென்று
நிச்சயமா யுச்சியிலே குன்றிமணி யளவாய்
நீதேய்த்து வூசிமுனை நின்றவனா வாக
மெச்சவே யுட்கொடுக்கப் பதின்மூன்று சன்னி
மிகுந்தநவ சுரமுடனே விட்டுவிடு மெய்யே
உச்சிதமாய் வந்தமகா சூசிகா பாண
முயர்முனிவன் கூறியது முண்மையிது தானே-௨௨௧

## சயகுலாந்தகன்

ஆதியீசுர னுமைதனக் குரைசெயரிய தாஞ்செய குலாந்தன்
ஆனமாத் திரையையோத மேகிற மானகூந்தன் மடமாதுகேள்
தீதில்தங்க மிருபவளம் வெள்ளியொடு திறமிகுந்திடு கஸ்தூரியும்
செய்யமுத்தொரு கோரோசனைபுனுகுசேருசட்டமிருகத்தின்கொம்

போதுநற் கரியகுங் குமத்தின்மல ருற்றிடும் பசியகர்ப்புர
முருங்கையோடிமெழுமிகுமாதிஞ்சிலுடனுயர்கழற்சிமிவைவித்தெடு
பேதமின் மதுரமோ டரத்தைமிகப் பேசுகின்ற திரிகடுகுடன்
பிரிவிலாதமதிப்புப்பிசினுடும்கப்பெருமைபெற்றதிரிபலையுமே

இரசமோ டரியின்முரங் கெந்தகமு மெய்துநற் றுரிசுகாந்தமு
மினியநாவிபொரிகாரந் துத்தமுடன்மனோசிலையிலிங்கமும்
மருவுபத்து மிவைசுத்தி செய்துவகை மன்னுகின் றொருகழஞ்சதாய்
மாசிலாமலிடித்தம்மியிட்டுவளர்மாதர்தம்முலையின்பாலினைச்
செருவவோர்தினம்விட்டரைத்துவழிசெய்யகுன்றிமணிவீதமாய்ச்
செப்பமாயதையுருட்டுலர்த்திழற்றேனொடிஞ்சிமுலைப்பாலினில்
நெருவதாக வுரைத்தூட்டு வாயுசுர நெஞ்சடைப்பு மிகு மூச்சொடு
நேர்ந்தசன்னிவகைவாதபித்தமதினிகரில்வாதையுடனிருமல்போம்

மங்கையர்கள் தருபாலின் மாத்திரையை மாசிலாம லுரைத் தூட்டவே
மருவுகின்ற கயரோகமோடிருமல்மன்னுகாசமுடனீழையும்
தூங்கமாகி வருகோழை விற்புருதி சொல்லரிய கப முட்டொடு
துயர்செய்கின்றவுளைமாந்தைநெஞ்சுளைவுதொண்டைக்கம்மலொடு
பங்கமாய்வருமந்தாரகாசமொடுபகரிரத்தமுறுகாசமும் [கிறுதியும்
பரவுமத்தி சுரநிண முருக்குசுரம் படியுமேக சுரவகைகளும்
தங்குசேற்ப வகைதன்னி லுற்றுவரு தக்கநோய்கள் சுடராதபன்
தன்முனுற்ற பனியென்னவேகுமெனச்சாற்றுமேயரியவாகடம்

## மகாகஸ்தூரிமாத்திரை

முத்து, பவளம், வெள்ளி, பொன், தங்கம், வயிரம்-வகை-கழஞ்சு இரண்டு. குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி பச்சைக்கர்ப்பூரம், ஏலம், இலவங்கம், இருசீரகம், இருவேலி, இலாமிச்சு, சந்தனம், கடுக்காய் அரிதாரம், வெண்காரம், சீனக் காரம், அன்னபேதி, சாத்திரபேதி, இந்துப்பு, கல்லுப்பு, கெருடபச்சை, உருத்திராட்சம், கலங்கொம்பு, தேற்றுவிதை, பூநாகம், முயிற்றுமுட்டை - வகை கழ-க. அரிசித்திப்பிலி, முந்திரிகைப் பழம், பேரீச்சப்பழம் - வகை-கழ-ச.

கர்ப்பூரவள்ளிச்சாறு விட்டு ஒருநாளும், முலைப்பால் விட்டு ஒருநாளும், கருப்பஞ்சாறுவிட்டு ஒருநாளும் அரைத்துச் சிறுபயறளவுருட்டி நிழலுலர்த்தி வைக்கவும். சீரகமவித்த நீர், முலைப்பால், இஞ்சிச்சாறு, கருப்பஞ்சாறு, மாதுளம்பழச்சாறு, தூதுவளை, கண்டங்கத்தரி இவையவித்தநீர் முதலிய அநுபானங்களில் குணங்கண்டு கொடுக்க சன்னி, தோஷம், நெஞ்சடைப்பு, விக்கல், மூச்சு, சிலேற்பன அடைப்பு முதலியன தீரும்.

## கோழிமுட்டைத் தைலம்,

நீரணி சன்னி தோஷ நீங்கிட வாயுண் மேவும்
ஆரண முறைத்த வண்ண மறைகுது மைம்ப தாகும்
வாரண முட்டை வெள்ளை வண்கரு வதனைப் போக்கிச்
சீரணி நவபாண் டத்திற் சேர்த்துநற் றைலம் வாங்கே. உஉரு

தயிலமாம் பருவந் தன்னிற் றருகசப் பெண்ணெய் நாழி
பயிலுற விட்டுக் காய்ச்சிப் பகர்கொடு வேலி வீழி
தயிர்வளை முருங்கை மேனி தருகிலு கிலுப்பை நொச்சி
இயல்சிறு குறிஞ்சி வாத மடக்கியோ டெருக்கு மத்தை உஉசு

நரியுடை நத்தைச் சூரி பொடுதலை நாய்க்கொட் டானும்
தெரிதரு கழற்சி வேலிப் பருத்தியே செங்கத் தாரி
விரிமுடக் கொற்றா னீலி வேரிவை கழஞ்சு நான்காய்ப்
பரிவுட னரைத்து மேலு மருந்தினிப் பகரக் கேண்மோ. உஉஎ

திரிகடு காரத்தை யோமஞ் சேர்சத குப்பை யிந்து
கரியசீ ரகம்வெள் ளுள்ளி கடுகுரோ கணியே நோயைப்
பிரிவசம் புடன்வெ ளுத்தற் பிசின்சிறு தேக்கு வள்ளி
அரியவெட் பாலை சன்னி யதன்விரை சிவந்த சந்தம். உஉஅ

ஐயவி திருந்து காய மதனொடு வாய்வி ளங்கம்
துய்யகஸ் தூரி மஞ்சள் சொல்லிய மூயிற்று முட்டை
பைதவிர் பூவி ஞகம் படிமுறை கழஞ்சொவ் வொன்று
மெய்தர வரைத்துக் கூட்டி விளம்புநற் பதத்திற் காய்ச்சே

வடித்திடு மெண்ணெய் தன்னை வழாமுறை பூசி யுள்ளும்
குடித்திடு செவிகண் ஞசி கொண்டிடத் துளித்து விட்டால்
அடுத்திடு விறைப்புச் சன்னி யகலாத முகவா தங்கள்
படித்திடு மறிஞர் முன்னர்ப் பவமென விலகிப் போமே. உ௩0

கொதியெண்ணெய்

அவுரி, கான்றை, மாவிலங்கை, முருங்கை, குதிரைவாலி, ஆரமுறி, குப்பைமேனி, சன்னிநாயன், நன்னாரி, எருக்கு, பெருமருந்து, காற்றோட்டி, மயிலடிக்குருந்து, ஆடாதோடை, சாரணை இவை வேர்; நிலவேர், முயிற்றுமுட்டை, புற்றாம்பழஞ்சோறு, திரிகடுகு, வெண்காரம், வசம்பு, துத்தம், துரிசு, பெருங்காயம், பொரிகாரம், வெளுத்தநற்பிசின், கோட்டம், தேவதாரம், கருஞ்சீரகம், ஓமம், சிறுமூலம், சிவந்தபாஷாணம், குதிரைப்பாஷாணம், வெள்ளைப்பாஷாணம்-வகை-கழஞ்சு-௧; பாஷாணங்களைச் சுத்திசெய்துகொள்ளவும். சரக்குவகை வேர்வகைகளை வெவ்வேறாகத் தூள்செய்து கலந்து நல்லெண்ணெய் வேப்பெண்ணெய் சமன்கலந்து கொதிப்பித்துத் தூள்தூவிப் பொருத்தி உள்ளுங்கொடுக்கச் சன்னி பதினெட்டும் தீரும்.

நசியமும் அஞ்சனமும்.

சன்னி நாயன் பெருங்காயஞ் சாருஞ் சுக்கு வெள்ளையுள்ளி
மன்னுங் கராம்பு கார்புகா வசம்பு வெளுத்தநற் பிசினதுவும்
பன்னி நிலவேர் திப்பிலியும் பண்பா யரைத்துச் சீலையினில்
துன்னப் பூசித் திரியாகச் சுற்று நிம்ப வெண்ணெயதில் உ௩௧

அதிலே தோய்த்துச் சுடர்த்தைல மாகவெரித்து நாசியிலும்
மிதமாய் நசிய மஞ்சனமும் விழியிற் றீட்டி யுள்ளுக்கும்
இதமா யூட்டச் சன்னியெலா மேகு மெனவே குறுமுனிவன்
மதியாயுரைத்தவாசகத்தைபுணர்ந்தேபுரியும்வகைதானே உ௩உ

நசியம்

பருத்த சுக்கி னுடன்மிளகு பசிய மஞ்சள் வசநாவி
உரைத்த வாளந் திருவெண்ணீ றெருக்கக் கூட்டிப் பொடிசெய்தே
எருக்கம்பாலிற்குழைத்துலர்த்தியெடுத்துச்சிமிழில்வைத்திடுதூள்
வருத்துஞ் சன்னிவகைக்கெல்லாம்வாங்கிநசியமிடநன்றே உ௩௩

## உட்குத்தின்குணம்

வேர்த்து வெதும்பிப் பற்கிட்டி விறைத்துட் குத்தித் தாகித்துச்
சிற்ற மிருந்து கஞ்சிதண்ணீர் தேடுங் கொள்ள வொட்டாது
பார்த்து மனித ரிருக்கினுமே பறியும் வாயு கீழ்நோக்கிப்
பேர்த்துப் பகரா துட்குத்துப் பேணிச் சொல்வர் பெரியோரே

வேர்த்து விறைத்துப் பற்கிட்டி விசைத்துவாங்கிமெலி முதுகாய்ப்
பேர்த்துப் பிரிய வொண்ணாது பெரிதுங் குத்தி யுள்வாங்கும்
கோத்து வயிற்றில் வாய்வுமிகக் கொண்டு பறியுங் கீழ்நோக்கிச்
சீர்த்த கஞ்சி செல்லாது தீரா வாயு வுட்குத்தே ௨௩௫

## பிறவீச்சின்குணம்

அடுத்தடுத் தெதிர்த்துக் குத்தி யதிகமாய் விறைத்து வேர்த்துப்
படுத்தநாத் தடக்கிப் பேசும் பல்லது கிட்டு நெஞ்சும்
அடுக்கவே கட்டிச் சீறி யங்கமும் பிறகே வீழில்
திடுக்கெனப் பிறவீச் சென்று தெளிந்தவர் செப்பினாரே ௨௩௬

## அசாத்தியக்குறி

குத்துத் தொடுத்த மூன்றுநாட் கொல்லா திருக்கி னேழாநாள்
அத்திற் றள்ளி யொன்பதெனி லறிவித் தடுத்த மருந்துசெய்க
ஒத்த குத்து முரத்துவா வுண்மூச் சதுவு மேனோக்கில்
செத்தே போவார் திண்ணமெனக் குறிய முனிவன் செப்பினனே

விறைத்து வேர்த்துப் பற்கிட்டி விறகு தடிபோ னெளிமுதுகாய்க்
குறைக்கண் ணாகி யுட்குத்திக் கொடுத்த தண்ணீர் செல்லாதே
மறுத்து நெஞ்சு மடைத்துலர்ந்து மயங்கிக் குத்திச் சோகிக்கில்
மறைத்தே மரண மூண்டெனுங்காண் மருவுஞ் சன்னி யுட்குத்தே

வன்மத் தானத் தனிற்புண்ணில் வயிற்றி னுளின் மந்தத்தில்
கன்மத் திடறி விழுந்துடத்திற் கழுத்துப் பிடரி பெருவீக்கத்
தன்மத் தோடா விலாவிடத்திற் சார்ந்தே வாதஞ் சன்னிகண்டால்
புன்மை மரணங் காட்டுவிக்கும் பொல்லா வீச்சி னுட்குத்தே

மூன்றேறெழொன்பான்பன்னிரண்டின் முடித்திடாதே தனுட்குத்தே
ஆன்ற விதர தைலமுட னடுத்த மாவி லங்கமெண்ணெய்
ஊன்றப் பொருத்தி யுள்ளருத்த வட்குத் துடனே வாதசன்னி
தோன்று தகறு மெனமுனிவர் சொன்னு ரிதனைச் செய்வீரே

## இரசதைலம்

இரசங் கெந்தகம் வெள்ளுள்ளி யியல்பாந் தாரிசு சேங்கொட்டை
அரிதா ரத்துடன் மனோசிலையு மான கருஞ்சீ ரகர்வெளுத்தல்
சாத முறவொன் றிருகழஞ்சு சாந்தா யரைத்துச் சீலைதனில்
உரிதாய்ப் பூசி யுலர்த்தியபி னுடனே கதிரிற் சுருட்டிடுமே ௨௪௧

இடுமேதிரியிற் றெரிவெண்ணெயிதமாய்வார்த் திட்டெரித்துடனே
கொடுமே யுள்ளு மெய்முழுதுங் குத்திற்பூசிப்பொருத்திநன்றாய்
விடுமே வாங்க லுட்குத்து விறைப்புச் சன்னி வாங்கலுமே
கெடுமே யிஞ்சி முலைப்பாறென்கிடைத்தாலுள்ளுங்கொடுப்பீரே

## சின்னமாவிலங்கமெண்ணெய்

சின்னமா விலங்கையினி லெண்ணெய் சொல்வன்
    செழுமுருங்கை மாவிலங்கை வேரிற்பட்டை
இன்னமுங்கேள் கொடிவேலி வேருங் கூட்டி
    யிடித்துநீர் விட்டெரித்தே யெட்டொன் றாக்கிச்
சொன்னசிறு தேக்குடனே தேவ தாரஞ்
    சோமனுப்புச் சூதபிரு வேலி சந்தம்
வன்னமுறு கஸ்தூரி மஞ்சள் குப்பை
    வருலாமிச் சொருகழஞ்சு வகைக்குக் கொள்ளே ௨௪௩

கொள்ளுவது பசுப்பானல் லெண்ணெய் தானுங்
    குலவவே சமன்கலந்து சரக்கை யெல்லாம்
மெள்ளவரைத் துடன்கரைத்து முந்த வேரும்
    வெந்திடுநீ ரொக்கவிட்டுப் பதத்திற் காய்ச்சி
உள்ளபடி யேவடிகொண் டடம்பிற் பூசி
    யுச்சியிலும் பொருந்தியுள்ளுங் கொள்வீ ராகில்

துள்ளவரு முட்குத்துப் பிறவீச் சோடு
தொருத்தசன்னி பாதசுரந் தொலைந்து போமே ௨௪௪

## மாவிலங்க மெண்ணெய்

மாவிலங்கை வேரிலையோ ரொன்றுபலம் பத்து
வருமுவாய் கொடுவேலி வாதத்தை யடக்கி
காவிலங்கு பெருங்குருந்து முருங்கைநொச்சி கான்றை
கருதுகின்ற தொருசிவதை யுத்தமா காணி
பூவிலங்கு வேரிலையோ ரொன்றுபல மொன்றாய்ப்
பொடியாக்கி யிருதுணி நீரெட்டி லொன்றாய்ப்
பாவிலங்கக் காய்ச்சிவடித் தங்கதிலே மேலும்
பரிவுடனே சரக்கரைத்துக் கரைப்பதெனப் பகரே

பகர்வதினித் திப்பிலிகற் பெருங்காயம் வெளுத்தல்
பாங்காக மூக்கழஞ்சு கடுகுசுக்கு மிளகு
வகையொன்று பலமாகுங் கோட்டமீ ராத்தை
வாலுளுவை கார்புகாக் கராம்புகடு ரோணி
தொகையொன்று கழஞ்சாக வெள்ளெண்ணெ யிம்பந்
தொடுதயில மொருநாழி யாகவதை கூட்டி
மிகவொன்றி யிடுதயில நாலுநாட் காய்ச்சி
மேன்மைபெற மெழுகுபதந் தன்னில்வடித் தெடுமே

இச்செய்யுளின் இரண்டாமடியில் கள்ளி ஒருபலம் கூட்டி என்று எழுதப்பட்டிருக்கிறது; செய்யுளும் பிழைபடுகின்றது; செய்வோர் ஆராய்ந்துசெய்க. "கள்ளி" என்பதற்குப் பதில் உள்ளியென்றும் இருக்கக்கூடும்.

வடித்தே மெழுகு பதமானால் வாகாய்க் கலசந் தனிலடைத்து
முடித்த கூந்தன் மடமானே முன்னே தயிலங் காசிடைகொள்
பிடித்த வாய்வு முட்குத்துப் பிறவீச் சுடனே திமிர்விறைப்பு
நொடிக்குமுன்னே தீருமென்று நுவன்றார் பலநூல் வல்லோரே

## முக்கூட்டி லெண்ணெய்

குதிரைவாலி, கொடுவேலி, பிரண்டை, கான்றை, கள்ளி, ஆதண்டை, மதுமத்தை இவைவேர்; நிலவேர், உள்ளி, வசம்பு,

கொத்தோட்டை

பெருங்காயம், சுக்கு, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், வெளுத்தற்பிசின்; சரக்குவேர் எல்லாம் சமன்கொண்டு இடித்தரைத்து நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய் மூன்றும் சமன்கலந்து அதிற் கரைத்துக்காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து உள்ளும்கொடுத்து மேலும்பூசிப் புகைவிடவும். இந்த எண்ணெயில் திரிநனைத்துக் கொளுத்தி அந்தப்புகை காட்டவும். உட்குத்துப் பிறவிச்சு வலி திமிர் விறைப்புமுதலியன தீரும்.

## இரட்சை

உச்சியிற்புள் ளடிபிடரி பிறைக்கால்தா ளுரு
    மூவந்த கைகா ளடுமுதுகு பரண்டையின்மேற் கணைக்கால்
மெச்சியகண் ணிமைநெற்றி மேன்மார்பு தொப்பூழ்
    விளங்கியதோர் பரண்டையின்மே லுள்வளநால் விரன்மேல்
அச்சமறக் கதிர்வளைத்து விளக்கினிலே காய்ச்சி
    யளவிரண்டங் குலகீள மாகவுமே சுட்டு
நச்சியசீ ரெருக்கலம்பா லளவுபெறச் சேர்த்து
    நாளுமத்தித் திடக்குத்து மாறிவிடுங் காணே உசஅ

## ஒற்றப்பிடிக்க

மாவிலங்கை கான்றைநொச்சி வாதங் கொல்லி
    வலியெருக்குப் பெருமருந்து சமூலங் கூட்டித்
தாவிலொன்று யிடித்தவித்துப் பிடிக்கி லொன்றுந்
    தவறில்லை வாங்கல்குத்து வீச்சுச் சன்னி
நாவிறைப்புப் பற்கிட்டு வளைப்பு வாங்கல்
    நடுக்கமுடன் குத்துவலி வேர்வை தொய்வு
தேவிலங்கு கதிரவன்முன் பனியே போலத்
    தீர்ந்துவிடு மெனமுனிவர் செப்பினரே உசகூ

:

## தைலம்

காணுகின்ற வுட்குத்துப் பிறவிச் சுக்குக்
    கருதுநக முளைமரத்தின் *காளான் றுனும்

---

*காளான் - கு - ள்ளன் அம்பாடம் இரசகர்பூரம்

பூணுநிம்பப் பருப்பாத்தை பூமி நாகம்
　　பொருந்துமுயிற் றண்டமுட னக்க ருவும்
பேணுமிவை சமனுகக் கையான் சாறு
　　பெய்தரைத்து நிம்பெண்ணெய் தன்னிற் காய்ச்சி
மாணுறவே பொருத்தியுள்ளுங் கொள்வி ராகின்
　　மாறுமெனத் தமிழ்முனிவன் வகுத்த வாறே ௨௫0

## வேது

மேவுதிரி புரமெரித்தான் மிளகு பாண்டன்
　　மிருதுவிடு கற்றுழை மடல்மின் னுக்கும்
ஆவுறுபால் சினியிவை சேரக் கூட்டி
　　யப்புவிட்டே யவித்ததனை வேதுவிட்டால்
தாவறுமுட் குத்துடனே சன்னி வாதந்
　　தவிர்தலுண்மை பிறவிச்சுத் தானுந் தீரும்
பாவுறுநற் கலைபுணர்ந்தோ ருநதி யாகப்
　　பகர்ந்தனரா மிதுதெரிந்து பாரு ளோர்க்கே ௨௫௧

## உள்ளுக்குமருந்து

மூசுற்று முட்டை பூனை முக்கிரி கைக்கனி பேரிஞ்சு
பசித்தோர் செப்பு மிளகுள்ளி பழருஞ் சந்தம் பூசினிப்பூ
முசித்தே பூனு முருக்குவித்து முதிர்ந்த கலையின் கொம்பதுவும்
நசுக்கிக் கொடுக்க முலைப்பாலி னன்றுய்த் திரு முட்குத்தே ௨௫௨

## உள்ளிக்குளிகை

மாவிலங்கை புவாய்கான் றை யவுரியின் னு முத்த
　　மாகாணி பெருமருந்தோ டாமுறியிங் கிவைவேர்
மேவுமுருக் கழிஞ்சில்புங்கு முருங்கைமாச் சில்லு
　　மிகுபருப்பிங் கிவைசமமாங் கொடிக்கழன்மெய் வகுளம்
தாவுபருப் பிருகூறு கொண்டுதிரி கடுகு
　　தருமிந்துப் புடன்றுரிசு கடுகுபே ராத்தை
காவயல்வா லுளுவையக் காவுடனே ருடன்
　　கர்ப்பூரங் கார்புகா வரிசியுடன் கடுக்காய் ௨௫௩

காந்தஞ் சருஞ்சீ ரகம்வெண்மை கதித்த வுள்ளி சமனுங்கொண்
டாய்ந்த வுத்த மாணிச்சாற் றரைத்தே யிலந்தை விரையளவு
வாய்ந்த வுண்டை *யங்காயந் தன்னில் வெந்நீர் தனிலிடத்தான்
எய்ந்த வுட்குத் துடன்பிறவிச் செடுத்த சன்னி யிவைதீரும் உ௫௪

## வாயுக்குடோரிக் குளிகை

தீராதேநற் கொன்றைபுங்கு கொடிக்கழன்மூக் கறைச்சி
சிவனார்வேம் பரமுநிநன் ஞரிகிலு கிலுப்பை
கார்சேரு மவுரிநத்தைச் சூரிதூ துவளை
களப்பன்னை புத்தமா காணிசெங்கத் தாரி
தார்சேரு மெருக்கோடு [0]கொலட்டக்கி துளசி
சாரணையி சுரமூலி [⊙]பரிவாலி வெள்வேல்
தூர்சேருங் குறிஞ்சாக நாயுருவி யாடா
தோடைநந்தி யாவர்த்தம் வட்டுவேர் கூட்டே உ௫௫

கூட்டுநொச்சி யுவாய்கான்றை மாவிலங்கை யிலைவேர்
கொள்கதயிர் வளைகுப்பை மேனிமுடி தும்பை
ஈட்டுமிவை யிலைமட்டே கொண்டுவசம் புள்ளி
யிந்துப்புத் திரிகடுகு சதகுப்பை கடுக்காய்
காட்டுமிரு சீரகம்வா லுளுவைகொத்த மல்லி
கார்புகா வெட்பாலை விழாலரிசி யோடே
சூட்டுமுலு வாநெல்லி வெளுத்தலச மோதந்
துரிசெல மக்கரு மரமஞ்சள் கடுகே உ௫௬

கடுகுரோ கணிவள்ளிக் கண்டமங்க தில்வேர்
காட்டுமத ரூபியுறு கண்டமிவை யெல்லாம்
பொடியாக வுத்தமா காணிவரு சாற்றாற்
பொருந்தவரை முன்போல வுண்டையது செய்தே
படிமேவு நிப்பவெண்ணெய் தன்னிலே யிட்டுப்
பகருநோ வுற்றவிட மீதுதளஞ் செய்யில்

---

*ஙங்காயம்-என்றும்பாடம் ஐங்காயமாவன-கடுகு, உள்ளி, மிளகு, சுக்கு, பெருங்காயம்.

[0]கொலட்டக்கி-வாதமடக்கி [⊙]பரிவாலி குதிரைவாலி

கொடி தான வுட்குத்துப் பிறவிச்சு வலியுங்
கூறுசன்னி மூவாறுங் குலைந்துவிடுங் காணே உ௫எ

## இலைக்கள்ளிக்குளிகை

இரசம், கெந்தகம், அரிதாரம், துரிசு, சாதிலிங்கம், கெவுரிபாஷாணம், வெள்ளைப்பாஷாணம், சிவந்தபாஷாணம், தொட்டிப்பாஷாணம், மனோசிலை, சோமநாதி, வச்சநாவி, துத்தம், கேர்வாளம், வகை-கழஞ்சு-க. இலைக்கள்ளிச் சாற்றாலரைத்துக் கயிறுசெய்து நிழலுலர்த்தி, இலைக்கள்ளிச்சாற்றில் மத்தித்துப் பூச உட்குத்துப் பிறவிச்சு முதலியன தீரும்.

## முருங்கைவேர்க்காயம்

சாரணைக்கிழங்கு, கோரைக்கிழங்கு, நன்னாரி, உள்ளி, மிளகு, பெருங்காயம், சுக்கு, திப்பிலி, வெளுத்தநற்பிசின், கடுக்காய், இந்துப்பு, உலுவா, சமன்கூட்டியரைத்து முருங்கை வேர்ச்சாறும் முலைப்பாலுங் கூட்டிக் காயங்காச்சிக் கொடுக்க உட்குத்துப் பிறவிச்சுமாறும்.

பெருங்காயஞ் சுக்குக் குருக்கத்தி யின்விரை பிச்சிமொட்டு
மருங்க வதிமதுரம் பனைவேர் சிற்றமட்டி கெய்யோ
டிருங்காவின் மாவலர் கோரோ சனைபசுப் பாலெனவே
தருங்காத லானமன் வந்தாலுந் தோன்றிக்குச் சாவில்லையே

இச்செய்யுளின் முதலில் தில்லம்பால் என்று சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது; அதுவும் இம்மருந்துக்குச் சேர்வது போலும்; மருந்தின்பெயர், பாகம் முதலியன குறிக்கப்படவில்லை.

## இரசதைலம்

உரமே குத்துப் பிறவிச்சு முடனே குத்தி யுரம்பண்ணில்
இரசங் கெந்தி வெள்ளுள்ளி யியல்பா மிரிசு சேங்கொட்டை
சரச முறவே யாவெண்ணெய் தன்னோ டொக்க வரைத்தெடுத்துக்
கரவா துடனே கலைசுருட்டிக் கனலிற் பூசித் தைலமெடே உ௫கூ

எடுமே தைலங் காசிடைகொ ளிஞ்சிச்சாறு முலைப்பால்தேன்
உடனேயுள்ளேகொள்ளுதுவுமுத்தால்வேம்பினெண்ணெயுடன்
இடவே கலந்து தானங்க ளெங்கும் பொருத்த லாமென்று
திடமாய் முனிவன் றேர்ந்துரைத்த செய்தி யறிந்துகொள்வீரே

## ஒற்று

நன்னிய வெருக்கு நொச்சி நலமுறு குப்பை கான்றை
உன்னிய மாவி லங்கை யுவாயுடன் கொடிக்க ழற்சி
மன்னுசா ரணையி னோடே யாமுறி சமூல மொக்கத்
திண்ணென வேர்க ளோடித் திடமுடன் சரக்குக் கூட்டே ௨௯௧

கூட்டே வசம்பு திப்பிலிவேர்க் கொம்பி னுடனே பேராத்தை
நாட்டே வெளுத்த வீருள்ளி நலஞ்சேர் மிளகு கடுகதுவும்
காட்டே வெள்ளை வெண்காயங் கருஞ்சீரக மோன் றிருகழஞ்சு
போட்டேயுத்த மாகாணி பொருந்துஞ் சாறு விட்டரையே ௨௯௨

அரைத்தே சாந்து போலத்தா னடைவி னுடனே கொதிப்பித்து
நிரைத்தாற் சன்னிக் கனப்புவிடு நேர்ந்த திமிருந் தீர்ந்துவிடும்
உரத்த குத்துப் பிறவிச்ச முலைக்குங் கூத விவையெல்லாம்
சிரத்திற் றப்பி மேற்பூசத் தீர்ந்து போகுந் திடமாயே ௨௯௩

## இதுவுமது

மயிலடிக் குருந்தே யுத்த மாகாணி மாவி லங்கை
பயிலெருக் குடன்காற் றோட்டி பருவசம் புள்ளி யொக்க
அயிலுறக் கிளியாய்க் கட்டி யவித்துநல் லொற்றப் போட
இயலுமுட் குத்தி னோடு பிறவிச்சு மேகு மன்றே ௨௯௪

வாதமடக்கி, எருக்கு, மாவிலங்கை, மயிலடிக்குருந்து, நொச்சி ஆடாதோடை, காணைப்பாவட்டை, குப்பினாய், பருத்தி, உத்தமாகாணி இவையெல்லாமிடித்துப் பொட்டளிகட்டி அவித்து ஒற்றிட உட்குத்துப் பிறவிச்சு, வாதம், சன்னி, விறைப்பு, திமிர் குத்துளைவு எல்லாம் தீரும்,

பூனைக்கழற்சிப்பருப்பு, சுக்கு, தேங்காய், பருத்திப்பிலை இவைதுவைத்து அவித்து ஒற்றிடவும்.

### காயம்

சாரணை, கான்றை, உவாய், மாவிலங்கை, அரமுறி, ஈசுரமூலி, நொச்சி இவையெல்லாம் சமூலம் சமநிறையிடித்துத் தூளாக்கி; திரிகடுகு, இருசீரகம், வெள்ளுள்ளி, உலுவா, மல்லி, வெளுத் தற்பிசின், ஓமம், பெருங்காயம் இவை சமன் கூட்டிக் காயங்காய்ச் சிக்கொடுக்க உட்குத்துப் பிறவீச்சுமாறும்

## பிடரிவலிபிறவீச்சின்குணம்

பிடரி வலித்து நோமிருந்து பேரப் பிரிய வொண்ணுமல்
உடனே மயக்கித் தலைகளக்கு முடனே நடுக்குந் திமிருண்டாம்
விடமே மிகுந்த வதுபோல மேனி வாளு நாடோறும்
இடரே பண்ணும் பிடரிவலி யிதுவும் பிறவீச்செனலாமே உகூ௬

## சிகிச்சை

### தைலம்

நாயுருவி யுடனத்தைச் சூரிகொடு வேலி
கல்லெருக்கு வெள்வேல்சா ரணைவீழி முல்லை
ஏயுமா தண்டைமுத்த நன்னாரி வில்வ
மிசைந்தசே வகன்பூடு தூதுவளை யின்னம்
பாயவோ ரிதழ்வின்ச பீசுவா மூலி
பண்புடைய புங்குவிரை மஞ்சள்வசம் புள்ளி
ஆயதிரி கடுகோமம் வெண்காரங் கெந்தி
யதிமதுர நேர்வாள முடன்கோட்ட நெல்லி உகூகூ

கடுகுபூச் சர்க்கரைவெண் பிசினிவைக ளெல்லாங்
கழஞ்சொன்று பொடிசெய்து நல்லெண்ணெய் நறுநெய்
கடியகிம் பெண்ணெய்சிற் றுமணக்கி னெண்ணெய்
கலந்துவடித் திடுநோர முள்ளியுட னுமுந்தும்
மடியின்றி வகையொன்று பலமாகக் கூட்டி
வடித்தெடுத்த தைலமது வெச்செனவிற் பூசும்
படிநிம்ப முறுபட்டை வேதுவிடின் மாறும்
பகர்ந்தவலி பிறவீச்சு முட்குத்து மாமே உகூஎ

## புன்னைவேர்க்குளிகை

புன்னைவேர் தன்னை வெட்டிப் பொருந்தவே யவித்த நீரில்
மன்னுயர் கோட்டஞ் சுக்கு மணமுறு சந்த முள்ளி
வன்னமா ருசிக் காந்தம் வகுத்ததிப் பிலியிக் துப்புத்
தன்னொடு முத்தக் காசு சமனிறை கூட்டி யாட்டே ௨௬௮

ஆட்டியே தூநின் காயி னளவுநல் லுண்டை கட்டி
வாட்டுமுட் குத்தி னோடு வருபிற வீச்சுக் கெல்லாம்
ஏட்டினிற் சொன்ன வண்ண மிஞ்சிதேன் முலைப்பா றம்மில்
கூட்டியே கொடுக்க நன்றாங் கூறுவன் சூத நாதன் ௨௬௯

## சூதநாத உண்டை

சூதமு நாவி தானுஞ் சொல்லிய வெள்ளை யோடு
தீதறு சாதி லிங்கஞ் சேரரை பொடியும் பின்னை
ஓதுதீ முறுக வெல்லா மொன்றெரு கழஞ்சு கூட்டி
ஏதக லிஞ்சிச் சாற்றி லிருசாம மரைத் துருட்டே ௨௭0

அரைத்ததைப் பயறு போல வாகவே யுருட்டிக் கொண்டு
விரைத்திடு முள்ளி தன்னின் மேதரு தைலத் திட்டால்
உரைத்திடு சன்னி மூவா றட்குத்துப் பிறவிச் சோடு
பெருத்திடு வாத மையம் பிறவலி யாவும் போமே ௨௭௧

தானே கான்றை கன்முரிசு தருகாற் றோட்டி பன்னை நொச்சி
தேனே மஞ்ஞை யுடன் முருங்கை செப்புந் தோடை பெருங்காயங்
காணைப் வசம்பு வெள்ளுள்ளி கடுகு சுக்குச் சமனரைத்து
மானே பூச வுட்குத்தும் பிறவிச் சதுவு மாறிடுமே

### இதுவுமது

எருமை நாக்கி மயிலடிக் குருந்துவே
ரொழுந்த துத்துமக் கொத்தான் முருங்கைவேர்
கரிய நொச்சி காற்றோட்டி கழற்சிவேர்
கான்றை வேருடன் பூமத்தின் வேருமாய்

அரிய கன்முறி சோட்டா தோடைவே
யருந்து முத்தமா காணா ரத்தையும்
பொருத வைத்துக் கொதிப் பித்துப் பூசிடப்
பொருது முட்டுத்துப் போவது திண்ணமே ௨௭௩

## எருக்கலம்வேர்த்தயிலம்

எருக்கலம்வேர்ச்சாறு படி-௪. பருத்தியிலைச்சாறு, நொச்சியிலைச்சாறு எலுமிச்சம்புளி, நல்லெண்ணெய் வகை-படி-௨. அரமுறி, அவுரி, மலைதாங்கி, நன்னாரி, கோவை, இன்பூறல், யார், சாரணை, கிலுகிலுப்பை, எருக்கலை, தோடை, எலுமிச்சை, முருங்கை, நாயுருவி, சிற்றாமணக்கு, காந்திநாயனை, சன்னிநாயன் குதிரைவாலி, இருவேலி, இலாமிச்சு, உத்தமா காணி, செப்புநெருஞ்சி, கொச்சு, கொடிவேலி, திராய், உவாய், காற்றேருட்டி, கன்முரிசு, களப்பன்னை, பேரமட்டி, சிற்றாமட்டி, செங்கத்தாரி தூதுவளை வாதமடக்கி, பெருமருந்து, பருத்தி இவையெல்லாம் வேர் வகைக்குப்பலம்-க. சீவிபுத்துத் தூணிநீர் எட்டொன்றாய் வற்றவைத்துப் பிழிந்த நீர்-படி-௨. எல்லாம் ஒன்றாய்க்கலந்து காய்ச்சி வலம், மல்லி, பச்சிலை, கச்சோலம், மாஞ்சில், வெட்பாலை, சிறுமூலம், மாமஞ்சள், செவ்வியம், சன்னிநாயன், வெளுதகற்பிசன், ஈரத்தை, கடுகுரோகணி, இந்துப்பு, மாயாக்காய், மதூரம், ஓமம், சிறுநாகம்பூ, செண்பகப்பூ, சாதிக்காய், காம்பு, வசுவாசி, சுக்கு, தேவதாரம், சதகுப்பை, திப்பிலி, திப்பிலிமூலம், உள்ளி விழாலரிசி, சிறுதேக்கு, வசம்பு, இலவங்கம், இலவங்கபத்திரி வகை-கழஞ்சு-௨ இடித்தரைத்துக் கலக்கி எட்டுநாளூறவிட்டுக் காய்ச்சி மறுநாள் மெழுகுபதத்தில் வடித்து தலைக்குமவைத்து மேலும்பூசி உள்ளும் தின்றுவர உட்குத்துப் பிறவிச்சு நடுக்கம் சுழற்சி திமிர் விறைப்பு சன்னி 18, கபாலசன்னி, வெடிசன்னி முகவாதசன்னி, அக்கரவாயு முதல் 64-வாயுவும் கிறுகிறுப்புக் கைகால்சோரும் வியாதிகளும் தீரும்.

சன்னிரோக நிதானம் முற்றிற்று.

ஆருவது

# வலிரோகநிதானம்

—0—

## மந்தவலி

கண்ணிணைச் சொருகி மேலே கடினமாய்ச் சிமிட்டி மூடி
எண்ணமாய்க் கையுங் காலு மிழுத்துடன் குறண்டி வாங்கித்
திண்ணெனச் சரீரநெஞ்சு திடுக்கிட விழுத்துத் தொய்வாம்
பண்ணிகர் மொழியா யீது பகர்மந்த வலியென் றோதே ௧

## அதிமந்தவலி

மந்தித்து வயிறு மூதி வலித்துக்கை குறண்ட வாங்கி
அந்தித்து நாடி பூட்டி யதிகமாய் நுரையுந் தள்ளித்
தொந்தித்து நடுக்கி மிண்டித் துயருற வுதறி வாங்கிச்
சந்தித்துப் பார்க்குங் கண்ணுஞ் சாற்றதி மந்தனாமே ௨

## மோகவலி

காலினை யிழுத்து வாங்கிக் கையினை யுதறி வாங்கி
மேலினை நடுக்கி வாங்கி வேகித்து விழித்துப் பார்த்துச்
சாலவெண் ணுரையுந் தள்ளித் தணிக்கபி னிழுத்து மூசும்
ஆலிது மோகஞ் செய்யு மருவலி யறிந்து கொள்ளே ௩

## அதிமோகவலி

மோகித்து நடுக்கமுண்டாய் முறித்தெடுத் துதறி வாங்கி
வேகித்துக் கண்ணுமேலே விழித்தெவெண் ணுரையுந் தள்ளிச்
சோகித்து மயக்கி யேறித்துயர் செயுங்களை யுண்டாக்கும்
தாகிக்கு மதிமோகஞ் செய்வலி யெனச் சாற்றினாரே ௪

## குமரகண்டவலி

அருத்துகண்டம் விருவிருத்து வாய்நீ ருறி
யடுத்தடுத்து வலித்து நுரையதிகந் தள்ளிப்
பொருந்திமிண்டிக் கையுதறிக் காலும் நீட்டிப்
போதவொரு கடிகைவிட்டு வலித்து வாங்கி

வருந்துவலி மாறியபின் மூன்று நாளும்
வசமழிந்து காலிளைந்து சரீர மோவாம்
திருந்தவிது குமரகண்ட வலிதான் செய்யுந்
தீமையென வாயுண்மறை செப்பு மன்றே ரு

## முயலகண்டவலி

நடுநடுக்கிப் படபடத்து நாடி பூட்டி
நாக்குழறி வெண்ணுரையும் நலியத் தள்ளிக்
கிடுகிடுத்து விழுத்திமுட்டாய் வலித்து மிண்டிக்
கிடந்துசல மலர்பறிவு மறிவில் லாமல்
கடுகடுத்துப் பற்கறித்துக் கடின மாகிக்
களைகளையாய் வேர்த்துடனே மயங்கிச் சோரும்
திடுதிடுத்துக் கையுதறிக் காலும் வாங்குந்
தீராத முயலகண்டன் செய்பு மாறே சு

## பெருவலி

உருமெலிந்து கண்பார்ந்து பூச்சிட் டாப்போ
லுதறிமிண்டிக் கண்பரக்க விழித்துப் பார்க்கும்
வருவலிசற் றெருருநோந் தொருக்கால் விட்டு
வசமழிந்தீ ரைங்கடிகை வந்தே மீளும்
தருவலிவிட் டிரண்டுதினஞ் சரீர மெல்லாம்
தன்வசமற் றிருந்துமெள்ள வெறிபோற் பேசும்
அருவலிசொற் பெருவலிசெய் குணமீ தென்றே
யாயுண்மறை யுரைத்தபடி யறிந்து கொள்ளே எ

## காக்கைவலி

வலித்திடுந் திமிருண்டாகி வருந்திடக் கழுத்தை வாங்கிக்
கெலித்துறக் கத்திக் கத்திக் கிடந்துவெண் ணுரையுந் தள்ளிச்
சலித்திடுங் கையுங் காலுஞ் சடுதியா யுதறி வாங்கிக்
கலித்திடு மயக்கிச் சோருங் காக்கையின் வலிதான் தீரா அ

## குரங்குவலி

கையினை நடுக்கி மிண்டிக் கடினமாய்க் குறண்டி வாங்கி
மெய்யினை யுதறி வேர்த்து விறைத்துட னடிபூட்டி
ஐயினை யெழுப்பிச் சிறி யழுத்திடுங் குரங்குபோல
மைமெயனச் சரண வாத மாந்தத்தில் வலிப தாமே கூ

## கரடிவலி

கத்திடுங் கரடி போலக் கால்கையை யிழுத்து வாங்கிக்
குத்திடுங் கழுத்தை வாங்கிக் குலுக்கியே வலித்து மிண்டி
ஒத்திடு நாடி பூட்டி யுதறிவெண் ணுரையுந் தள்ளி
எய்த்திடு மிதுதா னென்கின் வலிசெயு மிடறுதானே க0

## மரணகண்டவலி

அறிந்துவலி யெனநினைக்கு முன்னர்த்தான் வந்
தவலமாய் விழுத்தி மிண்டிக் குறண்ட வாங்கி
மறிந்துமெதன வடுத்துமுட்டாய் நடுக்கிச் சோர்ந்து
மாறியொரு கடிகைவிட்டு மயக்கி வேர்த்துப்
பிறிந்துவலி விட்டதற்பின் சரீர நொந்து
பேதமாய்க் கடிகைபுரண் டுறக்கம் வாரா
செறிந்திடுமா மரணகண்ட' வலிதான் செய்யுந்
திமைமெயன வாயுண்மறை தெரித்த வாறே கக

## தமரகண்டவலி

நடுக்கிடு முதறி மிண்டி நாடியை விறைந்துப் பூட்டித்
திடுக்கிடும் பரந்து' கண்ணுஞ் சிமிட்டியே விழித்து நோக்கும்
அடுக்குற விட்டு விட்டே யடுத்துடன் வலித்துச் சோரும்
கெடுத்திடுந் தமரகண்ட வலிசெயுங் கேடிதாமே கஉ

## சிறுபிள்ளைவலி

சிறுபிள்ளை வலிதான் செய்யுங் குணத்தினைச் செப்ப வேண்டில்
உறுதியாய்க் கையுங் காலு முளத்தியே குறண்ட வாங்கி

இறுதிபோல் வலித்தி முத்தே யெடுத்துவெண் ணுரையுந் தள்ளும்
அறுதிபோன் மூச்சு முட்டா யயருமென் றுரைக்கும் வேதம்

"குதிரைவலி" கெர்ப்பரோக நிதானத்திற் கண்டுகொள்க

## வலியினியல்பு

வலியெனுங் கூற்று வந்தால் வானவர் தமையுங் கொல்லும்
எலியினை விடுமோ பூனை யெதிர்த்துவாய் வைத்த போது
கலியெனும் வலிதான் வந்து கடினமாய் வலித்து வாங்கில்
நலியவே யெண்ணெய் சூடு நசியங்கள் செய்து பாரே ௧௪

வலிகள் எல்லாவற்றிற்கும் சன்னிரோகநிதானத்திற் கூறிய எண்ணெய், மருந்து, நசியம், அஞ்சனம், சூடு, ஒற்று முதலியனவே அமையும் என்னும் கருத்தால், இங்கு வேறாகச் சிகிச்சை கூறப்படவில்லை. ஆயினும் கைமுறைப்பிரதிகளிற் கண்டனவும் பலரது அனுபவத்திலுள்ளனவுமான சில தைலம் முதலியவற்றை இதன்கீழ்ச் சேர்த்திருக்கின்றோம்

## கொதியெண்ணெய்

தூதுவளை யெருக்கவுரி குதிரையின்றன் வாலி
தூயவெள்வேல் சிறுகுருந்து கொச்சிகொடு வேலி
மீதுவளர் முருங்கைவட்டி னுடனுடா தோடை
மிகுத்தசா ரணைநிலவேர் முசுறுதரு முட்டை
தாதுவளர் திப்பிலிநற் பெருங்காய முள்ளி
தனிமிளகு துரிசுநேர் வாளமுடன் வெளுத்தல்
திதிநெல்லிக் கெந்தகம்வெந் தயங்கடுகு நற்சீர்
சீனக்கா ரஞ்சரக்கொன் றிருகழஞ்சு கொள்ளே ௧௫

கழஞ்சான நிறைவேர்த்தூள் சாக்குத் தூளுங்
சுதிக்கநிம்ப வெண்ணெய் கொத்திற் கொதியிற் றாவி
விளாந்தவெண்ணெய் சிரத்துமுள்ளுங் கொடுத்துப் பூசி
விடுநசிய மஞ்சனமும் விரும்பிச் செய்தே

வலேசந்ததனே யந்திசந்தி மத்திப் பிரேன்
மாகுதிரை வலிபூத சன்னி வாங்கல்
உளேந்தமந்தி மரணகண்டன் கரடி காக்கை
பூறுபூனை முயலகண்ட வலிகள் போமே கசு

## குதிரைவலியிற் பிள்ளைபிறக்கக் காயம்

மேற்கூறிய வேர்த்தூளும் சரக்குத்தூளும் சமநிறை கொண்டு நேர்வாளம் ஐந்துகொட்டை கூட்டியரைத்து தெளிவெண்ணெய் சற்றவிட்டுக் காயங்காய்ச்சிக் கொடுக்கப் பிள்ளை பிறக்கும்

## முக்கூட்டுக் கொதிவெண்ணெய்

மாவிலங்கை, முருங்கை, நொச்சி, பெருமருந்து, உவாய், எருக்கலே, புங்கு சதுரக்கள்ளி, திருகுகள்ளி, தில்லே, சிற்றமட்டி, பேரமட்டி, கருவேம்பு, கழற்சி, வேம்பு, சிவதை, கொடுவேலி, அரமுறி, களப்பன்னே குருந்து, எலுமிச்சை, தோடை, தூதுவளே, கண்டங்கத்தரி, வாதமடக்கி, பெருங்குதிரைவாலி, சன்னிநாயன், மயிலடிக்குருந்து, உத்தமாகாணி, காக்கணங் கொவ்வை, அமுக்கிராய் குத்துக்காற்சம்மட்டி, முருக்கு, சிவனர்வேம்பு, இலுப்பை, காற்றேட்டி, செங்கத்தாரி, பருத்தி, இயங்கு, இருவேலி, இலாமிச்சு, நன்னரி, அவுரி இவையெல்லாம் வேர்; வேப்பிலே, கழற்சியிலே வகை-கழஞ்சு-ச. இருசிரகம், திரிகடுகு, திரிபலே, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, திப்பிலிமூலம், சிறுதேக்கு, உள்ளி, பெருங்காயம், வெளுத்தற்பிசின், கோட்டம், சன்னிநாயன், சாளியா, சராம்பு, வசுவாசி, சாதிக்காய், மஞ்சள், மரமஞ்சள், அகில், தேவதாரு, செஞ்சந்தனம், ஈரரத்தை, நமம், மல்லி, செண்பகப்பூ, சிறுநாகம்பூ, வால்மிளகு, கோட்டம் வெட்பாலே, அப்பிரகம், அபின், அத்தித்திப்பிலி, செண்பகமொட்டு, அதிமதுரம், விழாலரிசி, கச்சோலம், கற்கடகசிங்கி, இந்துப்பு, வசம்பு, கெந்தகம், இரசம், சதகுப்பை, அரிதாரம், மனோசிலே, சாத்திரபேதி, கோரோசனே, இரத்தம், துரிசு, கடல்நுரை, வகை கழஞ்சு-உ. வேருஞ் சரக்கும் வெவ்வேறாக இடித்துத் தூள்

செய்து, நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் வகை-படி-க கலந்து காய்ச்சி வெற்றிலை வெடிக்கும் பதத்திலிறக்கி நீர்மேல்வைத்து இரண்டு தூளும் சமன் கலந்துதூவி வைத்துக்கொள்ளவும். பன்னிரண்டுவலிகளுக்கும், பதினெட்டுச்சன்னிகளுக்கும், எண்பது வாதங்களுக்கும், முப்பத்திரண்டு சூலைகளுக்கும் வியாதியின் பெலனறிந்து பொருத்திப்பூசி, உள்ளுக்குந்தின்று முழுகிவர எல்லாவியாதியுந் தீரும்.

வலிரோக நிதானம் முற்றிற்று

---

ஏழாவது

# விக்கல்ரோகநிதானம்

அக்கர வணிந்த மூர்த்தி யடியிணை வணங்கி யைந்து
விக்கலின் பேர்க ளோடு மிகுகுண மசாத்தி யங்கள்
தக்கநன் மருந்து தானுஞ் சார்ந்திடு மாயுள் வேதம்
தொக்குரை செய்யு மாற்றூற் சொல்லுவ னுணர்ந்து கொள்ளே க

## விக்கலுண்டாவதற்குக்காரணம்

மாறிலாத் தாகத் தாலு மலம்விடா மந்தத் தாலும்
சோறுணிற் புரைசேர்ந் தாலுந் துலையிலா நடையி னாலும்
கூறுமுட் டணத்தி னாலுங் குளிர்ந்தநீர் குடிக்கை யாலும்
மீறிய வகையா யைந்து விக்கல் வந்தெய்து மன்றே உ

## விக்கல் ஐந்தின்பெயர்

அன்னச விக்க லொன்று மானதோர் தமள விக்கல்
பின்னிய குத்ர விக்கல் விளம்புகெம் பீர விக்கல்
மன்னிய மகதி விக்க லென்றுமா னிடருக் கெல்லாம்
இந்நிலந் தன்னில் விக்கற் பேரைந்தும் விளம்பி னாரே ந

## 1-அன்னசவிக்கல்

நெஞ்சலர்ந்து நெஞ்ச நெருங்கி யுடலினைத்தே
அஞ்சவே நாவு மருவருத்து-மிஞ்சிவரும்

மின்னனையி ரிக்குணங்கண் மேவியிருந் தாலெவர்க்கும்
அன்னசமாம் விக்க லறி ௪

அன்னச விக்க லன்ன மருந்திடு நோரந் தன்னில்
மன்னிய புரையி னாலும் வரட்சியாற் றாகத் தாலும்
துன்னிடும் வரட்சி நீங்கிற் றும்மிடி னீர்கு டிக்கில்
பின்னமில் லாம னீங்கும் பேசிய விக்க லன்றே ௫

## 2-தமளவிக்கல்

இருக்கா லொருக்கா லெதிரெடுத்து மெய்யும்
தருக்காய் நடுங்கித் தலைவலித்துப்-பெருக்காக
வற்றிப் பொறுத்தே யெடுக்குமே யாமாகில்
சாற்றுந் தமளவிக்க றான் ௬

## 3-குத்திரவிக்கல்

தெளிவுதேக் கிட்டுத் திரும்பவே நெஞ்சம்
குழியவே யுப்புறைத்துக் கொள்ளும்-ஒளிசேரும்
அத்திரநே ருங்கண் ணணங்கே யதுதானே
குத்திர விக்கற் குணம் ௭

## 4-கெம்பீரவிக்கல்

மெய்யிளைத்து நெஞ்சம் மிகச்சுழித்து விக்கலெடுத்
தையமுறக் கண்ணு மறச்சிவந்து-தொய்யும்
இடையின் மருங்கனைய வேந்திழையே பாகத்
தடையுங்கெம் பீர விக்க லாம் ௮

## 5-மகதிவிக்கல்

மார்புங் குலையும் வலித்து வயிறுருமுகி
ஆர்வமுற மெய்யு மறநடுக்கிச்-சோர்வு
மிகுதிபெறுஞ் சூதமுலை மின்னரசே யீது
மகதிவிக்க லென்றே மதி ௯

## சிகிச்சை

இந்துப் புடனே யிசைந்தநல்ல திப்பிலியும்
தொந்தப் படவரைத்துத் தூளாக்கிச்-சிந்தையுடன்

தேன்விட் டழிவியதைத் தின்னவே விக்கல்நிலை
தான்விட் டகன்றுவிடுந் தான் ௰

சிங்கி சடைமாஞ்சில் சேர்ந்த திரிகடுகோ
டங்கஞ் சிறுதேக் கதினுடனே-துங்கமுள்ள
பூசினிவித் தொக்கப் பொடிசர்க் கரையிலுணக்
காசமுடன் விக்கலறுங் காண் ௧௧

சிந்திற் கொடியுடனே சேர்ந்த நிலவேம்பு
சார்ந்திடவே தண்ணீர் தனிற்போட்டுப்-போந்திடவே
காய்ச்சி யிராக்காலங் காண்குடிக்க வேயமிர்த
வாய்ச்சியரே விக்கல்விடு மாம் ௧௨

திப்பிலியு நெற்பொரியுஞ் சேர்ந்த விருவகையும்
ஒப்புடனே நன்று யுறவுசெய்தே-அப்படியே
பூரணபமாங் கும்பமுலைப் பூவையரே தேனிலுணக்
காரணமாம் விக்கலறுங் காண் ௧௩

ஆமணக்கின் வேரு மதிற்கடலை யின்புளிப்பும்
மாமணக்குங் கஸ்தூரி மஞ்சள்மிள-கேமணக்கும்
மாதளையு மொக்க மருவிவெந்த நீர்குடிக்கத்
தீதளையும் விக்கலறுஞ் செய் ௧௪

மின்னுங் கொடுவேலி வேருடனே செண்பகப்பூப்
பன்னுஞ் சிறுசெண் பகஞ்சுக்கு-மின்னனையாய்
கையிலிடு முப்புங் கலந்துவெந்த நீர்குடிக்க
மெய்யிலுறு விக்கல் விடும் ௧௫

மிக்க கொடுவேலி வேருடனே மின்னையீர்
தக்க வரத்தைமுள்ளி தன்வேரோ-டொக்கவே
சேவகன்பூ டொன்றாய்த் தினங்காய்ந்த நீர்குடிக்கப்
பாவகமாம் விக்கல்விடும் பார் ௧௬

அட்ட திப்பிலி யஞ்சன நெற்பொரி
கட்டித் தேனிற் கலந்து ண்ணா வல்லிராய்

இட்ட விக்க விடருந் தவிர்ந்திடும்
சுட்ட பொன்னிற் சுடரென மாறுமே கஎ

நீடு மாதனை நெற்பொரி சர்க்கரை
தேடு திப்பிலி தேனிற் குழைத்துண்ணப்
பீடை செய்யும் பெருஞ்சத்தி விக்கலும்
ஓட வோடத் துரத்துமி துண்மையே கஅ

திருத்திய வாடா தோடை சேர்ந்தபொன் மெழுகு தூபம்
உருக்கிய பசுவி னெய்யு முறுமனோ சிலையி னோடு
பொருத்திய மயிலின் றோகை கூட்டியே புகைகள் காட்ட
வருத்திய சுரமுங் காய்ச்சல் விக்கலு மாறிப்போமே ககூ

பூசுமஞ்சள் பொன்மெழுகு தேவ தாரம்
பொருந்துமனோ சிலையுமகில் புகலு மாஞ்சில்
வீசுமருக் கிராயதனின் வேரோ டொக்க
விரையவே யாமணக்கஞ் சாறு வார்த்துப்
பாகமுற வரைத்ததனைத் துணியி லூட்டிப்
பற்றியே யத்துணியின் புகையைக் கொண்டால்
வாசமிகுங் குழலாரே சுவாத காசம்
வ ி த்தியிடு விக்கலெல்லா மாறிப் போமே உ0

நெய்யு முலைப்பாலு நேராம் விளக்கெண்ணெய்
மையனைய பூங்குழலே மத்தித்துக்-கையதனுல்
பஞ்சு தனிலூட்டிப் பதமாக நெஞ்சிலிட
மிஞ்சிவரும் விக்கல்போ மே உக

திப்பிலி விளாம்புளி சேர்மனோ சிலை
நெற்பொரி பொடித்துத்தே னெய்யிற் கொண்டிடில்
பற்றிய விக்கல்நம் பரம னார்நகை
சுற்றிய புரமெனத் தொலைந்து போகுமே உஉ

விளாவிலைச்சாறும் தேன் ஒருசிறங்கையும் கலந்து திப்பிலி மேற் பொடியிட்டுக் குடிக்கமாறும்.

விளாவிலையும் நெற்பொரியுங்கிளிகட்டி முகரவும்.

நீர்ப்பாட்டில் விக்கல் சத்திக்கு-பொரிகாரம் எலுமிச்சம்புளி யிற்றோய்த்து ஒற்றிட நெஞ்சிளகும்.

## பெருங்காயநெய்

பெருங்காயம்-கழஞ்சு-௧; வசம்பு-கழஞ்-௨; திப்பிலி-கழஞ்சு-௪; சுக்கு-கழஞ்சு-௮; ஓமம்-கழஞ்சு-௧௬; கடுக்காய்-கழஞ்சு-௩௨; கோட்டம்-கழஞ்சு-௬௪; கருஞ்சீரகம்-கழஞ்சு-௧௨௮; நற்சீரகம்-கழஞ்சு-௨௫௬; இடித்துத் தூள்செய்துகொள்ளவும். பசுநெய்-படி-௧ கொதிப்பித்து வெற்றிலைவெடிக்கும் பதத்தி லிறக்கிச் சரக்குத்தூள்தூவி ஆற்றிக் காண்டிநெய்தின்ன விக்கல், சுவாசம், காசம், இருமல் முதலியன தீரும்.

## மகாசஞ்சீவி மாத்திரை

கெருடபச்சை, முத்தக்காசு, நன்னாரி, கல்நார், சந்தனம், மதுரம், ஏலம், முந்திரிகை, பேரீஞ்சு, தேவதாரம், சாதிக்காய், மாயாக்காய், செண்பகப்பூ, அரத்தை, முள்ளிக்கொட்டை, கோட்டம், சீரகம், வெட்பாலை, மான்கொம்பு, கச்சோலம், மிருகக் கொம்பு, இருவேலி, குங்குமப்பூ, முத்து, பவளம், தங்கம், வெள்ளி, உருத்திராக்கம், மாஞ்சில், பச்சை, செங்கழுநீர், கிளிபூறல், பூசினிவிரை, நாகம்பூ, விளாம்பிசின், கற்கடகசிங்கி, குமஞ்சான், விடயம், கறுவா, காம்பு, சாதிபத்திரி, புனுகு, கோரோசனை, வகை, கழு. ௧. கரும்பு, இளநீர், முலைப்பால் இவைகளால் வகைக்கு ஒருநாளரைத்துப் பின் இலாமிச்சு, இருவேலி, நன்னாரி, கோரை சமன்கூட்டி அவித்தநீரில் ஒருநாளரைத்து பருத்திவிரை யளவுருட்டி நிழலுலர்த்திக்கொள்ளவும். விக்கலுக்கு நாரத்தை, பன்னீர், மாதளம்பழம், இஞ்சி, தேன், முலைப்பால்; சன்னி பாதசுரத்துக்கு இஞ்சி, மிளகு, திப்பிலி; சத்திபுவாந்திக்கு வில் வம்வேர், சீரகம், திப்பிலி, நெற்பொரி; கழிச்சலுக்கு சுக்கு, சாதிக் காய், திப்பிலி, கோரைக்கிழங்கு; சலஅடைப்புக்கு தாளம்வேர், சந்தனம்; இன்னும் குணங்கண்டு அனுபானங்கூட்டிக்கொடுக்கப் பலநோய்கள் தீரும்.

விக்கல்ரோகநிதானம் முற்றிற்று.

# சத்திரோகநிதானம்

அச்சந் தன்னுற் கண்ணீ ற்று லடர்ந்த கிருமி மிகுந்திடலால்
கொச்சைத் திரிதோஷங்களினுற் கோதுமயிருள் விழுங்குகையால்
மெச்சுஞ் சனியின் றோஷத்தான் மிகுந்தவுவாந்தி தோன்றுமென
விச்சைப் பனுவற் கலைவாணர் விரித்தோதியதனை விளம்பினரே க

வாதத்தாலுஞ் சிலேற்பனங்கள் மந்தத்தாலு முவாந்திக்கும்
பேதித் துடலின் மெலிவாலும் பெருகுஞ் சுரங்க டம்மாலும்
நீதிக் குறைநீர்ப் பாட்டாலு நிகரிற் றெய்வ விரோதத்தால்
சோதித் திடுகி லுவாந்தியது தோன்று மெனவே தொகுத்தாரே

## வாதஉவாந்தி, பித்தஉவாந்தி

பெருத்த வாத வுவாந்தியது பெருகு நுரையா நிறங்க றுப்பாம்
உரத்த துவர்ப்பா யெப்பமுமா யுலரு நாவு மிருமலுமாம்
சிரத்தினுடனே தொண்டையுநோஞ் செப்பும் பித்த வுவாந்தியது
வருத்தி நாவும் வரண்டிருக்கு மஞ்சள் பசுமை யிரத்தமுமாம் ங

## சிலேற்பனஉவாந்தி, கண்ணீற்றுவாந்தி

ஆமே யுவர்ப்பும் புளிப்பதுமா யழற்சி காட்டும் வெப்புண்டாம்
தாமேசேற்பவுவாந்தியது தடித்துத் தோன்றுஞ் சுவையினிப்பாம்
தோமே யிருமல் சுவாசமுமாஞ் சோம்பிக்கிடக்குமயிர் சிலிர்க்கும்
காமே வயிறு நொந்திருந்தாற் கண்ணீற் றுவாந்தி கண்டீரே ச

## மருத்தீட்டுஉவாந்தி

மருத்தீட் டுவாந்திமயக்குமுடன் மறுகியினித்தேயுடல்தடிக்கும்
அரித்து வணசில் விழுங் கபத்துக் கறிவு கெட்டு மனந்துவளும்
பெருத்த சனியின் றோஷத்தாற் பேசுமுவாந்தி பலகீறமாம்
உரைத்த வுவாந்தி பலவகையு முணர்ந்தே மருந்து செய்வீரே ரு

## சிகிச்சை

கொத்தமல்லி கூவிளங் குருந்துமட்டி நெற்பொரி
ஒத்தசுக்கு முத்தமோ டுரைத்துநீயு ணக்கினல்

வைத்துநீர் சருக்கரை கலந்துநீர் குடித்திடில்
சத்தியென் னு மந்தநோய் தரிப்பதில்லை யுண்மையே ௬

மேற்கூறிய சரக்குகளை அரைத்துத் தேனிற் குழைத்து நக்கினாலும், கஷாயங் காய்ச்சிச் சர்க்கரை கலந்து குடித்தாலும சத்தி தீரும் என்பது கருத்து.

நாவன்மா நல்லதுளிர் நாரிலா மிச்சம்வேர்
தாவிலா வாலமுகிழ் தானரைத்துக்-காவலால்
தேறுபுன லெட்டொன்றாய்த் தேன்கலந்து தான்குடிக்கில்
மாறுமே சத்தி வகை ௭

பனையினிற் பச்சை யோலை பயறுடன்முத்தக் காசு
வினை தவிர் மல்லி சுக்கு வேண்டுநெற் பொரிநன் ஞரி
துனிதவிர் சிற்றமட்டி சொல்லு நாலொன்றாய்க் காய்ச்சி
இனிய தேனதாவி யுண்க வேகிடுஞ் சத்தி யன்றே ௮

விரியாத தென்னம்பாளையி னல்லி இரண்டு பாக்களவு அரைத்து எலுமிச்சங்காய்ச் சாற்றிற் கலக்கிக் கொடுக்கச் சத்தி தீரும்

விளாவிலை, நெற்பொரி ஏலம் இவை பொடித்து முகந்திருக்கநன்று

காடி. இலந்தையிலை பொன்னாங்காணியிலை இவையரைத்து நெய்யிலாதல் வெண்ணெயிலாதல் குழைத்துக் கீழ்வயிற்றிற் றளமிடச் சத்திதீரும்

இவையன்றி விக்கல்ரோக நிதானத்திற் கூறிய மருந்துகளு மேற்கும்

## சத்திகபாலத்தின்குணம்

மெத்தத் தாத்திமிக மேதினியெல் லாஞ்சுழலும்
குத்திக் கபாலமிகக் கொண்டிருக்கும்-சத்தி
எடுக்குங் கிறுகிறுக்கு மெவ்வலியுந் தீரக்
கடுத்தேகுஞ் சத்திக் கபாலம்

இதற்கு மேற்கூறிய மருந்துகள் இயைவனவாம்

## மருத்தீட்டின்குணம்

மாதர் மயக்கின் மருத்தீட்டில் வந்தே யிருமல் புலாறுறும்
சேத மிகவே பத்தியமுஞ் செரியாதாகி யேப்பமிடும்
வாத மிருமே கடிதடத்தில் வருந்து மிரும லீளையதாய்
நீதி பயில்சேர் சிரமதனி னின்றே மயக்கிக் கொண்டிடுமே

## சிகிச்சை

காட்டுமல்லிகையிலை, பிராயிலை, உத்தமாகாணியிலை இவை சமன் கூட்டி, எல்லாம் கண்ட அளவு மிளகுப்பொடி கூட்டி யரைத்து ஒரு பாக்களவு வீதம் மூன்று நாள் காலையும் மாலையும் ஆறு நேரம் விழுங்கவும்; கொடுவேலிவேர் நெய்யிலரைத்துப் பாலிற் குடிக்கவும்; மஞ்சளும் சீரகமும் ஆமணக்கெண்ணெயிற் குடிக்கவும்; நாயுருவிவேரும் பழ அரைப்புச் சுட்டு அதுவும் அரைத்துச் சிற்றகத்திச் சாற்றிலாதல் சிறுநீரிலாதல் கரைத்து மூன்று நாளைக்குக் கொடுக்கவும். மோரிலே எருக்கலம் பால்விட்டுக் கொடுக்கவும்; குப்பைமேனிச்சாறு ஒருசிறங்கையில் பணவிடை துரிசும்பசுவின் மோருங் கூட்டி வெய்யிலிலே வைத்து எடுத்துக் குடித்துப் பின் வெயிலிலே இருக்கச் சத்தியோடு மருத்தீடு விழும்; பிறகுபால் கொடுக்கவும்; அழிஞ்சில் வேரை அரைத்துக் கொடுக்கவும்; உத்தமாகாணி வேரையரைத்து ஆம ணக்கெண்ணெயிற் கொடுக்கவும்; இந்தவேர் அரிசியுடனரைத்து அப்பஞ்சுட்டு ஆமணக்கெண்ணெய் தோய்த்துத்தின்னவும்.

விடத்தலுடன் மலர்தாங்கி பருத்தி தும்பை
　　மேவுகொடிக் கழன்முருக்கு விளங்குங் குன்றி
அடுத்ததொரு முசுமுசுக்கை யிவைக ளெல்லா
　　மளவாக விலையுலர்த்தித் தூள தாக்கி
எடுத்திதனைச் சாமியரிக் குள்ளே போட்டங்
　　கிடித்துமா வுறட்டியதாய்ச் செய்தே யுண்டால்
வடுத்தயங்கு விழிமடவா ருன்னி யூட்டு
　　மருத்தீட்டின் கோளாறு மாறிப் போமே

சத்திரோகநிதானம் முற்றிற்று.

Dr.

T. K. SIVA... NAM
...ey)
L. ... M ... West
Konda...
KONDAVIL

99 குத்துச்சட்டியில் வெற்றிலை கசக்கிப் பிழிந்த சாறை
ஏழு சொட்டுக்களை பிள்ளைகள் கண்களில் விட்டால்
நீர்வடிந்த கண் குணமாகும்.

99 சக்கை வலிக்கு.
இஞ்சி ~~[illegible]~~ உள்ளி, வெற்றிலைச்சாறு இவை கொண்டு
நிமாத்து தரை 1 குளிகை கொடுக்கவும்.
பிள்ளைகளுக்கு முலைப்பால் கரைத்துவிட்டு
கொடுக்கலாம்.

for children
இஞ்சி உள்ளி முருங்கைப்பட்டை அரைத்து வேப்
பெண்ணெயில் குழைத்து வெற்றிலையில் சூடு
காட்டி பிழிந்த உச்சந்தலை, உள்ளங்
கால் கைகளில் தேய்க்க வலி நீங்கு
ம் ... யும். பாலர்களுக்கு ~~[illegible]~~ குளிகைகொ
டுத்து இதுவும் பூசி குணமாகும் ...

சன்னி சிக்கல் கஞ்சாங் கோரை ... சாறு
நாரி இச்சாற்றில் கொண்டு மாத்திரை கொடுக்க.